# ஊழியர் சேம நிதியம்

# ஆண்டறிக்கை

# 2016

இலங்கையிலுள்ள மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமாக விளங்கும் ஊ.சே.நிதியம் ரூ.1.8 ரில்லியனைத் தாண்டி, மேலும் 2016ஆம் ஆண்டில் அதன் சொத்து மட்டத்தை வளர்ச்சியுறச் செய்து பணித் தரத்தினை முன்னேற்றி அங்கத்தவர்களுக்கு நியாயமான வருவாய்களை வழங்குவதுடன் நிதியப் பாதுகாப்பினையும் தொடர்ந்தும் உறுதிப்படுத்தி வருகிறது. முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,664.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் நிதியத்தின் தேறிய பெறுமதி 10.6 சதவீதம் வளர்ச்சியடைந்து 2016 இறுதியில் ரூ.1,841.5 பில்லியனைப் பதிவுசெய்தது. குறிப்பிட்ட ஆண்டில், நிதியத்தின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்தி, ஊ.சே.நிதியம் அதன் அங்கத்தவர்களுக்கு பயன்மிக்கப் பணிகளை உயர் ஓய்வூதிய நன்மைகளுடன் வழங்கியுள்ளது.

ஊ.சே. நிதியமானது 2016இல் முன்னெப்பொழுதுமில்லாத உயர் முதலீட்டு வருமானமாக ரூ.193 பில்லியன் ரூபாவை ஈட்டி, தனது நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை வெற்றிகரமாக வழிநடத்தியுள்ளது. நிதியத்தின் மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூ.1,772 பில்லியனை அடைந்துள்ளது. சாதகமற்ற பங்குச் சந்தை நிலைமைகள் மற்றும் சந்தை வட்டி வீத ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியிலும் ஊ.சே. நிதியமானது அதன் உறுப்பினர்களுக்கு 10.5 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான வட்டி வருமானத்தினை 2016ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தக் கூடியதாக இருந்தது.

# பொருளடக்கம்

பக்கம்

பகுதி 1

தொலைநோக்கு மற்றும் பணி 105
நாணயச் சபையின் தலைவர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடமிருந்தான செய்தி 106
தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி 108
செயலாற்றத்தின் முக்கிய பண்புகள் 112
தொழிற்பாட்டின் முக்கிய பண்புகள் 114
ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு 116
பொருளாதார மீளாய்வு 118
ஊ.சே. நிதியச் செயலாற்றத்தின் மீளாய்வு 122

பகுதி 2

**நிதியியல் கூற்றுக்கள்**

வருமானம் மற்றும் செலவினக் கூற்று 133
அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று 134
நிதியியல் நிலைமைக் கூற்று 135
பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக் கணக்கு 136
முதலீடுகளின் கூற்று 137
பங்குரிமை மூலதனம்/ உறுப்பினர் செல்வத்தில் ஏற்படும் மாற்றங்களின் கூற்று 138
காசுப்பாய்ச்சல் கூற்று 139

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1 கம்பனித் தகவல்கள் 140
2. கணக்கீட்டின் அடிப்படைகள் 140
3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் 142
4. அறிக்கையிடும் திகதியில் நடைமுறைக்குவராத புதிய நியமங்கள் 150
5. வட்டி வருமானம் 151
6 பங்கிலாப வருமானம் 151
7. நிதியியல் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட மூலதன இலாபம்/ (இழப்பு) 151
8. முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களின் மீதான பதிவழிக்கப்பட்ட இலாபம் 152
9. இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தைப் பெறுமதியில் நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய வருமானம்/ (இழப்பு) 152
10. நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு 152
11. ஏனைய வருமானம் 153
12. தொழிற்பாட்டுச் செலவினம் 153
13. வருமான வரிச் செலவினங்கள் 153
14. விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய இலாப/ (இழப்பு) மாற்றங்கள் 153

15. சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள் 154
16. அருவச் சொத்துக்கள் 157
17. நிதியியல் சொத்துக்கள் - இலாபம் அல்லது இழப்பினூடான சந்தைப் பெறுமதி 157
18. நிதியியல் சொத்துக்கள் - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை 160
19. முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் 164
20. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் 170
21. ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் 170
22. காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் 170
23. கடன் வழங்கியோர் 171
24. ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் 171
25. உறுப்பினர் நிலுவைகள் 171
26. ஒதுக்குகள் 172
27. பெறுகைகள் 173
28. கொடுப்பனவுகள் 174
29. முதலீடுகளின் அசைவு 175
30. நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதிகள் 177
31. நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவ குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் 178
32. சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடுகளின் வகைப்படுத்தல் 181

**கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை** 184

பகுதி 3

**அட்டவணைகள்**

1 முதலீடுகள், முதிர்ச்சிகள் மற்றும் முதலீட்டின் மீதான வருமானம் (1984 - 2016) 309
2 உறுப்பினர் நிலுவைகள் மீதான வருமான வீதங்கள் (1984 - 2016) 310
3 உறுப்பினர் நிலுவைகள், உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி மற்றும் உறுப்பினர் நிலுவைகள் மீதான பயனுறு வீதங்கள் (1984 - 2016) 311
4 முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் கூற்று (1984 - 2016) 312
5 சுருக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் (நாணயச் சபை) (1984 - 2016) 313
6 சுருக்கப்பட்ட வருமானம் கூற்று (1994 - 2016) 315

# எமது தொலைநோக்கு

எமது உறுப்பினர்கள் ஒரு நிறைந்த ஓய்வு கால வாழ்க்கையை வாழச் செய்வதனை இயலச்செய்யும் விதத்தில் இப்பிராந்தியத்தில் மிக அக்கறை கொண்ட ஓய்வுகால நிதியமாகத் திகழச் செய்தல்

# எமது பணி

முன்மதியும் நவீனத்துவமும் கொண்ட முகாமைத்துவத்தினூடாக எமது உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வுகால நன்மைகளையும் வினைத்திறன்மிக்கப் பணிகளையும் வழங்குதல்



# நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கி ஆளுநரிடமிருந்தான செய்தி

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் சார்பில் 2016ஆம் ஆண்டிற்கான ஊழியர் சேம நிதியத்தின் ஆண்டறிக்கைக்கு இச்செய்தியை அனுப்பி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

2016ஆம் ஆண்டுப்பகுதியில் ஊ.சே.நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ.1,668 பில்லியனிலிருந்து 2015இல் ரூ.1,845 பில்லியனுக்கு 11 சதவீதத்தினாலும் மொத்த உறுப்பினர் கணக்குகள் 16.9 மில்லியனிலிருந்து 17.3 மில்லியனுக்கும் அதிகரித்திருக்கிறது. மேலும், நிதியமானது இவ்வாண்டுப் பகுதியில் முதலீட்டிலிருந்து 11.43 சதவீதமான வருவாயினை உருவாக்கக்கூடியதாக இருந்ததன் மூலம் கவர்ச்சிகரமான உறுப்பினர் வருவாயினைப் பெறுகின்ற குறிக்கோள் வெற்றிகரமாக அடையப்பட்டது. இது நிதியம் இரட்டை இலக்க இலாபத்தினைத் தொடர்ந்து உறுப்பினர்களுக்காக 11ஆவது ஆண்டாக பிரகடனப்படுத்துவதனை இயலச்செய்தது. 2016 இற்கான வீதம் 10.5 சதவீதமாக அமைந்து ஆற்றல்வாய்ந்த பெறுபேறுகளை நிதியம் வழங்கக்கூடிய நிலையில் இருந்தமையினைக் காட்டியது.

உறுப்பினர்களின் சொத்துக்களைப் பாதுகாத்தமையின் மூலமும் முன்மதியுடைய விதத்தில் முதலீடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தமையின் மூலமும் அவர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாக இருந்த வேளையில் நிதியமானது தொழிற்பாட்டு நடைமுறைகளின் காத்திரமான தன்மையினை அதிகரித்துக் கொண்டதன் மூலமாக செலவுகளை சிக்கனப்படுத்தக்கூடியதாக இருந்ததன் மூலம் உயர்ந்த வருவாயின் மூலம் உறுப்பினர்கள் நன்மைகளைப் பெற்றுக்கொண்டனர். ஊ.சே.நிதியம் புதிய செயற்றிட்டங்களையும் நடவடிக்கை முறைகளையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதன் உறுப்பினர்களுக்கு பயன்படுத்துநர்-சிநேகபூர்வ பணியினை வழங்குவதற்கான வழியினைத் தொடர்ச்சியாக எதிர்பார்த்து வருகின்றது. இதன்படி, 2016இல் நிதியம் உறுப்பினர்களுக்கு வழங்கிவரும் பணிகளின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது.

எஞ்சியுள்ள முக்கியமானதும் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றதுமான ஆவணங்களை இலத்திரனியல் வடிவத்திற்கு மாற்றுவதற்கான கட்டம் I 2015இல் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டமையினைத் தொடர்ந்து 2016இல் பிம்பப்படுத்தல் ஸ்கானிங் செயற்றிட்டத்தின் கட்டம் II தொடங்கப்பட்டது. இதன்படி, சி3 படிவம் மீள்பதிவு ஆவணங்கள் மற்றும் பணித்தாள் என்பன ஸ்கான் செய்யப்பட்டு டிஜிட்டல் ஆவண முகாமைத்துவ முறைமைக்குள் பதிவேற்றம் செய்யப்பட்டது. ஆவணங்கள் அவர்களது சொந்தக் கணனியிலேயே எந்நேரத்திலும் கிடைப்பதனால் ஊ.சே. நிதிய அலுவலர்கள் உறுப்பினர் பணிகளை விரைவாக வழங்குவதனை இயலச் செய்கிறது.

ஊ.சே.நிதியம் தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் செயன்முறைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தி வருவதன்மூலம் அதன் உறுப்பினர்களுக்கு எப்பொழுதும் மிகச் சிறந்த பணிகளை வழங்கவே எதிர்பார்க்கிறது. ஊ.சே.நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு தரமான பணியினை வழங்குவதற்கு தனியொரு மையப்படுத்தப்பட்ட உறுப்பினர் தரவுத்தளமொன்றினை அமைப்பது முக்கிய முற்தேவைப்பாடாக இருப்பதனை அடையாளம் கண்டிருக்கிறது. இதனை நனவாக்குவதற்காக, ஊ.சே.நிதியம், தற்போதுள்ள உறுப்பினர்களில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை மீள்பதிவு செய்வதன் மூலம் தேசிய அடையாள அட்டையினை அடிப்படையாகக் கொண்ட

தரவுத்தளத்தினை ஏற்படுத்துவதன் மூலம் பிழைகளற்ற ஊ.சே.நிதிய தரவுத் தளத்தினை நிறுவுவதனை நோக்கி தொழிற்பட்டுவருகின்றது. எந்தவொரு செயற்றிட்டத்தினதும் குறிக்கோள்களை உண்மையான தேவை வலியுறுத்தப்படும் போதும் பங்கேற்பாளர்கள் ஆழ்ந்த அனுபவங்களை கொண்டவர்களாகவும் இருக்கும் பொழுது மட்டுமே அடையப்பட முடியும். எனவே, தேவைப்பாடுகளை அடையாளம் காண்பதற்காகவும் அவர்களிடையேயான விழிப்புணர்வினை அதிகரித்துக் கொள்வதற்காகவும் தொடர்பான தொழில்தருநர்கள், ஊழியர்கள், தொடர்பான தொழில்தருநர்களின் நிருவாக அலுவலர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

இலத்திரனியல் தளமொன்றினூடாக ஊ.சே.நிதியக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு வசதியளிப்பதற்காக (மாதாந்த பங்களிப்புக்கள் மற்றும் உறுப்பினர் விபரங்கள்) ஊ.சே.நிதிய திணைக்களம் அதன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை டிஜிட்டல் மயப்படுத்தல் பணிகளுடன் தொடங்கியது. இதன்படி, பங்களிக்கின்ற தொழில்தருநர்களுக்கு கூடியளவு அணுகத்தக்க வசதிகளை வழங்குவதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. அதேநேர வங்கித்தொழில் ஊ.சே.நிதியக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் வசதி, உறுப்பினர் விபரங்களின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் உறுப்பினர் கணக்குகளை இற்றைப்படுத்தல் என்பன மூலம் ஊ.சே.நிதிய ஆர்வலர்களுக்கு நன்மைகளை வழங்குகின்றது. அத்தகைய நன்மைகள் விரைவுபடுத்தப்பட்ட உறுப்பினர் கணக்குகளை அனுப்பி வைத்தல், மனித தவறுகளையும் நிருவாகச் செலவுகளையும் குறைத்தல், காகிதங்களற்ற சூழல் மற்றும் பெருமளவு வெளிப்படையான தன்மை என்பனவற்றை உள்ளடக்குகிறது. தற்பொழுது ஏறத்தாள 80 சதவீதமாக மாதாந்த ஊ.சே.நிதிய பங்களிப்புக்கள் (ஏறத்தாழ ரூ.8 பில்லியன்) இலத்திரனியல் ரீதியாக சேகரிக்கப்படுவதுடன் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களையும் எடுத்துக் காட்டுகிறது.

ஊ.சே.நிதியத்தின் முதலீட்டுக் கொள்கை மற்றும் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளின் உத்வேகம் மற்றும் நன்மதிப்பு அதிகரிப்பதற்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்பட்டது. இது தொடர்பில், ஊ.சே.நிதியம் உலக வங்கியின் உதவியுடனான நிதியியல் துறை நவீன மயப்படுத்தல் செயற்றிட்டத்தினூடாக முதலீட்டு உபாயம் உட்கட்டமைப்பு மற்றும் தொடர்பான நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளை மீளாய்வு செய்து மீளமைத்தல் செயன்முறைகளை ஆரம்பித்திருக்கின்றது. மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக, தீர்வின் பொருத்தமான வடிவமைப்பினைத் தெரிவுசெய்தல், பாரம்பரியப்படுத்தல் என்பனவற்றை விதந்துரைக்கும் பொருட்டும் அனைத்தையுமுள்ளடக்கிய தகவல் தொழில்நுட்ப தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்காகவும் வியாபார செயன்முறை மீளாய்வினை நடத்துவதற்கு தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது. வியாபார செயன்முறை மீளாய்வானது, வினைத்திறனற்ற செயன்முறைகளையும் இரட்டிப்பு வேலைகளை நீக்குவதற்கும், முக்கியத்துவம் வாய்ந்த புதிய செயன்முறைகளையும் கட்டுப்பாடுகளையும் அறிமுகப்படுத்துவதற்கும் அதன்மூலம் ஊ,சே.நிதிய தொழிற்பாடுகளின் பெறுமதிகூட்டல்களுக்கும் உதவும் விதத்தில் ஊ.சே.நிதியத்திற்கு ஆதரவளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ஊ.சே.நிதியம் 17 மில்லியனுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் நாட்டின் மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமாக இருப்பதனால் அதன் உறுப்பினர்களுக்கு சிறந்த பணிகளை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்கு இத்தன்மையினைவான செயற்றிட்டங்களை மேற்கொள்வது இன்றியமையாததாகும். பணி வழங்கலை மேம்படுத்துவதில் கணிசமமான முன்னேற்றங்கள் அடையாளப்பட்டுள்ளன. ஊழியர்களின் அர்ப்பணிப்பும் ஆதரவும் இல்லையெனில் இது சாத்தியமாகியிருக்காது. நாணயச் சபையின் சார்பில் தொழில் திணைக்களத்தின் அலுவலர்களுக்கும், அதேபோன்று இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதிய அலுவலர்களுக்கும் அவர்கள் உறுப்பினர்களுக்கு பணியாற்றுவதில் தொடர்ச்சியாக கொண்டிருந்த கடப்பாட்டிற்காக எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்த விரும்புகின்றேன்.

மேலும், நாணயச் சபை ஊ.சே.நிதிய உறுப்பினர் அனைவருக்கும் அவர்களது வாழ்நாள் காலச் சேமிப்புக்களை முகாமைப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியின் கட்டுக்காப்பின் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்காக அவர்களுக்கு அதன் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது. இதன் உறுப்பினர்களின் பாதுகாப்பானதும் நிறைவானதுமான ஓய்வூகால வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கான மிக உயர்ந்த முன்னுரிமை என்றும் பேணப்படும்.

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி**
ஆளுநர், இலங்கை மத்திய வங்கி,
தலைவர் நாணயச் சபை



# தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி

1958இன் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டமானது ஆயிரமாயிரம் மக்களின் தொழிலுக்குப் பின்னரான பாதுகாப்பான வாழ்க்கையின் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டதாகும். ஊ.சே. நிதியமானது இலங்கையை சுபீட்சத்திற்கு இட்டுச்செல்வதற்கு தமது வாழ்வை அர்ப்பணித்த இலங்கையின் தனியார் துறை மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. இந்நிதியமானது தற்போது பாரிய சமூகப் பாதுகாப்பு நிதியமாகக் காணப்படுகின்றது.

முதலாவதாக, 2016இன் ஊ.சே.நிதியத்தினை அபிவிருத்தி செய்வதற்கான கடமைகளை ஆற்றி, 2016இன் ஊழியர் சேம நிதிய வருடாந்த அறிக்கையை வெளியிடுவது தொடர்பில், இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதிப் பிரிவின் அலுவலர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2016ஆம் ஆண்டில் ஊ.சே.நிதியமானது நிர்வாக மற்றும் முகாமைத்துவப் பகுதிகளில் வெற்றிகரமாகச் செயற்பட்டதுடன், இவ்வாண்டில் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. 2015இல் ஆரம்பிக்கப்பட்ட 30 சதவீத முன் நன்மைகள் திட்டத்தினை விரிவுபடுத்துவதற்காக 2016இல் கிழக்கு, மத்தி, வடக்கு மற்றும் மேற்கு வலயம் - II (களுத்துறை) பகுதிகளுக்கு பன்முகப்படுத்தப்பட்டது. மேலும், குறித்த ஆண்டில் கொடுப்பனவுத் திட்டங்களை வசதிப்படுத்தும் முகமாக விரல் அடையாள முறைமை ஐந்து மாவட்ட அலுவலகங்களில் நிறுவப்பட்டது.

ஊ.சே.நிதி தொடர்பாக அங்கத்தவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள், நடமாடும் சேவை மற்றும் துண்டுப்பிரசுர விநியோகம் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களூடாக மேற்கொள்ளப்பட்டன. ஊ.சே.நிதியமானது இந்நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமாக பொதுமக்களுக்குத் தரமான மற்றும் செயற்றிறனான பணிகளை வழங்குவதில் வெற்றிகண்டுள்ளது.

இலங்கைவாழ் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை சமூகப் பாதுகாப்பினூடாக முன்னேற்றுவதற்கு முயற்சி செய்த இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊ.சே.நிதியப் பிரிவின்

அலுவலர்களுக்கும், தொழில் திணைக்கள அலுவலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊ.சே.நிதியத்தின் ஆண்டு அறிக்கையானது (2016), ஊழியர் மற்றும் தொழில்தருநர் ஆகிய இரு தரப்பினருக்கும், நிர்வாகத்திற்கும் மற்றும் நிதிக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கும், கொள்கை வகுப்பாளர்களுக்கும் மற்றும் மாணவ சமுதாயத்திற்கும் பயன்மிக்கதொரு அறிக்கையாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

**எம்.டி.சி. அமரதுங்க**

தொழில் ஆணையாளர் நாயகம்

# 31.12.2016இல் உள்ளவாறு மூத்த முகாமைத்துவக் குழு

தொழில் திணைக்களம் (ஊ.சே. நிதியப் பிரிவு)

| பெயர் | பதவி | பிரிவு |
|---|---|---|
| திரு. டபிள்யு டி எஸ் சி வெலிவற்ற | தொழில் ஆணையாளர் | |
| திருமதி. பி எச் பி ஜ பண்டார | துணை தொழில் ஆணையாளர் | கோரல் |
| திருமதி. டி எம் எஸ் யு தசநாயக்கா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. டி ஏ எஸ் விஜயசுந்தர | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. பீ ஏ எம் ஏ பாலசூரியா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. ரி எம் லக்மாலி | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. பீ வசந்தன் | துணை தொழில் ஆணையாளர் | அறவிடல் |
| திருமதி. ஆர் எம் ஏ சுகந்திக்கா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. எச் ஆர் ஜே டி குணதிலக | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. ஆர் என் ஏ ஜி எஸ் நவரத்ன | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி டபிள்யு ஏ என் எம் கருணாரத்ன | உதவி தொழில் ஆணையாளர் | 30% கோரல் |
| திருமதி. ஏ ஜி டி ரி கே ஜெயசிங்க | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. ஜே ஏ எம் ஒ விஜேயரத்ன | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. எம் எச் டி எல் ஏ விஜேபாலா | துணை தொழில் ஆணையாளர் | தகல் தொழில்நுட்பம் |
| திருமதி. எம் எஸ் குணதிலக | உதவி தொழில் ஆணையாளர் | நிருவாகம் |
| திருமதி. ஏ கே பேருசிங்க | உதவி தொழில் ஆணையாளர் | இறந்த உறுப்பினர்களின் கோரல் |
| திருமதி. எல் எச் திசநாயக்கா | உதவி தொழில் ஆணையாளர் | மத்திய கோப்புப் பிரிவு |
| திரு. பி டபிள்யு எம் றஞ்சனா | உதவி தொழில் ஆணையாளர் | தகவல் தொடர்பூட்டல்/ வழங்கல்கள் |

இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களம்

| பெயர் | பதவி | பிரிவு |
|---|---|---|
| திருமதி. கே என் என் மல்காந்தி பண்டார | கண்காணிப்பாளர் | கண்காணிப்பாளர்/ ஊ.சே.நி. அலுவலகம் |
| திரு. ஏ ஜி யு திலகரத்ன | மேலதிகக் கண்காணிப்பாளர் | |
| திரு. ஜே டி எஸ் ஜே நாணயக்கார | மேலதிகக் கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் ஏ எல் முத்துகுமார | துணைக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. எம் டபிள்யு கே எஸ் சிறிவர்த்தன | மூத்த உதவிப் பணிப்பாளர் (கம்பனிப் பணிகள்) | |
| திரு. எஸ் டி எச் த எஸ் ஜீவகரத்ன | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | கம்பனிப் பணிகள் மற்றும் நிருவாகப் பிரிவு |
| திரு. எம் எஸ் வித்தானகே | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. பி டபிள்யு விமால் சாந்த | உதவிக் கண்காணிப்பாளர் | சேகரிப்புப் பிரிவு |
| திருமதி. டி டி ஜ பிறண்டிகம்பொல | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. வி கே டம்பாஹலகே | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | மீள்பதிவுப் பிரிவு |
| திருமதி டபிள்யு ஏ எஸ் பி ஜ ஏ ஜெயவர்த்தன | உதவிக் கண்காணிப்பாளர் | |

| | | |
|---|---|---|
| செல்வி ஜி பீ என் ஏ சமரநாயக்க | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | நடைமுறைப் பங்களிப்புப் பிரிவு |
| திரு. கே கே எம் அமரதுங்க | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி ஜி பி டி கவிரத்ன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. பி கே டி பி எஸ் தஸநாயக்கா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. யு ஏ குணவர்த்ன | உதவிக் கண்காணிப்பாளர் | கூற்றுப்படுத்தப்பட்ட பங்களிப்புப் பிரிவு |
| திரு. எஸ் என் விஜயதுங்க | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. டபிள்யு ரி கே பெரேரா | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | இ-சேகரிப்புப் பிரிவு |
| திரு. எம் வி டபிள்யு டி சொயிசா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. டி எல் ரோகினி | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | நிதிய முகாமைத்துவப் பிரிவு |
| திரு. பீ எச் ஐ எஸ் குமார | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. டபிள்யு ஜி ஆர் ஹர்ஷாபிரியா | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. கே யு பீ தென்னக்கோன் | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி ஆர் ஏ சி சி ரூபசிங்க | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி டி பி உடுகமகோறள | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. டபிள்யு ஜி ஏ சி த சில்வா | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. யு பி ஜெயசிங்க | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. ரி ஜெயராஜன் | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | முதலீட்டு இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு |
| திருமதி எம் திஸ்ஸநாயக்கா | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | கணக்குகள் மற்றும் மீளிணக்கப்படுத்தல் பிரிவு |
| செல்வி ஈ ரி டபிள்யு ரி ஆர் பி உடுகும்புற | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. டபிள்யு ஏ டபிள்யு என் வன்னியராச்சி | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. ஏ கே சத்துரங்க | முகாமைத்துவப் பயிலுநர் | |
| செல்வி டபிள்யு ஏ என் டி டயஸ் | முகாமைத்துவப் பயிலுநர் | |
| செல்வி டி வை எஸ் மகாஹெதரவத்த | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | பதிவேட்டு முகாமைத்துவப் பிரிவு |
| திரு. ஏ ரி உபசேன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி சி பி ஜெயவீர | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | பதிவேட்டுத் திருத்தங்கள் பிரிவு |
| திருமதி. கே எம் ஜி சி பண்டார | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. டபிள்யு ஏ சி விஜயசிங்க | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | வீடமைப்புக் கடன் பிரிவு |
| திரு. எஸ் விஜயசிங்க | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | மீளளிப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவு |
| திருமதி. எஸ் ஏ ஜெயவர்த்தன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. பி எச் டி ஏ அத்தநாயக்க | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | மீளளிப்புக் கொடுப்பனவு பிரிவு |
| திருமதி. ஜி ஜி என் எம் பெரேரா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி எல் எஸ் ஹமகே | உதவிக் கண்காணிப்பாளர் | 30% மீளளிப்புக் கொடுப்பனவு பிரிவு |
| திரு. கே ஏ என் எல் ரத்னசேகர | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | பொதுமக்கள் தொடர்புகள், விசாரணைகள் பீடம் மற்றும் அழைப்பு நிலையம் |

# நிதியியலின் முக்கிய பண்புகள்

**அட்டவணை 1** நிதியியலின் முக்கிய பண்புகள் - 2016

| | |
|---|---|
| நிதியத்தின் பெறுமதி | ரூ.1,841.5 பில்லியன் |
| பங்களிப்புக்கள் | ரூ.118,327 மில்லியன் |
| மீளளிப்புக் கொடுப்பனவுகள் | ரூ.108,393 மில்லியன் |
| தேறிய கொடுப்பனவுகள் | ரூ.9,934 மில்லியன் |
| மொத்த வருமானம் | ரூ.193,071 மில்லியன் |
| தொழிற்பாட்டுச் செலவினம் | ரூ.1,487 மில்லியன் |
| வருமான வரி | ரூ.15,657 மில்லியன் |
| தேறிய வருமானம் | ரூ.175,927 மில்லியன் |
| உறுப்பினர் நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி | ரூ.171,557 மில்லியன் |
| உறுப்பினர் நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம் | 10.50% |
| சராசரி சொத்துப்பட்டியலின் மீதான வருவாய் வீதம | 11.43% |
| மொத்த வருமானத்தின் சதவீதமாக தொழிற்பாட்டுச் செலவுகள் | 0.77% |

**வரைபடம் 1** நிதியத்தின் வளர்ச்சி




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மொத்தத் தேறிய சொத்துக்கள் (ரூ.பில்.) | 1,144 | 1,300 | 1,487 | 1,665 | 1,841 |
| வளர்ச்சி வீதம் (%) | 12.4 | 13.6 | 14.4 | 12.0 | 10.6 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2** பங்களிப்புக்கள், மீளளிப்புக்கள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள்




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 70.2 | 80.2 | 90.0 | 102.5 | 118.3 |
| மீளளிப்புக்கள் (ரூ.பில்.) | 48.7 | 50.2 | 65.1 | 77.8 | 108.4 |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 21.5 | 30.0 | 24.9 | 24.7 | 9.9 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 3 உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புக்கள் (மில்.) | 2.3 | 2.4 | 2.4 | 2.6 | 2.6 |
| பங்களிக்காதவர்கள் (மில்.) | 12.3 | 12.8 | 13.4 | 14.3 | 14.7 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 4 முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு




| வகை | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| அரச பிணையங்கள் | 93.6 | 92.5 | 91.2 | 92.7 | 93.1 |
| பங்குரிமை மூலதனம் | 5.4 | 5.8 | 6.7 | 5.5 | 4.6 |
| தொகுதிக் கடன்கள் மற்றும் ஏனையவை | 1.0 | 1.7 | 2.1 | 1.8 | 2.3 |

அரச பிணையங்கள் — பங்குரிமை மூலதனம் — தொகுதிக் கடன்கள் மற்றும் ஏனையவை

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 5 சராசரி முதலீட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வருவாய்




| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டு வருமானம் (ரூ.பில்.) | 121.4 | 136.3 | 163.2 | 171.5 | 192.9 |
| முதலீடு மீதான வருவாய் (%) | 11.6 | 11.5 | 12.1 | 11.3 | 11.4 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 6 உறுப்பினர் நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி




மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 7 உறுப்பினர் நிலுவைகளுக்கான வருவாயின் பயனுறு வீதம் எதிர் சந்தை வீதங்கள்




மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
ஆண்டறிக்கை, இலங்கை மத்திய வங்கி

# தொழிற்பாட்டின் முக்கிய பண்புகள் - 2016

**இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்களம்**

- உறுப்பினர்களுக்கு வருடாந்தம் 10.5 சதவீதமானதொரு வட்டி செலுத்தப்பட்டது.
- உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 17.3 மில்லியனுக்கு அதிகரித்தது.
- பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2.6 மில்லியனுக்கு அதிகரித்தது.
- நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ.1,841 பில்லியனுக்கு அதிகரித்தது.
- 187,149 உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளாக ரூ.108,393 மில்லியன் கொண்ட தொகை செலுத்தப்பட்டது.
- இவ்வாண்டுப்பகுதியில் ஓய்வுபெறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டத்தின் கீழ் 60,021 நன்மைபெறுநர்களுக்கு ரூ.33.7 மில்லியன் செலுத்தப்பட்டது.
- பங்கேற்கின்ற கடன்வழங்கல் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்காக 12,780 உறுப்பினர்களுக்கு அவர்களது ஊ.சே. நிதியக் கணக்கு நிலுவைகளுக்கெதிராக உத்தரவாதச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- முக்கியமான மற்றும் அடிக்கடி பயன்படுத்தும் ஆவணங்களை இலத்திரனியல் மயப்படுத்தும் முகமாக பிம்ப ஸ்கான் செய்யும் செயற்றிட்டத்தின் கட்டம் II அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2016இல் திணைக்களம், பதுளை, மிரிஷா, கஹவத்த மற்றும் பொலநறுவை உள்ளடங்கலாக வேறுபட்ட பிரதேசங்களில் பத்து நடமாடும் பணிகளை வழங்கியுள்ளது.
- 2016ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தேசிய அபிவிருத்தி வங்கி சேகரிக்கும் முகவராக இணைந்துள்ளது.
- 2016 நடுப்பகுதியில் கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சியினால் ஏற்கனவேயுள்ள முறைமையுடன் தரவு சரிபார்ப்பு வசதியினை ஒருங்கிணைத்ததன் பின்னர் அதன் ஊ.சே. நிதிய அதேநேரக் கொடுப்பனவு முறைமையினை மீண்டும் தொடங்கியது.
- இ-கூற்று முறைமையில் பதியப்பட்ட தொழில்தருநரின் எண்ணிக்கை 2015 இறுதியில் 6,093 நபர்களுடன் ஒப்பிடுகையில் 2016 இறுதியில் 6,955 ஆக அதிகரித்துக் காணப்பட்டது.
- 2016 இறுதியில் 1.4 மில்லியன் உறுப்பினர்கள் அவர்களது பெயரை தேசிய அடையாள அட்டையிலுள்ளபடி பதிந்தமையின் மூலம் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தனித்துவமான அடையாள இலக்கமாக ஒதுக்கியுள்ளனர்.

# தொழிற்பாட்டின் முக்கிய பண்புகள் - 2016

**தொழில் திணைக்களம் (ஊ.சே. நிதியப் பிரிவு)**

- 2015இல் ஆரம்பிக்கப்பட்ட 30 சதவீதக் கொடுப்பனவு வசதி கிழக்கு, மத்திய, வடக்கு, ஊவா, மேற்கு வலயம் II (களுத்துறை) அலுவலகங்களுக்குப் பன்முகப்படுத்தப்பட்டது.
- விரல் அடையாளப் பதிவு வசதிகளை 05 மாவட்ட தொழில் அலுவலகங்களில் நிறுவியமை.
- ஊழியர் சேம நிதி தொடர்பாக உறுப்பினர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்காக நடமாடும் பணிச் செயற்பாடுகளை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தியமை மற்றும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தமை.
- தொலைக்காட்சி மற்றும் ஏனைய ஊடகங்கள் மூலமாக பிரச்சார அறிவித்தல்களூடாக பொதுமக்களுக்கு அறிவூட்டப்பட்டமை.

# ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

ஊழியர் சேம நிதியம் (ஊ.சே.நி/நிதியம்) இலங்கையிலுள்ள மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமாக விளங்குகிறது. இது தனியார் மற்றும் அரசுசார் துறைகளிலுள்ள ஊழியர்களுக்கு ஓய்வுகால நன்மைகளை வழங்குவதற்காக 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, தொழில் ஆணையாளர் நிதியத்தின் நிருவாக ஆணையாளராகச் செயற்படுகின்ற வேளையில் நிதியத்தின் கட்டுக்காப்பாளராகச் செயற்படுவதற்கான அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் மூலம் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியத் திணைக்களம் வசதியளிக்கின்றது.

ஊ.சே. நிதியமானது ஒரு கட்டாயப் பங்களிப்பு ஓய்வூதிய நன்மைகள் திட்டமாகும். நிதியத்திற்கான குறைந்தபட்ச கட்டாயப் பங்களிப்பு வீதம் ஊழியர் சேம நிதிய உறுப்பினரின் மொத்த மாதாந்த வருவாயில் 20 சதவீதமாகும். தொழில்தருநர்களும் ஊழியர்களும் (உறுப்பினர்கள்) ஊழியர் சேம நிதியத்திற்கு உறுப்பினர்களின் மொத்த வருவாயில் குறைந்தபட்சம் முறையே 12 சதவீதத்தினையும் 8 சதவீதத்தினையும் பங்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பங்களிப்புக்களையும் ஊழியர் விபரங்களையும் நிதியத்திற்கு காலத்திற்குக் காலம் செலுத்துவது தொழில்தருநரின் பொறுப்பாகும். 50 ஊழியர்களுக்கும் குறைவானவர்களுக்கு தொழில் வழங்கும் தொழில்தருநர்கள் (சி வகை) பங்களிப்புகளையும் தொடர்பான விபரங்களையும் (படிவம் சி) மாதாந்த அடிப்படையில் அனுப்பி வைக்க வேண்டியதுடன் 150 ஊழியர்களுக்கும் கூடுதலானவர்களுக்கு தொழில் வழங்கும் தொழில்தருநர்கள் (சி3 வகை) பங்களிப்புக்களை மாதாந்தமும் தொடர்பான உறுப்பினர் விபரங்களை (படிவம் சி3) ஆண்டிற்கு இரு தடவையும் அனுப்பி வைத்தல் வேண்டும். எனினும், 2012இல் சட்டத்திற்கு செய்யப்பட்ட திருத்தங்களின்படி, குறைந்தபட்சம் 50 ஊழியர்களைக் கொண்டுள்ள தொழில்தருநர்கள் பங்களிப்புக்களையும் உறுப்பினர் விபரங்களையும் இலத்திரனியல் ஊடகத்தினூடாக மாதாந்த அடிப்படையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிதியத்தின் உறுப்பினர்கள் அவர்கள் ஓய்வு பெறும் வயதினை அடைந்ததும் (பெண்கள் 50 வயதினையும் ஆண்கள் 55 வயதினையும்) அவர்களது ஓய்வூதிய நன்மைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவர். ஓய்வு பெறும் போது மீளப் பெற்றுக் கொள்வது தவிர, புலம்பெயர்தல், நிரந்தரமாக ஊனமடைதல், திருமணம் காரணமாக தொழிலிலிருந்து விலகுதல் (பெண் உறுப்பினர்களுக்கு மாத்திரம்) ஓய்வூதியம் பெறத்தக்க தொழில்களில் இணைந்து கொள்ளுதல் போன்ற பல்வேறு காரணங்களின் பொருட்டும் உறுப்பினர்கள் தமது நிலுவைகளை மீளப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர். இறந்த உறுப்பினரின் சட்ட ரீதியான வாரிசுகள் உறுப்பினர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள உரித்துடையவராவர். ஓய்வூதிய நன்மைகளுக்குப் புறம்பாக, ஊ.சே.நிதியம் உறுப்பினர்கள் வீடமைப்பு நோக்கங்களுக்காக உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ள நிலுவைகளை பிணையாக வைத்து, அனுமதிக்கப்பட்ட ஐந்து ஒப்புதலளிக்கப்பட்ட கடன்வழங்கல் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளிக்கின்றது. மேலும், 2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊ.சே. நிதிய (திருத்தச்) சட்டத்தின்படி, 10 ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் பணிபுரிந்து ரூ.300,000 கூடுதலான தொகையினை ஊ.சே.நிதியத்தின் நிலுவையில் வைத்திருக்கும் ஊழியர்கள் 2015இலிருந்து வீடமைப்பு அல்லது மருத்துவச் சிகிச்சை நோக்கங்களுக்காக அவர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையில் 30 சதவீதமான தொகையை மீளப்பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர்

## தொழில் ஆணையாளரின் தொழிற்பாடுகள்

நிதியத்தின் தொழில்தருநர்களையும் உறுப்பினர்களையும் நிதியத்தில் பதிவுசெய்தல்.

ஊ.சே. நிதியச் சட்டத்திற்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதுடன் உறுப்பினர்களின் பங்களிப்புக்களைச் செலுத்தாதவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

தாமதமான பங்களிப்புக்களின் மீது தொழில்தருநர்களிடமிருந்து மேலதிகக் கட்டணங்களை அறவிடல்.

நன்மைகளின் மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளலும் அத்தகைய விண்ணப்பங்கள் தொடர்பாக நன்மைகளின் கொடுப்பனவு பற்றி மத்திய வங்கிக்கு ஆலோசனை வழங்கும் தீர்மானக் கடிதங்களை வழங்குதலும்.

உறுப்பினரொருவரின் முன்னைய கணக்குகளை ஒன்றுசேர்ப்பதற்கு அங்கீகாரமளித்தல்.

உறுப்பினர்கள், அவர்களது உறுப்பினர் நிலுவைகளைப் பிணையாக வைத்து ஒப்புதல் பெற்ற கடன்வழங்கல் நிறுவனங்களிலிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற இயலச்செய்யும் விதத்தில் வீடமைப்புக் கடன்களுக்கு ஒப்புதலளித்தல்.

## இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது தொழிற்பாடுகள்

உறுப்பினர் பங்களிப்பினையும் மேலதிகக் கட்டணங்களையும் வருமானத்தையும் பெற்றுக்கொள்ளுதல்

உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல்.

உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச வருவாய்களை வழங்கும் விதத்தில் மிகையான நிதியங்களை முதலீடு செய்யும் அதேவேளையில் நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.

தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரின் சம்மதத்துடன் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வீதத்தில் உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல்.

ஆண்டுக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் தனியாள் கணக்குகளின் ஆண்டுக் கூற்றுக்களை உறுப்பினர்களுக்கு வழங்குதல்.

தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதத்திற்கிணங்க மீளளிப்பு நன்மைகளை மேற்கொள்ளுதல்.

உறுப்பினர்கள் வீடமைப்புக் கடன்களைப் பெறுவதனை இயலச் செய்யும் விதத்தில் தொடர்பான கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர் நிலுவைகள் தொடர்பான சான்றிதழ் வழங்குதல்.

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலிருந்து 3 மாதங்களுக்குள் மாண்புமிகு தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சருக்கும் நிதி அமைச்சருக்கும் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முதலீட்டுக் கூற்றுக்கள் போன்ற தகவல்களைச் சமர்ப்பித்தல்.

# 1. பொருளாதார மீளாய்வு 2016

## 1.1 பொருளாதார வளர்ச்சி மற்றும் பேரண்டப் பொருளாதார நிலைமைகள்

இலங்கையின் பொருளாதாரம் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் உண்மை நியதிகளில் 4.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. மொ.உ.உற்பத்தியில் 56.5 சதவீதத்திற்கு வகைகூறும் பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள், 2015இன் 5.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016ஆம் ஆண்டுப்பகுதியில் 4.2 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டன. பணிகள் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு நிதியியல் பணி நடவடிக்கைகளில் ஏற்பட்ட உத்வேகம் மிக்க செயலாற்றமே முக்கிய காரணமாகும். மொ.உ.உற்பத்தியில் 26.8 சதவீதத்தினைக் கொண்டிருக்கும் கைத்தொழில் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் 2.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016ஆம் ஆண்டுப்பகுதியில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 6.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த ஆண்டு சுருக்கமடைந்த கட்டடவாக்கத் துறையின் மீட்சியானது கைத்தொழில் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சிக்குப் பங்களித்த அதேவேளை, தயாரிப்புத் துறையின் வளர்ச்சியானது இவ்வாண்டில் குறைந்த வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 4.2 சதவீதத்தால் சுருக்கமடைந்துள்ளதுடன் உண்மை மொ.உ.உற்பத்தியில் அவற்றின் பங்கு 7.1 சதவீதத்திற்குக் குறைவடைந்துள்ளது. பாதகமான காலநிலை நிலைமைகள் வேளாண்மை செயற்திறனில் எதிர்மறையான தாக்கத்தினைச் செலுத்தியுள்ளது.

வரைபடம் 8 உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி




மூலம்: ஆண்டறிக்கை, இலங்கை மத்திய வங்கி

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013=100) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பனவற்றை (2013=100) அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் முதலரைப்பகுதியில் அதிரித்ததுடன் குறைந்த பன்னாட்டுப் பண்டங்களின் விலையின் உதவியுடன் 2016இன் இறுதிப்பகுதியில் உறுதியான நிலைமையை அடைந்தது. வெளிநாட்டுத் துறையில் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக 2.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்த வேளையில் இறக்குமதிகள் மீதான செலவினம் 2015இல் 2.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, 2015இல் மொ.உ.உற்பத்தியில் 10.4 சதவீதமாகக் காணப்பட்ட வர்த்தகப் பற்றாக்குறை 11.2 சதவீதமாக விரிவடைந்துள்ளது. உயர் வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் முதலாந்தர வருமானக் கணக்குகளின் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2016இல் விரிவடைந்துள்ள போதிலும் பணிகள் கணக்கு மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகள் மிகையினைப் பதிவுசெய்துள்ளது. அதிகளவான இறக்குமதி, வெளிநாட்டுக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், அரச பிணையங்களிலிருந்தான வெளிநாட்டு நிதிகளின் வெளிப்பாய்ச்சல் என்பனவற்றைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2016இல் ஸ்ரேலிங் பவுண் தவிர்ந்த ஏனைய பிரதான நாணயங்களுக்கெதிராக ரூபாவின் பெறுமதி தேய்வடைந்தது. இறைத் துறையில் அதிகரித்த அரச வருமானம் மற்றும் அரச செலவின சிக்கனப்படுத்தல் என்பனவற்றின் காரணமாக மொ.உ.உற்பத்தியில் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2015இன் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 5.4 சதவீதத்துக்குக் குறைவடைந்துள்ளது.

## 1.2 பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள்

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவினால் அளவிடப்பட்டவாறான (2013 = 100) பொது விலை மட்டம் 2016ஆம் ஆண்டின் முதலரையாண்டில் அதிகரித்ததுடன் அதன் பின்னர் படிப்படியாக 2016ஆம் ஆண்டு இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்

4.2 சதவீதமாக குறைவடைந்துள்ளது. அதையொத்த போக்கினைத் தொடர்ந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்ட முதன்மைப் பணவீக்கமானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2016 இறுதியில் 4.5 சதவீதமாக வீழ்ச்சியடைய முன்னர், யூலையில் 5.8 சதவீதமாக அதிகரித்தது. ஆண்டு சராசரி அடிப்படையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகியன 2016 சனவரியில் முறையே 2.9 மற்றும் 2.1 சதவீதமாகவிருந்து 2016 இறுதியில் 4.0 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. குறித்த ஆண்டின் பணவீக்க அதிகரிப்பிற்கு உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் அரச வரி மாற்றங்களின் தாக்கங்கள் காரணங்களாக அமைந்தன. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் 2016 சனவரியின் 3.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 திசெம்பரில் 6.7 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் 2016 சனவரியின் 3.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 இறுதியில் 5.8 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

வரைபடம் 9 ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி (கொநுவிசு 2013=100, தேநுவிசு 2013=100) இனை அடிப்படையாகக் கொண்டது)




மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 10 தெரிந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு வைப்பு விகிதத்தின் அசைவு உள்நாட்டு திரவத்தன்மை நிலைமைகளையும், இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களுக்கு செய்யப்பட்ட சீராக்கங்களையும் மிக நெருக்கமாகப் பிரதிபலித்தன. அதன்படி, நாணய இறுக்கமாக்கல் நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மைப் பற்றாக்குறை ஆகியவற்றால் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் திசெம்பர் 2016இல் 8.42 சதவீதத்தால் அதிகரித்ததுடன் அடிப்படைப் புள்ளி 202 ஆக அதிகரித்தது. இலங்கை வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதத்தின் அசைவுகளுக்கு இசைவான விதத்தில் நகர்ந்தது. இதன்படி, ஓரிரவு இலங்கை வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம் 2015 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.40 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 இறுதியில் 8.44 சதவீதமாகக் காணப்பட்டது.

2016இல் வர்த்தக வங்கிகளின் வைப்பு மற்றும் கடன்வழங்கல் வீதங்கள், ஒப்பீட்டு ரீதியில் உயர்வாக விளங்கி சில்லறை வட்டி வீதங்கள் தொடர்பில் மத்திய வங்கியின் ஒப்பீட்டு ரீதியில் இறுக்கமான நாணயக் கொள்கையினைப் பிரதிபலித்தது. வர்த்தக வங்கிகளின் அனைத்து வட்டி உழைக்கும் வைப்பு வீதங்களுடனும், தொடர்பான வட்டி வீதங்களின் அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் 2015இல் 6.20 சதவீதமாகவிருந்து 2016 இறுதியில் 8.17 சதவீதமாகக் காணப்பட்டது. தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் அடிப்படையில் கணிக்கப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் 2015 இறுதியின் 11 சதவீதத்திலிருந்து 2016 இறுதியில் 13.2 சதவீதத்திற்கு 220 அடிப்படைப் புள்ளியினால் அதிகரித்தது. மத்திய வங்கியின் நாணய இறுக்கமாக்கல் வழிமுறைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் 2016 இறுதிப்பகுதியில் மிதமாகக் காணப்பட்டது.

## 1.3 கூலிகள் மற்றும் தொழிலின்மை

2016இல் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.4 சதவீதத்துக்கு சிறிதளவு குறைந்துள்ளது. ஆண், பெண் இருவரினதும் தொழிலின்மை வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது ஒட்டுமொத்த வேலையின்மை வீத வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளது. தொழிலிலுள்ள ஆட்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பானது

கைத்தொழில் துறை மற்றும் பணித் துறைகளில் அவதானிக்கப்பட்ட வேளையில் வேளாண்மைத் துறையில் தொழில்புரிவோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. இதன்படி, வேளாண்மைத் துறை மொத்தத் தொழில்நிலையில் 27.1 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த வேளையில் கைத்தொழில்துறை 26.4 சதவீதத்திற்கும் பணிகள் துறை 46.5 சதவீதத்திற்கும் பங்களித்தன. தனியார் துறை தொழில்நிலை அதிகரித்த வேளையில் இவ்வாண்டுப்பகுதியில் அரச துறையின் தொழில்நிலை மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்காக சென்றவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவுக்கு வீழ்ச்சியடைந்தது.

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கான பெயரளவுக் கூலிகள் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்துள்ளது. 2016ஆம் ஆண்டில் அரச துறை ஊழியர்களுக்கான பெயரளவுக் கூலிகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமைக்கு இடைக்காலப் படிகளில் ஏற்பட்ட ரூ.10,000 அதிகரிப்பு மற்றும் அடிப்படைச் சம்பளத்தில் உள்ளடக்கப்பட்ட இடைக்காலப் படிகளின் ஒரு பகுதியும் காரணமாகும். முறைசார்ந்த தனியார் துறையில் பெயரளவுக் கூலி அதிகரித்தமைக்கு தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டம் மற்றும் அரச வரவுசெலவுத் திட்ட நிவாரண படிகள் என்பன காரணமாக அமைந்துள்ளது.

## 1.4 நாணய மற்றும் இறைக் கொள்கை

நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களில் ஏற்பட்ட வளர்ச்சியின் மூலம் எழுந்த பணவீக்க அழுத்தத்தை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி இறுக்கமான நாணயக் கொள்கையை 2016இல் பின்பற்றியது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் அனைத்து ரூபாய் வைப்புப் பொறுப்புக்களின் நியதி ஒதுக்கு விகிதம் 1.50 வீதத்திலிருந்து 7.50 வீதமாக 2016 சனவரியில் மத்திய வங்கி அதிகரித்துள்ளது. மேலும், 2016 பெப்புருவரியில் மத்திய வங்கி அதன் முக்கிய கொள்கை வட்டி வீதங்களான துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பவற்றை 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 8.0 சதவீதத்திற்கும் அதிகரித்துக் கொண்டது. சந்தை வட்டி வீதம் மேல்நோக்கி சீராக்கப்பட்ட போதிலும் தனியார் துறைக்கான கொடுகடன்கள் தொடர்ந்தும் விரைவடைந்தன. இதன்படி, மத்திய வங்கி துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பவற்றை ஆண்டில் இரண்டாவது முறையாக 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.00 சதவீதத்திற்கும், 8.50 சதவீதத்திற்கும் 2016 யூலை 16இல் அதிகரித்து நாணயக் கொள்கையை இறுக்கப்படுத்தியுள்ளது.

வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கான நிதியிடலிற்கான படுகடன் தொகை ஆகியவற்றைக் குறைப்பதற்காக, 2016இல் இறைக் கொள்கையானது திரட்சிப்படுத்தப்படும் நடவடிக்கையை நோக்கி பலப்படுத்தப்பட்டது. அரசின் அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிச் செயன்முறையின் கீழ் வரி முறைமையினை ஒழுங்குமுறைப்படுத்தி இலகுபடுத்தல், வரித் தளத்தினை விரிவுபடுத்தல், வரி விலக்கல்களையும் சலுகைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் வரி நிருவாகத்தினைப் பலப்படுத்தல் என்பனவற்றின் பொருட்டு பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மேம்பட்ட வருமான சேகரிப்பு மற்றும் மொத்த அரச செலவினத்தில் செய்யப்பட்ட குறைப்பு என்பனவற்றின் விளைவாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2015இன் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 5.4 சதவீதமாகக் குறுக்கமடைந்தது. பெயரளவு மொ.உ.உற்பத்தியின் குறைந்தளவான வளர்ச்சி காரணமாக மொ.உ.உற்பத்திக்கான மத்திய அரச படுகடன் 79.3 சதமாகக் காணப்பட்டபோதும் பெயரளவு நியதிகளில் அரச படுகடனானது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 2016இல் குறைவாகக் காணப்பட்டது. 2016இல் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை வெளிநாட்டு மூலங்களினாலேயே பெருமளவிற்கு நிதியிடப்பட்டுள்ளது. இதன்படி இவ்வாண்டுப்பகுதியின் மொத்த நிதியிடல் தேவைப்பாட்டில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் 61.2 சதவீதத்துக்கு (ரூ.391.9 பில்.) வகைகூறிய வேளையில் தேறிய உள்நாட்டு நிதியிடல் 38.8 சதவீதத்துக்கு (ரூ.248.4 பில்.) பங்களித்தது. அதிக வெளிநாட்டு நிதியிடல் மூலங்களில் தங்கியிருந்தமை காரணமாக, உள்நாட்டு வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லாத்துறை இரண்டினதும் நிதியிடலின் மீது தங்கியிருந்தமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016இல் குறைந்துள்ளது. 2016இல் உள்நாட்டு வங்கித் துறையிலிருந்தான நிதியிடல் மொத்தத் தேறிய உள்நாட்டு நிதியிடலில் 56.3 சதவீதத்துக்கு வகைகூறிய வேளையில், வங்கியல்லாத்துறை 43.7 சதவீதத்துக்கு வகைகூறியது.

## 1.5 அரச பிணையங்கள் சந்தையும் விளைவு வீதங்களின் அசைவுகளும்

மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணய நடவடிக்கைகள் அரசாங்கத்தின் அதிகரித்த நிதித் தேவைப்பாடு என்பனவற்றைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2016இல் முதலாந்தரச் சந்தையில் அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் அதிகரித்தன. முதலாந்தரச் சந்தையில், குறிப்பாக 2016இன்

முதற்காலாண்டுப்பகுதியில் விளைவு வீதங்களில் காணப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கு ஏப்பிறலிலிருந்து மிதமடையத் தொடங்கியமைக்கு அரசாங்கத்தின் இறைத்திரட்சி நிகழ்ச்சித்திட்டம், ப.நா.நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் அறிவிப்பு மற்றும் அரச பிணையங்கள் சந்தைக்கு ஏற்பட்ட வெளிநாட்டு நிதிகளின் உட்பாய்ச்சல் என்பன காரணங்களாக அமைந்தன. இதற்கமைய 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் மீதான விளைவு வீதங்கள் 2016 இறுதியில் முறையே 227 அடிப்படைப் புள்ளியினாலும் 280 அடிப்படைப் புள்ளியினாலும் 287 அடிப்படைப் புள்ளியினாலும் 2015இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 8.72 சதவீதத்திற்கும் 9.63 சதவீதத்திற்கும் 10.17 சதவீதத்திற்கும் அதிகரித்தன. நீண்ட கால முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகளின் விளைவு வீதங்கள், முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியலின் விளைவு வீதங்களை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இதன்படி, 5 ஆண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகளின் விளைவு வீதம் 2015இன் 9.79 சதவீதத்துடன் ஒப்பிடுகையில்

வரைபடம் 11 இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதம்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

2016இல் 11.76 சதவீதமாகக் காணப்பட்டதுடன் 10 ஆண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதம் 2015இன் 10.94 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 12.11 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. 2016இல் அரச பிணையங்களின் சந்தை விளைவு வளையி, முதலாந்தரச் சந்தையின் அசைவுகளோடு மேல் நோக்கிப் பெயர்ந்து காணப்பட்டது.

# 2. ஊ.சே. நிதியச் செயலாற்றத்தின் மீளாய்வு - 2016

## 2. அறிமுகம்

2016இன் இறுதியில் நிதியத்தின் மொத்தத் தேறிய பெறுமதி ரூ.1,841.5 பில்லியனையடைந்து, 2015இன் இறுதியில் காணப்பட்ட ரூ.1,664.9 பில்லியனை விட 10.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2016இன் இறுதியில் 17.3 மில்லியனை அடைந்தது. 2015இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 16.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 2.4 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகக் காணப்பட்டது. பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 2016இன் இறுதியில் 2.6 மில்லியனாக விளங்கி 2015இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட பெறுமதிக்கு சமமானதாகக் காணப்பட்டது. அதேவேளையில், பங்களிக்காத உறுப்பினர் கணக்குகள் 2015இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 14.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016 இறுதியில் 14.7 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2015இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 72,578 இலிருந்து 2016இன் இறுதியில் 73,482இற்கு 1.2 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

### 2.1 உறுப்பினர் பங்களிப்பு மற்றும் ஓய்வுகால நன்மைகளின் கொடுப்பனவுகள்

2016இல் உறுப்பினர் பங்களிப்பு 2015இன் ரூ.102.5 பில்லியனிலிருந்து ரூ.118.3 பில்லியனுக்கு 15.4 சதவீதத்தினால் அதிகரித்தது. 2015இன் இறுதியில் மொத்த ஊழியர்களுக்கான மீளளிப்புகளின் எண்ணிக்கை 127,106 இலிருந்து 2016இன் இறுதியில் 187,027 இற்கு 47.1 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. உறுப்பினர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் 30 சதவீத மீளளிப்பு உட்பட மீளளிப்பு நன்மைகளாகச் செலுத்தப்பட்ட மொத்த தொகை

அட்டவணை 2

ஊ.சே. நிதிய மீளளிப்புக் கொடுப்பனவு 2016

| ஊ.சே. நிதிய மீளளிப்பிற்கான காரணங்கள் | மீளளிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | மீளளிப்பு நன்மைகளின் மொத்தத் தொகை (ஆ) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | தொகை (ரூ.பில்லியன்) | % |
| ஓய்வூதிய வயதினை அடைந்தமை | 87,373 | 46.72 | 58.91 | 54.74 |
| 30 சதவீத மீளளிப்பு | 60,021 | 32.09 | 33.66 | 31.27 |
| திருமணம் காரணமாக ஓய்வுபெற்றமை | 22,816 | 12.20 | 5.89 | 5.48 |
| புலம்பெயர்ந்தமை | 1,782 | 0.95 | 2.77 | 2.58 |
| மருத்துவக் காரணங்கள் | 996 | 0.53 | 0.64 | 0.60 |
| உறுப்பினரின் மரணம் | 4,565 | 2.44 | 2.43 | 2.26 |
| ஓய்வூதிய தொழிலொன்றில் இணைந்து கொண்டமை | 9,373 | 5.01 | 3.20 | 2.98 |
| ஏனையவை | 101 | 0.05 | 0.11 | 0.11 |
| **மொத்தம்** | **187,027** | **100** | **107.63** | **100** |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(அ) இது மீளளிப்பின் முதலாவது கொடுப்பனவினை மட்டுமே உள்ளக்குவதுடன் 30 சதவீத மீளளிப்பு பகுதிக் கொடுப்பனவு கோரப்படாத மற்றும் பிடித்துவைக்கப்பட்ட கொடுப்பனவுகளைத் தவிர்க்கிறது.

2016இல் ரூ.108.4 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2015இல் செலுத்தப்பட்ட ரூ.77.8 பில்லியனை விட 39.3 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இதன்படி, தேறிய பங்களிப்பு (மீளளிப்பு நன்மைகளைக் கழித்த மொத்தப் பங்களிப்பு) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.24.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.9.9 பில்லியனிற்கு 60 சதவீதத்தினால் பாரிய வீழ்ச்சியைக் கண்டது.

முன்னைய ஆண்டுகளுக்கு மாறாக, 2016இல் தேறிய பங்களிப்பு வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு வீடமைப்பு மற்றும் மருத்துவ நோக்கங்களுக்காக உறுப்பினர் நிலுவையிலிருந்து 30 சதவீதத்தினை மீளப்பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியின் கீழ் இடம்பெற்ற மீளளிப்புக்களே முக்கிய காரணமாகும். 30 சதவீத மீளளிப்புக் கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதி ரூ.33.7 பில்லியனாகவும் ஏனைய மீளளிப்புக்களின் பெறுமதி ரூ.74.7 பில்லியனாகவும் காணப்பட்டன. 2016இன் இறுதியில் திரட்டப்பட்ட 30 சதவீத மீளளிப்புக்களின் பெறுமதி ரூ.42.2 பில்லியனாகும். ஓய்வூதிய வயதினையடைந்த உறுப்பினர்களுக்கான மொத்த மீளளிப்பு நன்மைகளின் பெறுமதி 2016 இறுதியில் ரூ.58.9 பில்லியனாக விளங்கி 2015 இறுதியின் ரூ.46.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 26.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை பெண் உறுப்பினர்களுக்கான திருமண மீளளிப்புக்களின் மொத்தப் பெறுமதி 2015 இறுதியின் ரூ.5.4 பில்லியனிலிருந்து 9.1 சதவீதத்தினால் 2016இன் இறுதியில் ரூ.5.9 பில்லியனுக்கு அதிகரித்தது. அட்டவணை 2 இல் காட்டப்பட்டவாறு ஓய்வூதிய வயதினையடைந்த உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட மீளளிப்பு நன்மைகள், மீளளிப்பு நன்மைகளின் பெரும் பங்கிற்கு வகைகூறிய வேளையில் அடுத்த இடத்தில் 30 சதவீத மீளளிப்புக்கள் காணப்பட்டன.

## 2.2 ஊ.சே. நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2015இன் ரூ.1,604.2 பில்லியனிலிருந்து 2016இல் ரூ.1,772.2 பில்லியனுக்கு 10.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது (வரைபடம் 12).

2016இல் முதலீட்டுச் சொத்துப் பட்டியலில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு தேறிய வருமானமாகிய ரூ.175.9 பில்லியனும் தேறிய உறுப்பினர் பங்களிப்பான ரூ.9.9 பில்லியனும் முக்கிய தூண்டுதலாக அமைந்தன. அரச முதலீடுகளைப் பொறுத்தவரை, அது அரச

வரைபடம் 12 முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2012 - 2016




மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பிணையங்களின் பங்கு 2015இன் 92.7 சதவீதத்திலிருந்து 2016இன் இறுதியில் 93.1 சதவீதத்திற்கு அதிகரித்தவிடத்து பங்குரிமை மூலதனத்தில் முதலீட்டின் பங்கு 2015இன் 5.5 சதவீதத்திலிருந்து 2016இல் 4.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், கம்பனிப் படுகடன் பிணையங்களிலுள்ள முதலீட்டு பங்குகள் சொத்துப் பட்டியலில் 1.9 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மீதி 0.4 சதவீதம் நிதியத்தின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அரச பிணையங்கள் மீதான நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் போன்ற குறுங்கால உயர் திரவத்தன்மை வாய்ந்த சொத்துக்களிலும் வைப்புச் செய்யப்பட்டன.

### 2.2.1 அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல்

திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அரச பிணையங்கள் சொத்துப் பட்டியல் 2015இன் இறுதியில் ரூ.1,487 பில்லியனிலிருந்து 2016இன் இறுதியில் ரூ.1,650 பில்லியனுக்கு 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

2016ஆம் ஆண்டுப்பகுதியில், ஊ.சே.நிதியம் நறுக்கு வட்டி வருமானமாக ரூ.161.7 பில்லியனை, அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலிருந்து ஈட்டியது. அரச பிணையங்களிலிருந்து கடன்தீர்ப்பனவு இலாபமாக ரூ.28.17 பில்லியனை அறிக்கையிட்டது. அதேவேளை, அரச பிணையங்களின் விற்பனை மூலம் பெறப்பட்ட மூலதன இலாபமாக ரூ.612 மில்லியனை ஈட்டியது. இதன்படி, அரச பிணையங்களின் மொத்த வருமானமாக ரூ.190.5 பில்லியனை நிதியம் அறிக்கையிட்டது. இது நிதியத்தின் மொத்த வருமானத்தில் 98.6 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. இது 2015 உடன் ஒப்பிடுகையில் 13.9 சதவீத அதிகரிப்பினைப்

**அட்டவணை 3 அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு - 2016 முடிவிலுள்ளவாறு**

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சிப் பெறுமதி (ரூ. பில்) | பங்கு (%) | சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டிற்கும் குறைவானது | 63.90 | 3.57 | 11.11 |
| 1-2 ஆண்டுகள் | 77.42 | 4.33 | 10.77 |
| 2-5 ஆண்டுகள் | 293.05 | 16.39 | 10.99 |
| 5 ஆண்டுகளுக்குக் கூடுதலானது | 1,353.29 | 75.70 | 11.26 |
| **மொத்தம்** | **1,787.66** | **100.00** | **11.19** |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பதிவுசெய்தது. 2016இன் இறுதியில் அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு 11.19 சதவீதமாகக் காணப்பட்டது. மொத்த அரச பிணையங்கள் சொத்துப் பட்டியலில் 24.3 சதவீதம் அடுத்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் முதிர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது அட்டவணை 3இல் காட்டப்பட்டுள்ளது.

### 2.2.2 பங்குரிமை மூலதனத்தின் சொத்துப்பட்டியல்

பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் இரண்டையும் உள்ளடக்கிய பங்குரிமை மூலதன சொத்துப்பட்டியல் 2015இன் ரூ.87.6 பில்லியனிலிருந்து 2016இல் ரூ.80.8 பில்லியனுக்கு ரூ.6.8 பில்லியனால் (7.76 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. ஊ.சே. நிதியம் தொடர்ச்சியாக நன்கு பன்முகப்படுத்தப்பட்ட விற்பனைக்கான சொத்துப்பட்டியலைக் கொண்டுள்ளது. இது முக்கியமாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடப்பட்ட வங்கித்தொழில், நிதி மற்றும் காப்புறுதி, பன்முகப்படுத்தப்பட்ட உடமைகள், கட்டட நிருமாண மற்றும் பொறியியல் துறை, சக்தி மற்றும் வலு மற்றும் சுற்றுலா விடுதிகள், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள் போன்ற பல்வேறுபட்ட துறைகளிலுள்ள கம்பனிகளை உள்ளடக்கியது (வரைபடம் 13). 2016ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மொத்தப் பங்குரிமை மூலதனச் சொத்துப் பட்டியலானது பங்கிலாபங்கள் மற்றும் மூலதன இலாபங்கள் என்பனவூடாக 2015இல் ரூ.4.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.4.7 பில்லியன் கொண்ட வருமானத்தை உருவாக்கியது. 2016இல் ஏற்பட்ட சந்தை விலை வீழ்ச்சியின் காரணமாக பட்டியலிடப்பட்ட 6 கம்பனிகளில் ரூ.5.2 பில்லியன் பெறுமதியிழப்பு ஏற்பட்டிருந்தது.

**வரைபடம் 13 பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலின் துறைவாரியான உள்ளமைப்பு - 2016இல் முடிவிலுள்ளவாறு**




மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### 2.2.3 கம்பனிப் படுகடன் சொத்துப்பட்டியல்

ஊ.சே.நிதியமானது கம்பனித் தொகுதிக் கடன்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் ஈட்டின் மூலம் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்கள் போன்றவற்றில் முதலீடு செய்யப்பட்டது. 2016ஆம் ஆண்டுப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட 13 கம்பனித் தொகுதிக்கடன்களில் ரூ.13.7 பில்லியன் முதலீட்டுத் தரம் கொண்ட கடன்தரப்படுத்தல் அடிப்படையில் முதலீடு செய்யப்பட்டது. நிதியத்தின் கம்பனிப் படுகடன் சொத்துப்பட்டியல் 2016 திசெம்பர் 31 இல் ரூ.38.2 பில்லியனாக விளங்கியதுடன் இது மொத்தச் சொத்துப்பட்டியலில் 2.2 சதவீதத்தினை மாத்திரம் உள்ளடக்கியிருந்தது. 2016இல் நிதியமானது கம்பனிப் படுகடன் சொத்துப்பட்டியலிருந்து ரூ.3,049 மில்லியன் கொண்ட வட்டி வருமானத்தினை உழைத்தது. அதேவேளை சராசரி சொத்துப்பட்டியலின் வருவாய் வீதம் ஆண்டிற்கு 9.57 சதவீதமாகக் காணப்பட்டது.

### 2.2.4 நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

நிதியத்தின் திரவத்தன்மையினை முகாமைப்படுத்தும் பொருட்டு, நாளாந்த மிகை நிதியமானது அரச பிணையங்களுக்கெதிராக நேர்மாற்று மீள்கொள்வனவுகளில் முதலீடு செய்யப்படுகின்றது. 2016ஆம் ஆண்டுப்பகுதியில், நிதியமானது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து 2015இல் ரூ.435.5 மில்லியன் கொண்ட வட்டி வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூ.738.4 மில்லியனை ஈட்டிக்கொண்டது.

### 2.2.5 நிதியத்தின் வருமானம்

2016இல் நிதியத்தின் மொத்த வருமானம் ரூ.192.9 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. (அட்டவணை 4) வட்டி வருமானமே நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (மொத்த வருமானத்தில் 85.8 சதவீதம்) காணப்பட்டது. வட்டி வருமானம் 2015இன் ரூ.143.1 பில்லியனிலிருந்து 2016இல் ரூ.165.5 பில்லியனுக்கு 15.7 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், மூலதன இலாபம் மற்றும் பங்கிலாபப் பெறுகைகள் என்பவற்றை உள்ளடக்கிய பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் 2015இல் உழைக்கப்பட்ட ரூ.3,671 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ரூ.3,873 மில்லியனுக்கு 16 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. எனினும், கழிவிடப்பட்ட திறைசேரி முறிகளில் இருந்தான கடன்தீர்ப்பனவு இலாபம் 2015இன் ரூ.26.6 பில்லியனிலிருந்து 2016 ரூ.28.2 பில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் அதிகரித்தது (அட்டவணை 4).

## 2.3 தொழிற்பாட்டுச் செலவினம்

2016இல் நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம் ரூ.1,487.2 மில்லியனுக்கு அதிகரித்து 2015இன் ரூ.1,190.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 25 சதவீத அதிகரிப்பினை பதிவு செய்தமைக்கு ஏனைய செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இதன்படி, மொத்த வருமானத்தின் சதவீதமாக தொழிற்பாட்டுச் செலவினம் 2015இன் 0.69 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.77 சதவீதத்திற்கு அதிகரித்தது. தனிப்பட்ட நிதிய முகாமையாளர்களினால் 1 இலிருந்து 2 சதவீதம் வரையிலான முகாமைத்துவக் கட்டணம் விதிக்கப்படுவதனை கருத்திற்கொள்கையில் தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தின் ஒரு சதவீதத்திற்குள் பேணக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதொரு சாதனையே ஆகும் (அட்டவணை 5).

அட்டவணை 4 நிதியத்தின் முதலீட்டு வருமானம்

| வருமான மூலங்கள் | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.மில்.) | பங்கு (%) | தொகை (ரூ.மில்.) | பங்கு (%) |
| வட்டி | 143,055 | 83.4 | 165,485 | 85.8 |
| பதிவழிப்பு நன்மைகள் | 26,591 | 15.5 | 28,171 | 14.6 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன நன்மைகள் | 1,171 | 0.7 | 612 | 0.3 |
| சந்தைப்படியான நன்மைகள்/ இழப்புக்கள் | (394) | (0.2) | (842) | (0.4) |
| பங்குரிமை மூலதனத்திலிருந்தான மூலதன நன்மைகள் | 553 | 0.3 | 452 | 0.2 |
| பங்கிலாபங்கள் | 3,512 | 2.0 | 4,263 | 2.2 |
| சொத்துக்களின் பெறுமதியிழப்பு | (2,957) | (1.7) | (5,232) | (2.7) |
| **மொத்தம்** | **171,531** | **100.0** | **192,909** | **100.0** |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5 நிதியத்தின் தொழிற்பாட்டுச் செலவினம்

| விடயம் | மத்திய வங்கியின் நாணயச் சபை | | | தொழில் திணைக்களம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 (ரூ.மில்.) | 2016 (ரூ.மில்.) | மாற்றம் (%) | 2015 (ரூ.மில்.) | 2016 (ரூ.மில்.) | மாற்றம் (%) |
| ஆளணிச் செலவினங்கள் | 406 | 478 | 17.73 | 343 | 383 | 11.66 |
| நிருவாகச் செலவினங்கள் | 232 | 231 | (0.43) | 165 | 172 | 4.24 |
| ஏனைய செலவினங்கள் | 33 | 212 | 542.4 | 12 | 11 | 8.33 |
| **மொத்தம்** | **671** | **921** | **37.3** | **520** | **566** | **8.85** |
| **மொத்த வருமானத்தின் சதவீதமாக மொத்தச் செலவுகள்** | **0.39** | **0.48** | | **0.48** | **0.29** | |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 2.4 வரிச் செலவினம்

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 35இன் நியதிகளின்படி ஊ.சே. நிதியம் 10 சதவீதம் வருமான வரி செலுத்துவதற்கு பொறுப்பைக் கொண்டுள்ளது. 2016இல் ஊ.சே.நிதியம் ரூ.15,657 மில்லியனை வருமான வரியாகச் செலுத்தியது. இது 2015இன் வருமான வரிக் கொடுப்பனவான ரூ.13,727 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 14.1 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

## 2.5 உறுப்பினர் கணக்கு நிலுவைகள் மற்றும் செலுத்தப்பட்ட வட்டி

2016இல் ரூ.171.6 பில்லியன் வட்டியாக உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டமையினால் உறுப்பினர் நிலுவைகள் 2015இன் ரூ.1,625.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,810.6 பில்லியனுக்கு 11.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அண்மைய ஆண்டுகளில் நிலவிய தளம்பல்மிக்க வட்டிவீத சூழலுக்கிடையிலும் நிதியமானது 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான உறுப்பினர்களின் இறுதி நிலுவையின் மீது 10.5 சதவீதம் கொண்ட வட்டி வீதத்தினை பிரகடனப்படுத்தக் கூடியதாக இருந்தது.

வரைபடம் 14 உறுப்பினர் நிலுவைகள் மற்றும் செலுத்தப்பட்ட வட்டி




மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 2.6. இடர்நேர்வு முகாமைத்துவம்

### 2.6.1. பொதுநோக்கு

சந்தையின் அளவு மற்றும் அதன் தாக்கம் என்பனவற்றைக் கவனத்திற் கொள்கையில் ஊ.சே.நிதியமானது இலங்கையின் நிதியியல் துறையில் முறையியல் ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த நிதியமாக விளங்கிவருவதுடன் தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வூதிய நன்மைகளை வழங்கும் விதத்திலும் அதேபோன்று நாட்டின் முழு நிதியியல் முறைமைகளையும் மேம்படுத்தும் விதத்திலும் நீண்டகால முதிர்ச்சிச் சேமிப்புக்களை முகாமை செய்து வருகின்றது. முதலீட்டுக் கொள்கை அறிக்கையும் முதலீட்டு வர்த்தகப்படுத்தல் வழிகாட்டல்களும் குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு வரையறையுடன் சேர்ந்து ஊழியர் சேம நிதியம் தாங்கக்கூடிய இடர்நேர்வுகளின் மட்டத்தினை வரைவிலக்கணம் செய்வதுடன் முதலீடுகளுக்காக நிதியம் ஒதுக்கப்படும் அடிப்படையையும் உருவாக்குகின்றன. நிதியமானது ஊ.சே.நிதியத்தின் இடர்நேர்வு வரையறைக்குள் செய்யப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் சொத்துக்களின் ஒதுக்கீடுகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன. நிதியத்தினால் எதிர்நோக்கப்படும் முக்கிய இடர்நேர்வுகளாக கொடுகடன்

இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன காணப்படுகின்றன.

### 2.6.2 திரவத்தன்மை இடர்நேர்வு

பொதுவாக மாதாந்த உறுப்பினர் பங்களிப்புக்கள் மீளளிப்புக்களையும் ஏனைய கொடுப்பனவுகளையும் பூர்த்திசெய்வதற்கு பொதுவாக போதுமானவையாக இருக்கின்றன. இதன்படி மேலதிகத் திரவத்தன்மை தேவைப்படாமையினால் நிதித் தேவைப்பாடுகளுக்காக முதலீடுகள் முதிர்ச்சியடைய முன் நிறுத்திவைக்கப்பட்டன. ஊ.சே.நிதியம் கொடுப்பனவுக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்கின்ற வேளையில் அதன் காசுப் பாய்ச்சல்களை நாளாந்த அடிப்படையில் கண்காணிப்பு செய்கிறது. மேலும் நிதியமானது ஏதேனும் எதிர்பாராத தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு வேறுபட்ட முதிர்ச்சிகளில் போதுமான தொகைகளையும் பெரும்பாலான சொத்துக்கள் உயர்ந்தளவு திரவத்தன்மையினைக் கொண்ட சந்தைப்படுத்தத்தக்க பிணையங்களையும் பேணி வருகின்றது. இதன்படி, ஊ.சே.நிதியத்தின் திரவத்தன்மை இடர்நேர்வு மிகக் குறைவாக இருக்குமென கருதப்படுகிறது.

### 2.6.3 சந்தை இடர்நேர்வு

சந்தை இடர்நேர்வு என்பது, வட்டி வீத அசைவுகள், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பங்குரிமை மூலதன விலைகள் என்பனவற்றின் காரணமாக சொத்துப்பட்டியல் மற்றும் நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து தோன்றும் இழப்பாகும். நிதியத்தினால் எதிர்நோக்கப்படும் சந்தை இடர்நேர்வு முக்கியமாக வட்டி வீத இடர்நேர்விலிருந்தும் பங்குரிமை மூலதன விலை இடர்நேர்விலிருந்தும் தோன்றுகிறது. நிதியத்தின் வட்டி வீத இடர்நேர்வு, சந்தையில் பெரும்பாலும் அனைத்துப் பிணையங்களையும் உள்ளடக்கியுள்ள வேறுபட்ட முதிர்ச்சிகளின் தெரிவு செய்யப்படுகின்ற முதிர்ச்சிகளினூடாக முகாமைப்படுத்தப்படுகின்றன. நிதியத்தின் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் முதலீட்டு உபாயம் காரணமாக அரசாங்கப் பிணையங்களின் சொத்துப்பட்டியலின் வட்டி வீத வெளிப்படுத்துகை இடர்நேர்வு மிகக் குறைவேயாகும். பங்குரிமை விலை இடர்நேர்வு என்பது, பங்குரிமை விலைகளில் ஏற்படும் வீழ்ச்சியின் காரணமாக பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலின் பெறுமதியில் ஏற்படும் குறைப்பாகும். பங்குரிமை மூலதனச் சந்தை இடர்நேர்வானது வளர்ந்துவரும் துறையில் அடிப்படை ரீதியாக ஆற்றல் வாய்ந்த இருப்புக்களில் முதலீடு செய்வதன் மூலமும் காத்திரமான பன்முகப்படுத்தலின் மூலமும் குறைக்கப்படுகின்றது.

### 2.6.4 கொடுகடன் இடர்நேர்வு

முதலீடுகளில் 93 சதவீதமானவை அரச பிணையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் நிதியத்தின் கொடுகடன் இடர்நேர்வு மிகக் குறைவானதாகும். இது முறிவடையக்கூடிய இடர்நேர்வுகளற்ற முதலீடுகளாக இருப்பதனால் பாதுகாப்பானவையாகும். மேலும் கம்பனிப் படுகடன் முதலீடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவர்களினால் தரமிடப்பட்ட முதலீட்டுத் தரங்களைக் கொண்ட நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சாதனங்களாக இருக்கின்றன. நேர்மாற்று மீள்கொள்வனவு போதுமான அரச பிணையங்களால் உத்தரவாதப்படுத்தப்பட்டு ஊ.சே.நிதியப் பிணையங்கள் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டு பேணப்படுகின்றன. இதன்படி, அரச பிணையங்களில் உயர்ந்தளவிற்கு இவை குவிந்திருப்பதற்கு புறம்பாக, நிதியத்தின் கொடுகடன் இடர்நேர்வு மிகக் குறைவாகவே இருக்குமென கருதப்படுகின்றது.

### 2.6.5 தொழிற்பாட்டு இடர்நேர்வு

தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பது போதுமானதற்ற அல்லது வெற்றியளிக்காத உள்ளக செயன்முறைகள், மக்கள் அல்லது முறைமைகள் அல்லது வெளிப்புற நிகழ்வு நிலைமைகளினால் தோன்றிய இழப்புக்களின் இடர்நேர்வாகும். நிதியத்தின் உறுப்பினர் கணக்குகள் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் மையப்படுத்தி பதிவு செய்கின்ற முறைமையொன்றில் பேணப்படுகின்ற வேளையில் இலங்கை மத்திய வங்கியிலுள்ள ஊ.சே.நிதிய முறைமையின் செயல்முறையின் பாரிய ஒருங்கிணைப்பிற்கும் வசதியளிக்கின்றமையானது குறைந்தபட்ச உழைப்பு தலையீடுகளுடன் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் தரவுகளின் பெருமளவு துல்லியத்தன்மை என்பனவற்றின் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கின்றது. மேலும், ஊ.சே.நிதியம் அதன் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்காக அனைத்துத் தொழிற்பாடுகளுக்குமாக உள்ளகக் கணக்காய்வு, கடமைகளை வெவ்வேறாக்குதல், தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்காக அதன் அனைத்து தொழிற்பாடுகளுக்குமாக அதிகார வரம்புகள் போன்றவற்றை ஏற்படுத்தியிருக்கின்றது. இச்செயல்முறைகளை முறைமையின் நிச்சயமற்றதன்மை மற்றும் நிறுவனத்தின் ஆர்வலர்களினால் ஏற்படும் தோல்விகளைத் தவிர்ப்பதற்கு வலுப்படுத்த வேண்டும்.

### 2.6.6 அரச பிணையங்களின் உள்ளகக் கட்டுப்பாடு

அரச பிணையங்கள் மற்றும் ஏனைய சாதனங்களில் செய்யப்படும் முதலீடுகள் ஊ.சே.நிதிய முதலீட்டுக் குழுவின் அனுமதியுடன் செய்யப்படும். இக்குழுவானது நாளாந்த அடிப்படையில் சந்தை நிலைமைகளைக் கண்காணிக்கின்றது. மேலும், இரண்டாந்தரச் சந்தைச் செயற்பாடுகளை சாத்தியமானளவிற்குக் குறைப்பதற்கான அவசியம் காரணமாக ஊ.சே.நிதியமானது முதலாந்தர ஏல நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் வகையில் அரச பிணையங்களில் முதலீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

## 2.7 வீடமைப்புக் கடன் வசதி

வீடமைப்புக் கடன் திட்டமானது உறுப்பினர்கள் பங்கேற்கின்ற கடன்வழங்கல் நிறுவனங்களான வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கூட்டுறவு கிராமிய வங்கி என்பனவற்றிலிருந்து வீடமைப்புக் கடன்களை பெற்றுக்கொள்வதனை வசதிப்படுத்தும் நோக்குடன் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இத்திட்டம் 2016 இலும் தொடர்ந்ததுடன் ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கு குறிப்பிடத்தக்க பணிகளையும் வழங்கிவருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 2016இல் ஊ.சே.நிதியம் உறுப்பினர்களுக்கு அவர்களின் நிலுவைக்கெதிராக 12,780 உத்தரவாதச் சான்றிதழ்களை ரூ.5,414 மில்லியன் கொண்ட வீடமைப்பு கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு வழங்கியது. மேலும் 2015ஆம் ஆண்டுப்பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக தொடர்பான உறுப்பினர்களின் கணக்குகளிலிருந்து ஏறத்தாள 2,541 மில்லியன் கழிக்கப்பட்டு பங்கேற்றும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு 2016இல் அனுப்பி வைக்கப்பட்டன.

**அட்டவணை 6 — வீடமைப்புக் கடன் வசதிகள்**

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்) | ஒப்புதலளிக்கப்பட்ட கடன் (ரூ.மில்.) | கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட தொகை (ரூ.மில்.) |
|---|---|---|---|
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| 2014 | 17,786 | 8,021 | 2,394 |
| 2015 | 13,132 | 5,489 | 2,522 |
| 2016 | 12,780 | 5,414 | 2,541 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 2.8 சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

ஊழியர் சேம நிதியச் சட்டத்திற்கிணங்க தொழிற் திணைக்களம் நிதியத்தின் பொது நிருவாகத்திற்கும் ஊ.சே.நிதியச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்கின்றது. இதன்படி 2016ஆம் ஆண்டுப்பகுதியில் மாவட்ட தொழில் அலுவலகங்களும் துணை அலுவலகங்களும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி 7,134 புதிய தொழில்தருநர்களையும் 34,264 புதிய ஊழியர்களையும் பதிவுசெய்தது. 2016ஆம் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களில் அரைப்பங்கிற்கும் கூடுதலானோர் மேல் மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்ட வேளையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மொத்த தொழில்தருநர்களின் பதிவுகளில் 6.5 சதவீதத்திற்கு வகைகூறின.

சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, உறுப்பினர் பங்களிப்புக்களைச் செலுத்தாத தொழில்தருநர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரம் தொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, மாவட்ட தொழில் அலுவலகங்களினாலும் துணைத்தொழில் அலுவலகங்களினாலும் முறையே ரூ.4,464 மில்லியனையும் ரூ.3,454 மில்லியனையும் கோரி முறையே 10,074 முதல் அறிவித்தலும் 6,508 சிவப்பு அறிவித்தலும் அனுப்பப்பட்டன. மேலும், சிவப்பு அறிவித்தல் கிடைத்ததன் பின்னர் 28 நாட்களுக்குள் நிலுவைகளைச் செலுத்தத்தவறிய 2,622 நிறுவனங்களுக்கெதிராக சட்ட வழக்குகளை தொடுத்ததன் மூலம் தொழில் திணைக்களம் ரூ.855 மில்லியனை அறவிட்டுக் கொண்டது.

## 2.9 ஊ.சே.நிதிய உறுப்பினர்களை மீளப்பதிவு செய்தல்

ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கு வினைத்திறன் மிக்க பணியினை வழங்கும் நோக்குடன் ஊ.சே. நிதியத் திணைக்களமும் தொழில் திணைக்களமும் ஊ.சே.நிதிய உறுப்பினர்களை அவர்களது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு அவர்களது பெயர்களை மீளப்பதிவு செய்து தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை தனித்துவமான அடையாள இலக்கமாக வழங்குவதற்காக சிறப்புச் செயற்றிட்டம் ஒன்றினை மேற்கொண்டன. இதில் இரண்டு நிறுவனங்களும் உறுப்பினர் மத்திய தரவுத் தளமொன்றினை பயன்படுத்துவதனை இயலச் செய்தது.

2016 இறுதியில் ஏறத்தாள 1.8 மில்லியன் செயற்படுகின்ற ஊ.சே.நிதிய உறுப்பினர்களின் (பங்களிப்புச் செலுத்துகின்ற உறுப்பினர்கள்) தேசிய அடையாள அட்டை விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இது உறுப்பினர் கணக்குகளில் 82 சதவீதத்திற்கு (1.4 மில்லியன் கணக்குகள்) தனித்துவமான அடையாள இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ள வேளையில் சேகரிக்கப்பட்ட தரவுகளுக்கும் ஏற்கனவேயுள்ள தரவுகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் தொடர்பில் ஊழியர்களின் தொழில்தருநர்களிடமிருந்து பெறப்பட்ட சரிபார்ப்புக்களின் மூலம் எஞ்சிய உறுப்பினர்களின் விபரங்கள் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேநேர அடிப்படையில், தேசிய அடையாள அட்டை விபரங்களின் கீழ் புதிய ஊ.சே.நிதிய உறுப்பினர்களைப் பதிவுசெய்தல் 2010 நவெம்பரில் தொடங்கப்பட்டது. இதற்கமைய ஒவ்வொரு மாதமும் முதல் தடவையாக ஊ.சே. நிதிய பங்களிப்புக்களை பெறும் புதிய உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மாதாந்த கண்காணிப்பு முறைமையொன்று நடைமுறைக்கு இடப்பட்டது.

2016ஆம் ஆண்டுப்பகுதியில் ஏற்கனவே பதிவிடப்பட்ட மற்றும் புதிதாக பதிவிடப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 69,326 ஆகவும் மத்திய தரவுத் தளத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட மொத்தப் பதிவுகளின் எண்ணிக்கை 76,386 ஆகவும் காணப்பட்டது.

**அட்டவணை 7** சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

| விபரம் | | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| புதிய பதிவேடுகள் | தொழில்தருநர்கள் | 9,799 | 6,822 | 7,213 | 6,736 | 7,134 |
| | ஊழியர்கள் | 412,255 | 448,398 | 296,056 | 48,007 | 34,264 |
| மாகாண ரீதியாக தொழில்தருநர்கள் பதிவேடுகள் (மொத்த தொழில்தருநர்கள் பதிவேடுகளின் சதவீதமாக) | மேல் மாகாணம் | 37 | 46 | 65 | 50 | 50 |
| | வடக்கு மற்றும் கிழக்கு | 24 | 10 | 3 | 7 | 6.5 |
| | ஏனையவை | 39 | 44 | 32 | 43 | 43.5 |
| முதல் அறிவித்தல்கள் | அனுப்பிய மொத்த அறிவித்தல்களின் எண்ணிக்கை | 13,134 | 12,807 | 12,132 | 9,015 | 10,074 |
| | பெறப்பட்ட தொகை (ரூ.மில்.) | 4,604 | 5,100 | 6,280 | 4,018 | 4,464 |
| சிவப்பு அறிவித்தல்கள் | அனுப்பிய மொத்த அறிவித்தல்களின் எண்ணிக்கை | 7,874 | 8,411 | 13,578 | 5,670 | 6,508 |
| | பெறப்பட்ட தொகை (ரூ.மில்.) | 2,792 | 6,132 | 1,121 | 2,864 | 3,454 |
| தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 2,991 | 2,744 | 3,397 | 6,458 | 2,622 |
| | அறவிடப்பட்ட தொகை (ரூ.மில்.) | 2,991 | 2,442 | 6,126 | 1,308 | 855 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், தொழில் திணைக்களம்

## 2.10 ஊ.சே. நிதியக் கொடுப்பனவுகளுக்கான இ-கூற்று முறைமை

ஊ.சே. நிதியத்தின் இ-கூற்று முறைமை தொழில்தருநர்கள் அவர்களது ஊழியர்களின் ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களை இலத்திரனியலூடாக வழங்கவும் மாதாந்த பங்களிப்புக்கள் தொடர்பான கொடுப்பனவு மாதிரிகளை இலகுவாகச் செலுத்தவும் உதவுகின்றது. இம்முறைமையானது 2012 வரை சுயவிருப்பு அடிப்படையொன்றில் தொழிற்பாட்டிலிருந்தது. இச்செயன்முறையானது கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக விரிவாக்கப்பட்டிருக்கின்ற ஊ.சே. நிதியத்தின் செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கு மேலும் வசதியளித்துள்ள அதேவேளை தொழில்தருநர்கள் அவர்களின் தன்னியக்கப்படுத்தப்பட்ட சம்பள முறைமையினைப் பயன்படுத்தி தங்களுடைய மாதாந்த ஊ.சே.நிதியக் கூற்றுக்களின் கையளிப்பிற்கும் தொழில்தருநர்களுக்கு உதவுகிறது. 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஊ.சே.நிதியத் திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி 50 ஊழியர்களுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட தொழில்தருநர்களுக்கு விபரங்களை இ-கூற்று அடிப்படையில் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டதுடன் 2013 மேயிலும் அதற்குப் பின்னரும் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் அவை ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுடன் இவ்வொழுங்குவிதிகளுக்கு 2015 மாச்சு 03ஆம் நாள் பாராளுமன்றம் ஒப்புதலையளித்தது.

ஆரம்பத்தில் இ-கூற்றுக்கள் மின்னஞ்சலூடாக மட்டும் பெறப்பட்டதுடன் மாதாந்தப் பங்களிப்புக்கள் தொடர்பான கொடுப்பனவுகள் காசோலைகள் மூலமே செலுத்தப்பட்டன. 2011இல் கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி இன் ஒத்துழைப்புடன் இவ்வழிவகைகள் விரிவாக்கப்பட்டன. இது அவர்களின் வாடிக்கையாளர்கள் ஊ.சே.நிதியத்தினைச் செலுத்துவதற்கும் இ-கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கும் கணனி வழியில் கொடுப்பனவுகளை செய்வதற்கும் வசதியளித்தது. அதனைத் தொடர்ந்து மேலதிகமாக நான்கு உரிமம்பெற்ற வங்கிகள் அதாவது இலங்கை வங்கி, மக்கள் வங்கி, சம்பத் வங்கி பிஎல்சி, அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி என்பன 2012-2013 காலப்பகுதியில் அவற்றின் தொடர்பாக கணனிவழிக் கொடுப்பனவு வழிப்படுத்தல்களை விரிவாக்கியதன் மூலம் அவர்களின் வாடிக்கையாளர்களுக்கென பிரத்தியேகமாக ஊ.சே.நிதியக் கொடுப்பனவு முறைமைகளை அறிமுகப்படுத்தின.

2016ஆம் ஆண்டில் அதேநேர வங்கித்தொழில் முறைமையினூடாக இ-கூற்றினைச் சமர்ப்பிக்கும் நடைமுறை வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட நடைமுறைக்கு மேம்பட்டமையானது தொழில்தருநர்கள் மாதாந்தப் பங்களிப்பு விபரக்கோவையிலுள்ள தமது ஊழியர்களின் தரவுகளை ஏற்கனவே, ஊ.சே.நிதிய முறைமையில் பதிவுசெய்யப்பட்டுள்ள தரவுகளுடன் செல்லுபடியாக்குவதனையும் அதேவேளையில் அவர்களது மேசையிலேயே அவற்றைப் பெறக்கூடியதன்மையினையும் இயலச்செய்தது. இது நடைமுறைகளை மேம்படுத்திக் குறைந்த உழைப்பினைக் கொண்ட தலையீட்டினூடாக உறுப்பினர் கணக்குகளை அனுப்பி வைப்பதனை விரைவுபடுத்துகின்றது. 2016 அளவில் கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி என்பன வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட ஊ.சே. நிதியக் கூற்றினைச் சமர்ப்பிக்கும் நடைமுறையுடன் ஊ.சே. நிதியத்தினைச் செலுத்துவதன் மூலம் அவர்களின் வாடிக்கையாளர்களுக்குப் பங்களித்தது. இதன்படி, ஆறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இ-கூற்று நடைமுறை தொடர்பில் தமது வாடிக்கையாளர்களுக்கு வசதியளிப்பதற்காக ஊ.சே. நிதியத்துடன் ஏற்கனவே இணைந்து கொண்டுள்ளன. மேலும், ஏற்கனவே அதேநேர ஊ.சே.நிதியக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ள வங்கிகள் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட வசதிக்கு மாறுவதற்கும் நிதியத்தில் இன்னமும் இணைந்து கொள்ளாத மற்றைய வர்த்தக வங்கிகள் அவ்வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையூடாகத் தொழிற்படுகின்ற நேரடிப்பற்று கொடுப்பனவு முறைமையானது, மேலே குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்குகளைப் பேணாத தொழில்தருநர்களுக்காக மாற்று ஏற்பாட்டு கொடுப்பனவுத் தொகையொன்றாகத் தொடர்ந்தும் பேணப்பட்டது.

இதன்படி இ-கூற்றினைச் சமர்ப்பிப்பதற்காக பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2016இல் 6,955இற்கு அதிகரித்ததுடன் 2015 உடன் ஒப்பிடுகையில் 14 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இத்தொழில்நிலையானது 2016ஆம் ஆண்டின் மொத்தச் சேகரிப்பான ரூ.118 பில்லியனில் பெரும்பாலும் 80 சதவீதத்தினை உள்ளடக்கி 2.4 மில்லியன் செயற்படும் கணக்கில் 76 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. மேலும், ஊ.சே.நிதியம் தொழில்தருநர்களை இ-கூற்று முறைமையில் இணைந்து கொள்வதனை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்குத் தொடர்ச்சியாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதுடன்

தேவையான தகவல்களை வழங்குவதற்கு வசதிகளை வழங்கியதுடன் இவ்வாண்டுப்பகுதியில் இ-கூற்று நடைமுறையில் இணைந்த தொழில்தருநர்களுக்கு வழிகாட்டல்களையும் வழங்கியது.

## 2.11 ஓய்வுக்கு முன்னரான மீளளிப்புத் திட்டம்

2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஊ.சே.நிதிய (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளும் அதன் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகளுக்கிணங்கவும் 30 சதவீதமான ஊ.சே. நிதிய ஓய்விற்கு முன்னரான மீளளிப்புத் திட்டங்களின் கீழான கொடுப்பனவுகள் 2015 யூலையிலிருந்து ஆரம்பமாயின.

ஊ.சே. நிதியத் (திருத்தச் சட்டததின்படி) பத்து ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதிக்கு நிதியத்திற்கு பங்களிப்புக்களைச் செலுத்தியுள்ள தற்பொழுது தொழில்புரிகின்ற மற்றும் அவரது தனிப்பட்ட கணக்கில் மூன்று இலட்சத்திற்குக் குறையாத தொகையை வைத்திருக்கும் ஆளொருவர் வீடமைப்புக் கடன் அல்லது மருத்துவச் சிகிச்சை நோக்கத்திற்காக மேற்குறிப்பிட்ட நன்மைகளை பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர்.

இத்திட்டத்திற்கு நன்மைபெறுநர்களிடையே உயர் கேள்வி காணப்பட்டதுடன் 2016ஆம் ஆண்டுப்பகுதியில் 60,000 இற்கு மேற்பட்ட நன்மைபெறுநர்களிடையே ரூ.33.7 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு இத்திட்டத்தின் கீழ் 70,000 இற்கு மேற்பட்ட தகுதிவாய்ந்த உறுப்பினர்களுக்கு ரூ.41 பில்லியன் கொண்ட தொகை செலுத்தப்பட்டது.

## 2.12 பிம்பப்படுத்துகின்ற ஸ்கானிங் செயற்றிட்டம்

திணைக்களத்தில் ஏறத்தாள காகிதாதிகளற்ற தொழிற்பாட்டு முறைமையினை நிறுவுவதன் மூலம் ஊ.சே.நிதியப் பணிகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் 2013இல் பிம்பப்படுத்தல் ஸ்கானிங் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

செயற்றிட்டத்தின் கட்டம் I 2015ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவடைந்ததுடன் ஊ.சே.நிதிய பதிவேட்டு அறையின் பாரம்பரிய மாதிரிகளிலிருந்து இ-பதிவேட்டு அறைக்கு மாற்றமடைந்தது. முக்கிய ஆவணங்களான முதன்மைக் கோப்புக்கள், படிவம் டி, மீள்பதிவு ஆவணங்கள் ஸ்கான் செய்யப்பட்டு ஆவண முகாமைத்துவ முறைமைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டன.

ஆவணங்கள் முகாமைத்துவ முறைமை சமகாலத்தில் உயர்ந்தபட்சம் 298 பயன்படுத்துநர்கள் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மைக்கு வசதியளித்தமையின் மூலம் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் தன்மையினை விரைவுபடுத்தியது. ஆவணங்களைச் சீரமைப்பதற்கான வேகம், செயற்படுத்தப்படும் இயலுமை அதிகரிக்கப்பட்டதன் மூலம் தேவையான ஆவணங்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்குத் தேவையான சேமிப்பு இடவசதி 4,000 சதுர அடியிலிருந்து 8 சதுர அடிக்கு குறைக்கப்பட்டது. பதிவேடுகளைப் பேணும் பொறிமுறையிலிருந்து இ-பதிவேட்டிற்கு மாறிக் கொண்டமையானது பதிவேடுகளைச் சீரமைத்தல் மற்றும் இற்றைப்படுத்தலில் மனித ஈடுபாடுகள், பதிவேடுகளைப் பேணுவதற்கான இடவசதிக்கான வாடகை, பதிவேடுகளைத் தேடுவதற்கான நேரம் என்பன குறைக்கப்பட்டதன் மூலம் செலவுகளைக் கணிசமானளவிற்குக் குறைக்க முடிந்தது. ஆவண முகாமைத்துவ முறைமையூடாக எந்தவொரு இடத்திலிருந்தும் (மட்டுப்படுத்தப்பட்ட அணுகும் வழிமுறைகளுடன்) முதன்மைக் கோப்புக்களைத் தற்பொழுது அணுகும் வசதி இருப்பதன் காரணமாக ஊ.சே.நிதியப் பணிகளை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களுக்கும் பன்முகப்படுத்தக்கூடிய வசதிகளை வழங்கியது.

செயற்றிட்டத்தின் கட்டம் I இன் ஊடாக திணைக்களத்தினால் பெறப்பட்ட வினைத்திறன் மேம்பாடுகள் மற்றும் நன்மைகளைப் பரிசீலனையில் கொண்டு, பெருமளவிற்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றதான ஆவணங்களை இலத்திரனியல் படிவத்திற்கு மாற்றுவதற்கான செயற்றிட்டத்தின் கட்டம் II இனைத் திணைக்களம் 2016 இறுதியில் தொடங்கியது. அவை 2013, 2014 மற்றும் 2015 உடன் தொடர்பான படிவம் சி மற்றும் சி3, 2013ஆம் ஆண்டு தவிர்ந்த 2002 இலிருந்து 2015 வரையான காலப்பகுதிக்கான வேலை விபரத்தாள், 1974 இலிருந்து 2009 வரையான காலப்பகுதிக்குரிய தனிப்பட்ட தொழில்தருநர் பேரேடுகள், 2010ஆம் ஆண்டிலிருந்தான திருத்தக் கடிதங்கள் மற்றும் 2014ஆம் ஆண்டுடன் தொடர்பான ஆர் ஆர் ஆவணங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

பிம்பப்படுத்துகின்ற ஸ்கானிங் செயற்றிட்டத்தின் கட்டம் II 2017 இறுதியளவில் நிறைவு செய்யப்படவுள்ளது.

## 2.13 பொதுமக்கள் விழிப்புணர்வு

உறுப்பினர் கணக்குகளின் தவறுகளைக் குறைப்பதற்கு தவறற்ற தரவுத்தளம் ஒன்றினை உருவாக்குவதற்கும் தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வசதியளித்தல் பணிகளை வழங்குவதற்கும் தொழில்தருநர் அல்லது

ஊழியருடைய விசாரணைகளைக் குறைப்பதற்கும் திணைக்களத்தில் ஊ.சே.நிதியத் தொழிற்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதன்படி மேற்குறிப்பிட்ட இலக்கினை எய்துவதற்கான முக்கிய நடவடிக்கையொன்றான 2016ஆம் ஆண்டுப்பகுதியில் பல நடமாடும் பணிகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

2016இல் ஊ.சே.நிதியத் திணைக்களம் பதுளை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி மற்றும் பொலநறுவை உள்ளிட்ட பல பிரதேசங்களில் பத்து நடமாடும் பணிகளை நடத்தியது. இந்நடமாடும் பணிகள் தொழில் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் தொடர்பான மாவட்ட/ பிரதேச செயலகம் போன்ற திணைக்களத்தினதும் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டன.

மேலும் ஊ.சே.நிதியத் திணைக்களம் எட்டு நடமாடும் சேவைகளை நடத்தியது. இந்நடமாடும் சேவை தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் ஒத்துழைப்புடன் கொழும்பு மாவட்டத்தில், ஆரம்பகட்ட ஊ.சே.நிதியம் தொடர்பான சேவைகளை வழங்குவதற்கு துணைபுரிகின்றது.

உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மூலமாக வழங்கப்பட்ட சேவைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன. ஊ.சே. நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல், ஊ.சே. நிதிய உறுப்பினர் விபரங்களையும் கணக்குகளையும் திருத்துதல், உறுப்பினர் விபரங்களை மீளப் பதிவுசெய்தல், கணனி வழி உறுப்பினர் பணிகளை ஊக்குவித்தல் அதாவது குறுந்தகவல் இணையத்தள விசாரணை வசதிகளை மேம்படுத்தல், ஆட்பதிவுத் திணைக்களத்தின் மூலம் தேசிய அடையாள அட்டைகளையும் தொடர்பான பணிகளையும் வழங்குதல், பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின் மூலம் பிறப்புச் சான்றிதழ்கள்/ வயது ஊகச் சான்றிதழ்கள்/ செல்லுபடியற்ற அறிக்கைகள் மற்றும் தொடர்பான பணிகளையும் வழங்குதல், ஊ.சே.நிதியத்தின் பொதுவான நடைமுறைகள் மீது ஆலோசனைகளை வழங்குதல்.

ஒவ்வொரு நடமாடும் பணி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் முன்னோடியாக, சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தொடர்பாக தொழில்தருநர்கள், முகாமையாளர்கள் மற்றும் தொடர்பான தொழில்தருநர்களின் ஏனைய நிர்வாக அலுவலர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நடமாடும் பணிகளின் காத்திரமானதன்மையினை உயர்த்தும் நோக்குடன் நடத்தப்பட்டன.

மேலும், நடமாடும் பணிகளுக்குச் சமாந்தரமான விதத்தில் உறுப்பினர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஆர்வலர்களை இலக்காகக் கொண்டு ஊ.சே. நிதியத்தினால் வழங்கப்படும் பணிகள் பற்றிய சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், வீடியோப் படங்கள் மற்றும் காட்சிப்படுத்தலுடன் கூடிய விளக்கவுரைகள் போன்ற பல தொடர்பூட்டல் ஊடகங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# ஊழியர் சேம நிதியம்
# வருமான செலவினக் கூற்று

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | குறிப்பு | 2016 நாணயச் சபை ரூ.'000 | 2016 தொழில் திணைக்களம் ரூ.'000 | 2016 மொத்தம் ரூ.'000 | 2015 மொத்தம் ரூ.'000 |
|---|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 5 | 165,485,417 | - | 165,485,417 | 143,055,071 |
| பங்கிலாப வருமானம் | 6 | 4,262,609 | - | 4,262,609 | 3,512,418 |
| நிதியியல் சொத்துக்களின் மீது பெறப்பட்ட மூலதன இலாபம் | 7 | 1,063,965 | - | 1,063,965 | 1,724,310 |
| முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களின் கடன் தீர்ப்பனவு இலாபம் | 8 | 28,170,893 | - | 28,170,893 | 26,590,827 |
| இலாபம்/ (இழப்பு) ஊடாக சந்தைப் பெறுமதியிலான நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (இழப்பு) | 9 | (842,114) | - | (842,114) | (393,998) |
| நிதியியல் சொத்துக்களின் பதிவழிப்பு | 10 | (5,231,637) | - | (5,231,637) | (2,956,641) |
| **முதலீட்டு வருமானம்** | | **192,909,133** | **-** | **192,909,133** | **171,531,987** |
| ஏனைய வருமானம் | 11 | 157,176 | 5,087 | 162,263 | 323,310 |
| **முழு மொத்த வருமானம்** | | **193,066,309** | **5,087** | **193,071,396** | **171,855,297** |
| தொழிற்பாட்டுச் செலவினங்கள் | 12 | (921,007) | (566,233) | (1,487,240) | (1,190,616) |
| **வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/ (இழப்பு)** | | **192,145,302** | **(561,146)** | **191,584,156** | **170,664,681** |
| வருமான வரிச் செலவு | 13 | (15,657,191) | - | (15,657,191) | (13,727,402) |
| **ஆண்டுக்கான இலாபம்/ (இழப்பு)** | | **176,488,111** | **(561,146)** | **175,926,965** | **156,937,279** |
| முன்கொண்டு வரப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | | | | 215,575 | 311,297 |
| **பகிர்ந்தளிப்புக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள இலாபம்** | | | | **176,142,540** | **157,248,576** |
| **இலாபப் பங்கீடுகள்** | | | | | |
| கழிக்குக: மீளளிப்புக்கள் தொடர்பில் செலுத்தப்பட்ட வட்டி - நடப்பாண்டு | | | | (4,645,766) | (2,833,014) |
| கூட்டுக/ (கழிக்குக): பங்கிலாப சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள்/ அதற்கான மாற்றல் | | | | 250,000 | |
| 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி - 10.50% (2015 - 10.50%) | | | | (171,557,433) | (154,199,987) |
| அடுத்த ஆண்டிற்காக முன்கொண்டு செல்லப்படும் நிலுவை | | | | **189,341** | **215,575** |

பக்கங்கள் 140 இலிருந்து 183 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.
இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.
நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கே. என். என். மல்காந்தி பண்டார
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2017 பெப்புருவரி 20

## ஊழியர் சேம நிதியம்
## அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | குறிப்பு | **2016** ரூ.'000 | **2015** ரூ.'000 |
|---|---|---|---|
| ஆண்டிற்கான இலாபம் | | 175,926,965 | 156,937,279 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியின் மாற்றங்கள் மீதான தேறிய இழப்பு | 14 | (8,180,733) | (8,013,908) |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | **167,746,232** | **148,923,371** |

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கே. என். என். மல்காந்தி பண்டார
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2017 பெப்புருவரி 20

# ஊழியர் சேம நிதியம்
# நிதியியல் நிலைமைக் கூற்று

| *2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு* | குறிப்பு | 2016<br>ரூ.'000 | 2015<br>ரூ.'000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் | 15 | 276,675 | 273,948 |
| அருவச் சொத்துக்கள் | 16 | 1,261 | 864 |
| நிதியியல் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டமூடாகச் சந்தைப் பெறுமதி | 17 | 14,222,501 | 3,703,036 |
| நிதியியல் சொத்துக்கள் - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை | 18 | 162,552,422 | 135,047,349 |
| நிதியியல் சொத்துக்கள் - முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை | 19 | 1,592,691,816 | 1,461,390,601 |
| நிதியியல் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் பெறத்தக்கவை | 20 | 2,745,000 | 4,100,000 |
| பொருட்பட்டியல் | | 9,286 | 34,587 |
| பெறத்தக்க வட்டி | | 54,435,170 | 47,992,397 |
| பெறத்தக்க பங்களிப்புக்கள் | | 10,794,640 | 8,988,745 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 21 | 2,976,568 | 2,910,820 |
| காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் | 22 | 4,385,242 | 3,691,577 |
| | | **1,845,090,581** | **1,668,133,924** |
| **பொறுப்புக்கள்** | | | |
| கடன் வழங்கியோர் | 23 | 1,980 | 3,961 |
| ஒன்றுசேர்ந்த செலவினங்கள் | | 185,065 | 396,657 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 24 | 3,406,489 | 2,880,889 |
| | | **3,593,534** | **3,281,507** |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | | **1,841,497,047** | **1,664,852,417** |
| உறுப்பினர் நிலுவைகளினால் காட்டப்பட்டவை | 25 | 1,810,594,518 | 1,625,492,921 |
| | | **1,810,594,518** | **1,625,492,921** |
| ஒதுக்கங்கள் | 26 | 30,713,188 | 39,143,921 |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | | 189,341 | 215,575 |
| | | **30,902,529** | **39,359,496** |
| **நிதியத்தின் மொத்தத் தேறிய பெறுமதி** | | **1,841,497,047** | **1,664,852,417** |

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கே. என். என். மல்காந்தி பண்டார
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2017 பெப்புருவரி 20

# ஊழியர் சேம நிதியம்
## பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக் கணக்குகள்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | குறிப்பு | 2016 | | | 2015 |
|---|---|---|---|---|---|
| | | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| ஆண்டின் ஆரம்பத்திலிருந்தான காசு மீதி | | 3,691,577 | 27,382 | 3,718,959 | 2,618,713 |
| மொத்தப் பெறுகைகள் | 27 | 332,451,661 | 616,189 | 333,067,850 | 311,790,946 |
| மொத்தக் கொடுப்பனவுகள் | 28 | (331,757,996) | (576,057) | (332,334,053) | (310,690,700) |
| **ஆண்டின் இறுதியிலிருந்தான காசு மீதி** | | **4,385,242** | **67,514** | **4,452,756** | **3,718,959** |

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கே. என். என். மல்காந்தி பண்டார
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2017 பெப்புருவரி 20

## ஊழியர் சேம நிதியம்
## முதலீடுகளின் கூற்று

| முதலீட்டின் வகுப்பு | குறிப்பு | முகப்புப் பெறுமதி ரூ.'000 | கிரயம் ரூ.'000 | பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூ.'000 | சந்தைப் பெறுமதி ரூ.'000 | ஏட்டுப் பெறுமதி ரூ.'000 |
|---|---|---|---|---|---|---|
| ***2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு*** | | | | | | |
| திறைசேரி முறிகள் | 17,18,19 | 1,737,219,190 | 1,569,333,652 | 1,619,623,282 | 1,498,488,396 | 1,611,629,158 |
| திறைசேரி உண்டியல்கள் | 18 | 41,056,824 | 37,980,948 | 38,424,111 | 38,815,227 | 38,815,227 |
| கம்பனித் தொகுதிக் கடன்கள் | 17,18,19 | 34,343,590 | 34,343,794 | 34,343,709 | 34,058,321 | 34,339,359 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | 19 | 4,499,810 | 3,397,594 | 3,832,592 | 3,832,592 | 3,832,592 |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் | 17,18 | - | 69,603,701 | 69,603,701 | 70,579,779 | 70,579,779 |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் | 18 | - | 10,270,625 | 10,270,625 | 10,270,625 | 10,270,625 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 20 | 2,745,000 | 2,745,000 | 2,745,000 | 2,745,000 | 2,745,000 |
| | | **1,819,864,415** | **1,727,675,314** | **1,778,843,021** | **1,658,789,940** | **1,772,211,740** |
| ***2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு*** | | | | | | |
| திறைசேரி முறிகள் | 17,18,19 | 1,612,461,341 | 1,442,536,353 | 1,487,297,477 | 1,562,120,452 | 1,487,004,275 |
| கம்பனித் தொகுதிக் கடன்கள் | 17,18,19 | 22,479,263 | 22,479,466 | 22,593,481 | 22,593,481 | 22,593,481 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | 19 | 3,346,402 | 2,475,227 | 2,929,796 | 2,929,796 | 2,929,796 |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் | 17,18 | - | 73,302,843 | 73,302,843 | 77,342,809 | 77,342,809 |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் | 18 | - | 10,270,625 | 10,270,625 | 10,270,625 | 10,270,625 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 20 | 4,100,000 | 4,100,000 | 4,100,000 | 4,100,000 | 4,100,000 |
| | | **1,642,387,006** | **1,555,164,515** | **1,600,494,222** | **1,679,357,164** | **1,604,240,986** |

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கே. என். என். மல்காந்தி பண்டார
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2017 பெப்புருவரி 20

## ஊழியர் சேம நிதியம்
## பங்குரிமை மூலதனத்தில்/ உறுப்பினர் செல்வத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று

| விபரங்கள் | உறுப்பினர் நிலுவை<br>ரூ.'000 | கட்டட ஒதுக்க நிதி<br>ரூ.'000 | தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்க நிதி<br>ரூ.'000 | இலாபச் சமப்படுத்தல் ஒதுக்க நிதி<br>ரூ.'000 | பொது ஒதுக்க நிதி<br>ரூ.'000 | முதலீட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்<br>ரூ.'000 | பிடித்து வைக்கப்பட்ட இலாபம்<br>ரூ.'000 | மொத்தம்<br>ரூ.'000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2015 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி** | 1,445,462,269 | 3,157,000 | 350,000 | 18,100,000 | 6,650,000 | 12,900,829 | 311,297 | 1,486,931,395 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | - | - | - | - | - | (8,013,908) | - | (8,013,908) |
| 2015ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | - | 156,937,279 | 156,937,279 |
| 2015ஆம் ஆண்டிற்கான தேறிய பங்களிப்புக்கள் | 25,830,665 | - | - | - | - | - | - | 25,830,665 |
| 2015இல் மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி | - | - | - | - | - | - | (2,833,014) | (2,833,014) |
| உறுப்பினர் வட்டி (2015: 10.50%) | 154,199,987 | - | - | - | - | - | (154,199,987) | - |
| செலுத்தப்படத்தக்க பங்கிலாபம் | - | - | - | 6,000,000 | - | - | - | 6,000,000 |
| இலாபச் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள் | - | - | - | - | - | - | - | - |
| **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி** | **1,625,492,921** | **3,157,000** | **350,000** | **24,100,000** | **6,650,000** | **4,886,921** | **215,575** | **1,664,852,417** |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | - | - | - | - | - | (8,180,733) | - | (8,180,733) |
| 2016ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | - | 175,926,965 | 175,926,965 |
| 2016ஆம் ஆண்டிற்கான தேறிய பங்களிப்புக்கள் | 13,544,164 | - | - | - | - | - | - | 13,544,164 |
| 2016இல் மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி | - | - | - | - | - | - | (4,645,766) | (4,645,766) |
| செலுத்தப்படத்தக்க உறுப்பினர் வட்டி (2016: 10.50%) | 171,557,433 | - | - | - | - | - | (171,557,433) | - |
| இலாபச் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள் | - | - | - | (250,000) | - | - | 250,000 | - |
| **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி** | **1,810,594,518** | **3,157,000** | **350,000** | **23,850,000** | **6,650,000** | **(3,293,812)** | **189,341** | **1,841,497,047** |

## ஊழிய சேம நிதியம்
## காசுப்பாய்ச்சல் கூற்று

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை விபரம்* | 2016 ரூ.'000 | 2015 ரூ.'000 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:** | | |
| முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி | 158,387,150 | 136,306,455 |
| பங்குரிமைப் பிணையங்களிலிருந்தான பங்கிலாபம் | 2,817,019 | 3,234,815 |
| தண்டப்பணம் மற்றும் ஏனைய வருமானம் | 153,281 | 327,431 |
| வர்த்தகப் பெறத்தக்கவைகளிலிருந்தான அறவீடுகள் | 1,088,846 | 36 |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவினம் | (1,069,243) | (747,547) |
| முற்பணக் கொடுப்பனவுகள் | (9,574) | (5,948) |
| கடன் வழங்கியோர் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவற்றின் தீர்ப்பனவுகள் | (2,927,373) | (2,648,346) |
| **தொழிற்பாடுகளிலிருந்தது உருவாக்கப்பட்ட காசு** | **158,440,106** | **136,466,896** |
| செலுத்தப்பட்ட வரிகள் | (7,869,247) | (15,293,504) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | **150,570,859** | **121,173,392** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:** | | |
| நிதியியல் சொத்துக்களில் முதலீடுகள் | (826,843,887) | (665,266,272) |
| முதலீடுகளின் முதிர்ச்சிகள் | 615,601,139 | 452,074,473 |
| நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான பெறுகைகள் | 51,531,146 | 68,113,346 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (48,329) | (290,337) |
| செயற்பாட்டிலுள்ள மூலதனம் | - | 370,000 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(159,759,931)** | **(144,998,790)** |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:** | | |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 118,326,507 | 102,453,320 |
| பொது வைப்புக்கள் | 16,723 | 246,853 |
| உறுப்பினர்களுக்கான மீளளிப்புக்கள் | (108,392,979) | (77,768,589) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | **9,950,251** | **24,931,584** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு** | **761,179** | **1,106,186** |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | 3,691,577 | 2,612,773 |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் - சீராக்கலின் முன் சீராக்கங்கள்:** | **4,452,756** | **3,718,959** |
| ஆண்டின் இறுதியிலுள்ள காசு மீதி - தொழில் திணைக்களம் | (67,514) | (27,382) |
| **ஆண்டின் இறுதியிலுள்ள காசும் காசுக்குச் சமமானவையும் (குறிப்பு அ)** | **4,385,242** | **3,691,577** |
| **குறிப்பு அ** | | |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் பகுப்பாய்வு | | |
| கையிலுள்ள காசு | 4 | 20 |
| வங்கியிலுள்ள காசு | 3,941,838 | 3,691,557 |
| இடைப்போக்கிலுள்ள காசு | 443,400 | - |
| | **4,385,242** | **3,691,577** |

## ஊழியர் சேம நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. கம்பனித் தகவல்கள்

1.1 *அறிக்கையிடுகின்ற நிறுவனம்*

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேம நிதியம் (ஊ.சே. நிதியம் அல்லது நிதியம்) என்பது இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கான கட்டாயப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றாகும். தொழில் ஆணையாளர் நிதியத்தின் பொது நிருவாகத்தராகத் தொழிற்படுகின்ற வேளையில், மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் நிதியத்தின் கட்டுக்காப்பாளராகச் செயற்படும் விதத்தில் அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்பாண்மைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியத் திணைக்களமானது, சட்டத்தின் மூலம் நாணயச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு அதற்கு வசதியளிக்கின்றது.

2. கணக்கீட்டிற்கான அடிப்படை

2.1 *இணங்குவிப்புக் கூற்று*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவத்தினால் ஆக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவும் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே.நிதியச் சட்டத்தின் 5(1)(ஏ) மற்றும் (ஐ)ஆம் பிரிவுகளின் நியதிகளில் நாணயச் சபை, நிதியம் தொடர்பான பொதுவான கணக்கினைப் பேணுமாறும் பின்வரும் நிதியியல் கூற்றுக்களை ஆண்டுதோறும் தயாரிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அ) வருமானம் மற்றும் செலவினக் கூற்று

ஆ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று

இ) பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கூற்று

ஈ) ஒவ்வொரு வகை முதலீட்டினதும் பெறுமதியினைக் காட்டும் முகப் பெறுமதிக் கொள்வனவு விலை மற்றும் சந்தைப் பெறுமதி என்பனவற்றைக் காட்டும் முதலீட்டுக் கூற்று

2.2 *நிதியியல் கூற்றிற்கான பொறுப்பாண்மை*

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே.நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி இலங்க மத்திய வங்கியின் நாணயச் சபை நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாக இருக்கின்றது.

2.3 *நிதியியல் கூற்றுக்களுக்கான நாணயச் சபையின் ஒப்புதல்*

2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை 2017 பெப்புருவரி 20ஆம் நாளன்று வெளியிடுவதற்கு பணிப்பாளர் சபைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

2.4 *தயாரிப்பிற்கான அடிப்படை*

கீழேயுள்ள குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் அடையாளம் காணப்பட்டவாறு, சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டிருக்கின்ற நிதியியல் சொத்துக்கள் நீங்கலாக, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

### 2.5 *தொழிற்படுகின்ற சமர்ப்பித்தல் நாணயம்*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் நிதியத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 2.6 *பொருண்மியத் தன்மையின் பயன்பாடு, எதிரீடு செய்தல் மற்றும் முழுத்தானமாக்குதல்*

*பொருண்மியத் தன்மை மற்றும் கூட்டுதல்*

ஒத்த விடயங்களின் ஒவ்வொரு பொருண்மிய வகுப்பும் நிதியியல் கூற்றுக்களில் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளன. வேறுபட்ட தன்மையைக் கொண்ட விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மியமற்றனவாக இருந்தாலொழிய தனித்தனியாகக் காட்டப்படுகின்றன.

*எதிரீடு செய்தல்*

நிதியியல் கூற்றுக்களிலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய, எதிரீடு செய்யப்படமாட்டா.

*முழுத்தானமாக்குதல்*

வேறுவிதமாக எடுத்துக்காட்டப்பாட்டலான்றி, நிதியியல் கூற்றுக்களிலுள்ள எண் தொகைகள் கிட்டிய ஆயிரம் ரூபாய்களுக்கு முழுத்தானமாக்கப்படுகின்றன.

### 2.7 *நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் பயன்பாடுகள்*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது நாணயச் சபையானது நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்கின்றது. அது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம், சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்துகை என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் அறிக்கையிடுகின்றது. நியாயப்படுத்தல்களும் மதிப்பீடுகளும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானவை என நம்பப்படும் எதிர்பார்ப்புக்கள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவத்தினையும் ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனவே, உண்மையான அனுபவமும் பெறுபேறுகளும் இந்நியாயப்படுத்தல்களிலிருந்தும் மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடலாம். மதிப்பீடுகளும் அடிப்படை எடுகோள்களும் தற்பொழுது இடம்பெற்றுவரும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் சாத்தியமான அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

இந்நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில் குறிப்பிடத்தக்களவு நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமிடத்து முகாமைத்துவம் பின்வரும் விடயங்களைப் பரிசீலனையில் கொள்கிறது.

*தொடர்ந்து செல்லும் கரிசனைகள்*

வியாபாரம் தொடர்ந்து செல்வதற்கான இயலாற்றலை நிதியம் கொண்டிருப்பதனை முகாமைத்துவம் மதிப்பீடு செய்திருப்பதுடன் கிட்டிய எதிர்காலத்தில் வியாபாரத்தினைத் தொடர்வதற்கான மூலவளங்களையிட்டும் அது திருப்தியடைந்திருக்கிறது. எனவே, நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் கரிசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட கணக்கீட்டு நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பன பயன்படுத்தப்பட்டமைக்குப் புறம்பாக, பின்வருவன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- நிதியியல் சாதனங்களின் மதிப்பீடு
- சொத்துக்களின் பெறுமதி இழத்தல்

- சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் தேய்மானம்
- பொறுப்புக்களுக்கான ஏற்பாடு

### 2.8 *அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்*

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழ்ந்த அனைத்துப் பொருண்மை வாய்ந்த சம்பவங்களும் பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளன. அறியவந்த அனைத்துப் பொறுப்புக்களுக்காகவும் ஏற்பாடுகளும் தொடர்பான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 3.1 *வருமானம் மற்றும் செலவினங்களை அங்கீகரித்தல்*

வருமானம் என்பது பொருளாதார நன்மைகள் நிதியத்திற்குப் பாயக்கூடிய சாத்தியப்பாடுகளைக் கொண்ட அளவிற்கும் வருமானத்தினை நம்பகமாக அளவிடக்கூடிய அளவிற்கும் அங்கீகரிக்கப்படுகின்றது. செலவினங்கள், உறப்பட்ட செலவு மற்றும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயத்தின் வருவாய் என்பனவற்றிற்கிடையிலான நேரடித் தொடர்புகளின் அடிப்படையில் வருமானக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்களத்தினாலும் தொழில் திணைக்களத்தின் ஊ.சே. நிதியப் பிரிவினாலும் நிதியத்தினை முகாமைப்படுத்துவது தொடர்பில் ஏற்படும் அனைத்துச் செலவினங்களும் நிதியத்தின் செலவினங்களாகக் கருதப்பட்டு அதன் மீது விதிக்கப்படுகின்றன.

#### *3.1.1 வட்டி வருமானம்*

பெறுமதி இழப்புக்களைக் கழித்த உண்மையான கொள்வனவு விலைகளின் அடிப்படையில், பயனுறு விளைவு முறையினைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் சாதனங்களுக்குமான வட்டி வருமானம் வருமானக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்றது. வட்டி வருமானமானது நறுக்கு வருமானம் மற்றும் சாதனங்களின் கழிவிடல் தீர்ப்பனவு அல்லது மிகை மதிப்பு மீது ஏற்படும் ஏதேனும் இலாபம் அல்லது இழப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

#### *3.1.2 பங்கிலாபங்கள்*

நிதியம் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிலைநிறுத்தப்படுகின்ற வேளையில் பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. பங்கிலாப வருமானம் ஏதேனும் அளவிடமுடியாத பிடித்துவைத்தல் வரிகளின் மொத்தத்தில் காட்டப்படுகின்றது.

#### *3.1.3 வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான இலாபம்*

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான இலாபம் அரச பிணையங்களின் விற்பனை மீது பெறப்பட்ட வர்த்தக இலாபங்களையும் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பங்குகளையும் பட்டியலிடப்பட்ட தொகுதிக் கடன்களையும் உள்ளடக்கியிருப்பதுடன் வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் இலாபம் அல்லது இழப்பூடாக சந்தை விலைகளில் நிதியியல் முதலீடுகளின் விற்பனையாக நேரடி முதலீடுகளில் காட்டப்படுகின்றது.

#### *3.1.4 விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளின் அகற்றல் மீதான இலாபம்*

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கது என வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதனப் பிணையங்களிலுள்ள நிதியியல் முதலீடுகளின் அகற்றல் மீது பெறப்பட்ட மூலதன இலாபங்களை உள்ளடக்கிய விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளின் அகற்றல் மீதான இலாபம், வருமான மற்றும் செலவினக் கூற்றின் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கும் நிதியியல் முதலீட்டு அகற்றலாக நேரடி வருமானத்தில் காட்டப்படுகின்றது.

#### 3.1.5 *வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் முதலீடுகளின் சந்தைப் பெறுமதி மீதான இலாபம்*

அரச பிணையங்கள், விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பட்டியற்படுத்தப்பட்ட பங்குகள் என்பனவற்றின் சந்தைப் பெறுமதியின் (சந்தைப்படியான பெறுமதி) மீதான தேறல் செய்யப்படாத இலாபத்தினை உள்ளடக்கிய வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள் மீதான சந்தைப் பெறுமதியின் மாற்றங்கள் வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் முதலீடுகளின் சந்தைப் பெறுமதியின் மீதான இலாபமாக அல்லது இழப்பாகக் காட்டப்படுகின்றன.

#### 3.1.6 *ஆளணிச் செலவுகள்*

ஆளணிச் செலவுகள் இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களத்தின் ஊ.சே. நிதியப் பிரிவு ஆகிய இரண்டினாலும் கூறப்பட்ட அனைத்து அலுவலர்களுடனும் தொடர்பான செலவுகளை உள்ளடக்குகிறது. இந்நிதியமானது தனியான ஓய்வூதிய நிதியத்தினையோ அல்லது தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டத்தினையோ பேணவில்லை.

#### 3.1.7. *வருமான வரி*

வருமான வரியானது, முதலீட்டு வருமானத்தின் மீது செலுத்தத்தக்க வரியின் அளவிற்கு கணிக்கப்படுகிறது. நிதியத்தின் வருமான வரிப் பொறுப்பானது வட்டி, பங்கிலாபம் மற்றும் தேறிய மேலதிக விதிப்பு ஆகிய வடிவங்களில் உழைக்கப்பட்ட மொத்த வருமானத்தில் 10 சதவீதமாகும். உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்படி, திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் பங்குகள் வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளமையினால் அவற்றின் மீது உழைக்கப்பட்ட மூலதன இலாபங்கள் மீது பொறுப்புக்கள் எதுவுமில்லை.

ஊ.சே. நிதியம் திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல் சொத்துப்பட்டியலினை வரிக்குப் பின்னைய நிறையேற்றப்பட்ட சராசரி செலவில் மதிப்பிடும் விதத்திலும் அதன் பின்னர் தேய்மானம் செய்யும் விதத்திலும் அதன் கணக்கீட்டுக் கொள்கையினை மாற்றிவிட்டமையின் காரணமாக (2006.09.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில்), தேய்மான இலாபம் வரியைக் கழித்து பதிவு செய்யப்பட்டது.

இதன்படி, ஆண்டிற்கான திறைசேரி முறி மற்றும் உண்டியல்கள் மீது உழைக்கப்பட்ட வருமானத்திற்கு ஏற்புடைத்தான பிடித்துவைத்தல் வரியின் விகிதமானது தேய்மான இலாபம் மற்றும் வருமான வரிச் செலவு என்பன பற்றிய நியாயமான பார்வையொன்றினை வழங்கும் விதத்தில் தேய்மான இலாபக் கணக்கிற்கு மீண்டும் சேர்க்கப்பட்டது.

### 3.2 சொத்துக்கள்

#### 3.2.1 *நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப அங்கீகரிப்பு, வகைப்படுத்தல் மற்றும் அதன் பின்னரான அளவீடுகள்*

##### 3.2.1.1 அங்கீகரிக்கும் திகதி

நிதியியல் சாதனங்களின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக நிதியங்கள் மாற்றமடையும் பொழுது மாத்திரமே நிதியியல் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

##### 3.2.1.2 நிதியியல் சாதனங்களின் ஆரம்ப அளவிடுதல்கள்

ஆரம்ப அங்கீகரிப்பில் நிதியியல் சாதனங்களின் பகுப்பாய்வு அவற்றின் நோக்கம், பண்புகள் மற்றும் அவற்றைக் கையேற்பதிலுள்ள முகாமைத்துவ உள்நோக்கம் என்பனவற்றில் தங்கியிருக்கிறது.

அனைத்து நிதியியல் சாதனங்களும், நிதியியல் சாதனங்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமம் - 39 இன்படி, இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதியான நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களைப் பொறுத்தவரை அவை நீங்கலாக, அத்தகைய நிதியியல் சாதனங்களின் கையேற்பு அல்லது வழங்கலுடன்

நேரடியாகச் சேர்க்கப்படுகின்ற அவற்றின் சந்தைப் பெறுமதி மற்றும் கொடுக்கல்வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன. நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல் செலவுகள் இலாபம் அல்லது நட்டமூடாக சந்தைப் பெறுமதியில் வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் கையாளப்படுகின்றன.

### 3.2.1.3 'நாள் 1' இலாபம் அல்லது நட்டம்

கொடுக்கல்வாங்கல் விலை அதே சாதனத்திலுள்ள ஏனைய அவதானிக்கத்தக்க நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து அல்லது மதிப்பீட்டு நுணுக்கங்களின் அடிப்படையில் வேறுபடும் பொழுது, இவற்றின் மாறிகள் அவதானிக்கத்தக்க சந்தைகளிலிருந்தான தரவுகள் தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல் மற்றும் சந்தைப் பெறுமதிகளுக்கிடையிலான இலாபம்/ (நட்டம்) இல் (நாள் 1 இலாபம் அல்லது நட்டம்) வேறுபாடுகளை நிதிகள் அங்கீகரிக்கின்றன. அவதானிக்கப்படாத தரவுகளைப் பயன்படுத்தி சந்தைப் பெறுமதிகள் தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பத்தில் உள்ளீடுகள் அவதானிக்கத்தக்கனவாக மாறும் பொழுது அல்லது சாதனங்கள் அங்கீகரிக்கப்படாத பொழுது கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் மாத்திரம் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 3.2.1.4 நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவிடுதலும்

நிதியமானது, நிதியியல் சொத்துக்களைப் பின்வரும் வகைகளுள் ஒன்றாக வகைப்படுத்துகின்றது

i) இலாபம் அல்லது இழப்பினூடான சந்தைப் பெறுமதியில் நிதியியல் சொத்துக்கள்

இலாபம் அல்லது இழப்பினூடான சந்தைப் பெறுமதியில் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வகை பின்வரும் துணைப் பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன:

வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்: நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் விற்பனை செய்யப்படுவதற்காக அத்துடன்/ அல்லது அண்மைய காலத்தில் மீள்கொள்வனவு செய்யப்படுவதற்காக கையேற்கப்பட்டிருக்குமிடத்து அவை வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வகையானது பங்குரிமை மூலதனங்கள், தொகுதிக் கடன்கள் மற்றும் ஏனைய வட்டி உழைக்கும் முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது. இச்சொத்துக்கள் முக்கியமாக குறுங்கால விலைத் தளம்பல்களிலிருந்து இலாபத்தினை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டனவாகும்.

ஆரம்ப அங்கீகரிப்பினைத் தொடர்ந்து இலாபம் அல்லது இழப்பினூடான சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள்: இந்நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதியத்தின் முன்வைக்கப்பட்ட ஆவணங்களில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் முதலீட்டு உபாயங்களுக்கிணங்க, அவை முகாமைப்படுத்தப்பட்டு, அவற்றின் செயலாற்றம் சந்தைப் பெறுமதி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் ஆரம்ப அங்கீகரிப்பொன்றினைத் தொடர்ந்து குறித்துரைக்கப்படுகின்றன.

இலாபம் அல்லது இழப்பினூடான சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள் பின்னர் சந்தைப் பெறுமதிகளினால் எடுத்துக்காட்டப்பட்டவாறான சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டன. சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்கள் பிணையங்களின் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் அல்லது வீழ்ச்சிகளாக அங்கீகரிக்கப்பட்ட வேளையில் வருமான செலவினக் கூற்றில் தேறிய இலாபமாகவும் இழப்புக்களாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன.

ii) கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பது, தீவிரமான சந்தையொன்றில் விலைக்குறிப்பீடு செய்யப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுமதிகளல்லாத நிதியியல் சொத்துக்களாக இருப்பதுடன் அந்நிதியங்கள் உடனடியாக அல்லது அண்மைய காலத்தில் விற்பனை செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படாதவையுமாகும். மீளவிற்பனை செய்யப்படுவதற்காக (நேர்மாற்று மீள்கொள்வனவு) உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள், கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் ஏதேனும் பெறுமதி இழப்பிற்கானவற்றைக் கழித்து, பயனுறு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றது. இலாபமும் இழப்புக்களும் வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

iii) முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள்

முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் என்பது நிலையான அல்லது நிர்ணயிக்கப்படத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதிகளல்லாத சொத்துக்கள் எனப்படுவதுடன் நிலையான முதிர்ச்சியைக் கொண்டிருக்கும் நிதியமானது சாதக நோக்கினையும் முதிர்ச்சி வரை வைத்திருப்பதற்கான இயலாற்றலையும் கொண்டிருப்பதுடன் இது இலாபம் அல்லது இழப்பூடாக சந்தைப் பெறுமதியிலோ அல்லது விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை போன்றோ குறித்துரைக்கப்படவில்லை.

முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் பின்னர் ஏதேனும் பெறுமதி இழப்புக்கள் இருப்பின் அதனைக் கழித்து பயனுறு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகளைக் கொள்வனவு செய்வதன் மீது ஏற்படுகின்ற கட்டணங்கள் மற்றும் கழிவிடல்கள் அவற்றின் பயனுறு வட்டி வீதங்களின் கணிப்பில் உள்ளடக்கப்படுகின்றன. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் நீக்கப்படும் பொழுது அல்லது பெறுமதி இழக்கும் பொழுது இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகளின் சொற்ப தொகையிலும் பார்க்கக் கூடுதலான தொகைகளின் விற்பனை அல்லது மீள்வகைப்படுத்தல், அனைத்து முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகளையும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவைகளாக மீள்வகைப்படுத்தப்படுவதுடன், நடைமுறையாண்டிலும் மற்றும் அடுத்துவரும் இரண்டு நிதியாண்டுகளுக்கும் முதலீட்டுப் பிணையங்களை முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படுவையாக மீள்வகைப்படுத்துவதிலிருந்தும் நிதியத்தினை தடை செய்கின்றன.

iv) விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்கள்

விற்பனைக்குக் கிடைக்கத்தக்க முதலீடுகள் என்பது பெறுதிகளற்ற முதலீடுகளாக இருப்பதுடன் அவை விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவையாக குறித்துரைக்கப்படவோ அல்லது நிதியியல் சொத்துக்களின் இன்னொரு வகையாக வகைப்படுத்தப்படவோ இல்லை. விற்பனைக்குக் கிடைக்கத்தக்க முதலீடுகள் அரச பிணையங்கள், பங்குரிமை மூலதனப் பிணையங்கள் மற்றும் படுகடன் பிணையங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துக்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் சந்தைப் பெறுமதியிலேயே தொடர்ந்தும் அளவிடப்படுகின்றன. விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துக்கள் விற்கப்படும் வரை அல்லது பெறுமதியிழக்கும் வரை விற்பனைக்குக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்களில் ஏற்படும் சந்தைப் பெறுமதியில் மாற்றங்கள் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் கீழ் அங்கீகரிக்கப்படுவதுடன் மீள்மதிப்பீட்டு ஒதுக்குகளூடாக உறுப்பினர் செல்வத்தின் கீழ் ஒன்றுசேர்க்கப்படுகின்றன. நம்பகமான முறையில் சந்தைப் பெறுமதியினை மதிப்பிட முடியாமல் இருக்கும் விலைக்குறிப்பீடு செய்யப்படாத பங்குரிமை மூலதனப்

பிணையங்கள் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன. வட்டி வருமானம் பயனுறு வட்டி முறையினைப் பயன்படுத்தி இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகின்றன. நிதியம், பங்கிலாபத்திற்கு உரித்துடையதாக மாறும் பொழுது பங்கிலாப வருமானம் இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகின்றன. முதலீடுகள் விற்கப்படும் பொழுது பங்குரிமை மூலதனத்தில் ஒன்றுசேர்க்கப்படும் இலாபம் அல்லது இழப்பு, இலாபம் அல்லது இழப்பாக மீளவகைப்படுத்தப்படுகிறது.

### 3.2.1.5 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், நிதியியல் சொத்துக்களின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க பெறுமதி இழப்புக்கள் ஏதேனும் ஏற்பட்டுள்ளனவா என்பதனைக் கண்டறிவதற்காக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெறுமதியிழப்புக்களின் மூலம் இழப்புக்கள் அங்கீகரிக்கப்படுமிடத்து, நிதியியல் சொத்தின் (இழப்பு நிகழ்வு) ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் ஏற்பட்ட ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான நிகழ்வுகளின் விளைவாக பெறுமதி இழப்புக்களுக்கான சான்றுகள் காணப்படுகின்றதுடன், அவ்விழப்பு நிகழ்வு (அல்லது நிகழ்வு) நம்பகரமான முறையில் மதிப்பிடத்தக்க நிதியியல் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் மீது தாக்கமொன்றினைக் கொண்டிருக்கின்றது.

பிணையங்களின் பெறுமதி இழப்புக்கள் பற்றிய குறிப்பிடத்தக்க சான்றுகள் வழங்குநரின் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடுகள் போன்ற வழங்குநர் பற்றிய குறித்துரைக்கப்பட்ட தகவல்கள், முறிவடைதல், வங்கி முறிவு அல்லது ஏனைய நிதியியல் இடர்ப்பாடுகள் போன்ற ஒப்பந்தங்களை மீறுதல் போன்றவற்றை மட்டுமல்லாது பிணையங்களின் செலவுகளை மீளப்பெற முடியாது என்பதற்கு சான்றுகளை வழங்குகின்ற சந்தை நிலைமைகளில் ஏற்படுகின்ற குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பற்றிய தகவல்களையும் உள்ளடக்கலாம். சொத்துக்களின் சந்தைப் பெறுமதி அதன் செலவிற்கும் குறைவாக குறிப்பிடத்தக்களவில் அல்லது நீண்ட காலத்திற்கு வீழ்ச்சியடைவது பெறுமதி இழப்பிற்கான குறிப்பிடத்தக்க சான்றாக விளங்குகின்றது. இது குறிப்பிடத்தக்கதொன்றா என்பதனை மதிப்பிடுகையில், சந்தைப் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சி, ஆரம்ப அங்கீகரிப்பில் சொத்துக்களின் ஆரம்ப செலவிற்கெதிராக மதிப்பிடப்படுகிறது. இது நீண்ட காலமாக இருக்கின்றதா என்பதனை மதிப்பிடுகையில், வீழ்ச்சி, சொத்தின் சந்தைப் பெறுமதி ஆரம்ப அங்கீகரிப்பின் போதான அதன் ஆரம்பச் செலவிற்கும் கீழாக வீழ்ச்சியடைந்த காலப்பகுதிக்கெதிராக மதிப்பிடப்படுகிறது.

### 3.2.1.6 அங்கீகரிக்கப்படாத நிதியியல் சொத்துக்கள்

சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரிமை கலாவதியாகியிருக்கும் பொழுது அல்லது நிதியியல் சொத்துக்களின் காசுப் பாய்ச்சலைப் பெறுவதற்காக நிதியம் அதன் ஒப்பந்த ரீதியான உரிமையினை மாற்றம் செய்யும் பொழுது நிதியியல் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாதுவிடப்படுகின்றன. அத்துடன் ஒன்றில்:

- சொத்துடமையின் கணிசமான அனைத்து இடர்நேர்வுகளும் வெகுமதிகளும் மாற்றல் செய்யப்படுகின்றன; அல்லது
- சொத்துடமையின் அல்லது கணிசமான அனைத்து இடர்நேர்வுகளும் வெகுமதிகளும் நிதியத்தினால் பிடித்துவைக்கப்படவோ அல்லது மாற்றல் செய்யப்படவோ இல்லையெனினும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை.

பொறுப்பின் கீழான கடப்பாடு ஆற்றப்படும் பொழுது, இரத்துச் செய்யப்படும் பொழுது அல்லது காலாவதியாகும் பொழுது நிதியியல் பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படாது விடப்படுகின்றன.

### 3.2.1.7 நிதியியல் சொத்துக்கள் பொறுப்புக்களை எதிரீடு செய்தல்

அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கு தற்பொழுது நடைமுறைப்படுத்தத்தக்கதான சட்ட உரிமைகள் கிடைக்கத்தக்கதாக இருப்பின் அத்துடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு

செய்வதற்கான நோக்கம் இருப்பின் அல்லது சொத்துக்கள் பெறப்பட்டு பொறுப்புக்கள் சமகாலத்தில் தீர்ப்பனவு செய்யப்படுமிடத்து மாத்திரம் நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதுடன் தேறிய தொகை, ஏதேனுமிருப்பின் நிதியியல் நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படுகின்றது.

### 3.2.2 சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்

*அங்கீகரித்தல்*

சொத்துக்களுடன் இணைந்த எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிதியத்திற்கு பாயக்கூடிய தன்மையும் சொத்துக்களின் செலவினை நம்பகமாக அளவிடக்கூடிய சாத்தியமும் காணப்படுமிடத்து சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

*அளவிடுதல்*

அனைத்துச் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் ஆரம்பத்தில் அவற்றின் செலவில் அளவிடப்படுகின்றன. செலவானது சொத்துக்களின் கொள்வனவு மற்றும் அதன் பின்னரான செலவினையும் (பின்னரான செலவுகளில் விளக்கப்பட்டவாறு) நேரடியான காரணங்களினால் ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்குகிறது. தொடர்பான சாதனங்களின் தொழிற்பாடுகளின் இன்றியமையாத விடயமான மென்பொருளின் கொள்வனவு சாதனங்களின் ஒரு பகுதியாகக் காட்டப்பட்டிருக்கிறது.

*செலவு மாதிரி*

ஒன்றுசேர்ந்த தேய்மானம் அல்லது ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பு ஏதுமிருப்பின், அது நீங்கலான செலவில் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் குறிப்பிடப்படுகின்றன. சொத்தொன்றின் ஏட்டுப் பெறுமதி, அளவிடத்தக்க மதிப்பிடப்பட்ட தொகையினைவிட உயர்வாக இருக்கும் பொழுது ஏட்டுப் பெறுமதி அதன் அளவிடத்தக்க தொகையளவிற்குக் குறைத்துப் பதியப்படுகிறது (தயவுசெய்து குறிப்பு 3.2.6 - நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழப்பினைப் பார்க்கவும்).

*பின்னரான செலவுகள்*

சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் குறிப்பிடத்தக்களவான பகுதி கிரமமான இடைவெளிகளில் பதிலீடு செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படும் வேளையில் நிதியமானது பதிலீடு செய்யப்பட்ட பகுதியினை அங்கீகரிக்காது விடுவதுடன், புதிய பகுதியினை அதனுடன் இணைந்த ஆயுள் காலப்பகுதிக்கு அங்கீகரிப்பதுடன், அதற்கேற்றவாறு தேய்மானம் செய்யப்படுகின்றது. இடம்பெற்று வருகின்ற திருத்தல் மற்றும் பேணல் செலவுகள் அவை ஏற்படுவதனைப் பொறுத்து இலாபம் அல்லது இழப்பில் விதிக்கப்படுகின்றன.

*அங்கீகரிக்காதுவிடல்*

சொத்து, பொறி மற்றும் சாதனத்தின் விடயமொன்று விற்பனை, அகற்றுதல் அல்லது இதன் பயன்பாட்டிலிருந்து எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத பொழுது அவை அங்கீகரிக்கப்படாது விடப்படுகின்றன. சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாமையிலிருந்து எழுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது இழப்பு, சொத்து அங்கீகரிக்கப்படாத காலப்பகுதியின் இலாபம் அல்லது இழப்பில் உள்ளடக்கப்படுகிறது.

*தேய்மானம்*

தேய்மானமானது சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட ஆயுள் காலப்பகுதியில் நேர்கோட்டு முறையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சொத்தொன்றின் தேய்மானமானது இது பயன்படுவதற்கு கிடைக்கின்ற திகதியிலிருந்து அல்லது சுயமாக உருவாக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் சொத்து நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு ஆயத்தமாக இருந்த திகதியிலிருந்து ஆரம்பமாகின்றது. தேய்மானமானது

சொத்துக்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டது என வகைப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து அல்லது சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாத திகதியிலிருந்து நிறுத்தப்படுகின்றன.

சொத்துக்களின் தேய்மானத்தின் மதிப்பிடப்பட்ட வீதங்கள் வருமாறு;

| சொத்துக்களின் வகுப்பு | தேய்மான வீதம் |
|---|---|
| கட்டடம் | 02% |
| பொறிகள் மற்றும் பொறித் தொகுதிகள் | 25% |
| அலுவலகச் சாதனங்கள் | 25% |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 10% |
| உந்து ஊர்திகள் | 20% |
| கணனிச் சாதனங்கள் | 50% |
| ஏனையவை | 20% |

எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க ஆயுள்காலம் மற்றும் தேய்மானத்தின் முறை என்பன ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமானவிடத்து சீராக்கம் செய்யப்படுகின்றன.

*தொழிற்பாட்டிலுள்ள மூலதனம்*

தொழிற்பாட்டிலுள்ள மூலதனம் செலவில் குறிப்பிடுகின்றதுடன் இது ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்புக்களைக் கழித்த கடன்பாட்டுச் செலவினை உள்ளடக்குகிறது. இவை, சொத்துக்கள் நிறைவடைந்து பயன்பாட்டிற்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கும் பொழுது, அதாவது முகாமைத்துவத்தினால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் தொழிற்பாட்டிற்கு இயலத்தக்கதான விதத்தில் தேவையான அமைவிடத்தினையும் நிலைமைகளையும் கொண்டிருக்கும் போது சொத்து, பொறி மற்றும் சாதனங்கள் தொடர்பான சொத்து வகைக்கு மாற்றல் செய்யப்படும்.

### *3.2.3 அருவச் சொத்துக்கள்*

கணனி வன்பொருளில் ஒருங்கிணைக்கப்படாத கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டுள்ளதுடன் செலவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பினைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகாலப் பயனுள்ள ஆயுள் கால அடிப்படையில் செலவிலிருந்து ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பைக் கழித்த பெறுமதியில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

### *3.2.4 இருப்புக்கள்*

இருப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரிச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன. மெதுவான நகர்வினைக் கொண்ட இருப்புக்களுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### *3.2.5 பெறத்தக்கவை*

பெறுமதியிழப்பிற்கான ஏற்பாட்டினை செய்த பின்னர் எதிர்பார்க்கப்படும் தேறத்தக்க பெறுமதியில் பெறத்தக்கவை கொண்டு செல்லப்படுகின்றன. அனைத்துப் பெறத்தக்கவைகளும் புலப்படத்தக்க சான்றுகளைக் கருத்தில் கொண்ட குறிப்பிடத்தக்க பெறுமதியிழப்பிற்காக அனைத்துப் பெறத்தக்கவைகளும் மதிப்பிடப்படுகின்றன.

### *3.2.6 நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு*

சூழ்நிலைகளில் ஏற்படும் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள், நிதியல்லாச் சொத்துக்கள் பெறுமதியினை இழக்கக்கூடும் என்பதற்கான அறிகுறியொன்றினை எடுத்துக்காட்டுமாயின் ஒவ்வொரு நிதியியல் கால முடிவிலும் நிதியம் மதிப்பீடு செய்யப்படுகிறது. அத்தகைய அறிகுறிகள் காணப்படுமாயின் சொத்துக்களின் மீளப்பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றினை நிதியம் மேற்கொள்ளும். சொத்தொன்றின் கொண்டு செல்லக்கூடிய தொகை அதன் மீளப்பெறக்கூடிய தொகையினை விஞ்சுமாயின் அச்சொத்தானது பெறுமதியிழந்ததாகக் கருதப்பட்டு அது அதன் அறவிடத்தக்க தொகைக்கு குறைத்து எழுதப்படும்.

### *3.3 பொறுப்புக்கள்*

#### *3.3.1 கோரப்படாத நன்மைகள்*

ஊ.சே. நிதிய நன்மைகள் அதன் உறுப்பினர்களுக்கோ அல்லது அதன் நன்மைபெறுநர்களுக்கோ உரிய முறையில் மீளளிக்கப்படுகின்றன. எனினும், மாறாக பல்வேறு காரணங்களினால் திருப்பியனுப்பப்பட்டு ஓராண்டிற்கும் மேலாக பிடித்துவைக்கப்பட்ட நன்மைகள் கணக்கில் பிடித்துவைக்கப்பட்டுள்ள தொகைகள் அவை மீளக்கோரப்படும் வரை கோரப்படாத நன்மைகள் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

#### *3.3.2 பிடித்துவைக்கப்பட்ட நன்மைகள்*

தொழில் ஆணையாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் பிடித்துவைக்கப்பட்ட ஊழியர் சேம நிதிய நன்மைகள் அவற்றை விடுவிக்குமாறு கோரும் அறிவித்தல் பெறப்படும் வரை பிடித்துவைக்கப்பட்ட நன்மைகளாகக் காட்டப்படுகின்றன. அத்தகைய வரவுகள் இக்கணக்கில் ஒரு கணக்கீட்டு காலப்பகுதிக்கும் மேலாக பிடித்துவைக்கப்பட்டிருப்பதில்லை.

#### *3.3.3 குறைக் கொடுப்பனவு மற்றும் மிகைக் கொடுப்பனவுகள் (மீளளிப்புக்கள்)*

குறைக் கொடுப்பனவு மற்றும் மிகைக் கொடுப்பனவுகள் (மீளளிப்புக்கள்) கணக்கில் காட்டப்படுகின்ற மீதிகள் பகுதிக் கொடுப்பனவாக மேற்கொள்ளப்படவுள்ள நன்மைகளின் கொடுப்பனவினைப் பிரதிபலிக்கின்றன.

#### *3.3.4 குறைக் கொடுப்பனவு மற்றும் மிகைக் கொடுப்பனவுகள் (பங்களிப்புக்கள்)*

குறைக் கொடுப்பனவு மற்றும் மிகைக் கொடுப்பனவுகள் (பங்களிப்புக்கள்) கணக்கில் காட்டப்படுகின்ற மீதிகள் பங்களிப்பின் பெறுகைகளைக் காட்டுகின்றன.

#### *3.3.5 ஏற்பாடுகள்*

கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக நிதியம் தற்பொழுது கடப்பாடொன்றினை (சட்ட ரீதியாக அல்லது அமைப்பு ரீதியாக) கொண்டிருந்து அக்கடப்பாட்டைத் தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் பெரும்பாலும் தேவைப்படுத்துவதுடன் கடப்பாட்டுத் தொகையினை நம்பகமான மதிப்பீடொன்றின் மூலம் மேற்கொள்ள முடியுமாயுள்ள போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

#### *3.3.6 பொறுப்புக்களை அங்கீகரிக்காதுவிடல்*

நிதியியல் பொறுப்புக்கள் தணிக்கப்படும் பொழுது அதாவது கடப்பாடுகள் நிறைவேற்றப்படும் பொழுது, இரத்துச் செய்யப்படும் பொழுது அல்லது கலாவதியாகும் பொழுது அவை அங்கீகரிக்காதுவிடப்படுகின்றன.

### *3.4 வருமானக் கூற்று*

ஊ.சே. நிதியம் அதன் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினையும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினையும் காட்டுவதற்காக இரண்டு தனித்தனியான கூற்றுக்களை அதாவது வருமானம் மற்றும் செலவினக் கூற்று மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று என்பனவற்றினைத் தயாரிக்கின்றது.

### *3.5 காசுப்பாய்ச்சல் கூற்று*

காசுப் பாய்ச்சல் கூற்றானது, இலங்கை கணக்கீட்டு நியமம் 07 - காசுப் பாய்ச்சல் கூற்றிற்கிணங்க காசுப் பாய்ச்சலைத் தயாரிக்கும் “நேரடி முறை” இனைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கிறது. காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் குறுங்காலம், உயர்ந்த திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் அதாவது உடனடியாக காசாக மாற்றக்கூடியவற்றையும் மாற்றத்தின் போது பெறுமதியில் மிகக் குறைந்த இடர்நேர்வுகளைக் கொண்ட தன்மைகளுக்குட்பட்டவற்றையும் உள்ளடக்கியிருந்தன.

*3.6 பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கு*

பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக் கூற்றுக்கள், இவ்வாண்டுப் பகுதியில் காசு வடிவில் பெறப்பட்ட அனைத்துப் பெறுகைகளையும் இவ்வாண்டுப் பகுதியில் காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளையும் பிரதிபலிக்கிறது.

*3.7 ஒப்பீட்டுத் தகவல்*

முன்னய ஆண்டுகளின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பானவைகளாக இருக்குமிடத்து சிறந்த முறையில் காட்டப்படுவதற்காகவும் நடைமுறையாண்டுடன் அவற்றை ஒப்பிடுவதற்காகவும் சமர்ப்பித்தலும் வகைப்படுத்தலும் திருத்தப்பட்டன.

**4. புதிய நியமங்கள் விடுக்கப்பட்ட போதும் அறிக்கையிடும் நாள் வரை அவை நடைமுறைக்கிடப்படவில்லை**

அறிக்கையிடும் நாள் வரை நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்ற பல புதிய நியமங்களும் நியமங்களுக்கான திருத்தங்களும் இந்நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி, இந்நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பிரயோகிக்கப்படாத பின்வரும் கணக்கீட்டு நியமங்களை தொடர்பான நடைமுறைத் திகதிகளில் பிரயோகிப்பதற்கு நிதியம் திட்டமிட்டிருக்கிறது.

***கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 09 "நிதியியல் சாதனங்கள்"***

**தேவைப்பாடுகளின் சுருக்கம்**

2014இல் விடுக்கப்பட்ட இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9, இலங்கை கணக்கீட்டு நியமம் 39 நிதியியல் சாதனங்களில் தற்போதுள்ள வழிகாட்டல்களுக்குப் பதிலானதாகும். அங்கீரித்தலும் அளவிடுதலும். இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9, நிதியியல் சொத்துக்கள் தொடர்பில் பெறுமதியிழத்தலைக் கணிப்பதற்கான புதிய எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரி மற்றும் புதிய பொதுவான கட்டுக்காப்பு கணக்கீட்டுத் தேவைப்பாடுகள் உட்பட நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடுதல் மீதான திருத்தப்பட்ட வழிகாட்டலை உள்ளடக்குகிறது. நிதியியல் சாதனங்களின் அங்கீகரித்தல் மற்றும் அங்கீகரிக்காதுவிடல் தொடர்பான வழிகாட்டல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இலிருந்து கொண்டு செல்கிறது.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9, 2018 சனவரி 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகின்ற வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியில் நடைமுறைக்குவரும்.

**நிதியியல் கூற்றுக்கள் மீது ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கம்**

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் கூற்று 9இனைப் பிரயோகிப்பதனால் தோன்றுகின்ற நிதியியல் கூற்றுக்கள் மீது ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கத்தினை நிதியம் மதிப்பிட்டிருக்கிறது.

பின்வரும் புதிய அல்லது திருத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் 2018 சனவரி 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகின்ற வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் அவை நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படவில்லை.

*இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்திலிருந்தான வருமானம்*

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15, எப்பொழுது, எவ்வளவு வருமானத்தினை அங்கீகரிப்பது என்பதனைத் தீர்மானிப்பதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை ஏற்படுத்தியிருக்கிறது. இது "வருமானம்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் 18 மற்றும் "கட்டுமான ஒப்பந்தங்கள்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் 11 என்பனவற்றின் தற்போதுள்ள வருமான அங்கீகரிப்பு வழிகாட்டலுக்குப் பதிலீடாக விளங்கும்.

## ஊழியர் சேம நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 5. வட்டி வருமானம்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 | | | 2015 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| திறைசேரி முறிகள் மீதான வட்டி | 161,254,869 | - | 161,254,869 | 139,151,135 |
| திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 443,163 | - | 443,163 | 271,316 |
| இலங்கை ரூபாக் கடன்கள் மீதான வட்டி | - | - | - | 658,000 |
| கம்பனிப் படுகடன் பிணையங்கள் மீதான வட்டி - பட்டியலிடப்பட்டவை | 2,157,178 | - | 2,157,178 | 1,695,782 |
| கம்பனிப் படுகடன் பிணையங்கள் மீதான வட்டி - பட்டியலிடப்படாதவை | 601,194 | - | 601,194 | 426,997 |
| வர்த்தகப் பத்திரங்கள் மீதான வட்டி | - | - | - | 13,487 |
| நம்பிக்கை சான்றிதழிகள் மீதான வட்டி | 290,568 | - | 290,568 | 402,811 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு மீதான வட்டி | 738,445 | - | 738,445 | 435,543 |
| | **165,485,417** | **-** | **165,485,417** | **143,055,071** |

### 6. பங்கிலாப வருமானம்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 | | | 2015 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| பங்குரிமை மூலதன பிணையங்களிலிருந்தான பங்கிலாபம் - விலைக்குறிப்பீடு செய்யப்பட்டது | 2,103,787 | - | 2,103,787 | 2,360,802 |
| பங்குரிமை மூலதன பிணையங்களிலிருந்தான பங்கிலாபம் - விலைக்குறிப்பீடு செய்யப்படாதது | 2,028,722 | - | 2,028,722 | 1,014,205 |
| பட்டியலிடப்படாத முன்னுரிமை பங்குகளிலிருந்தான பங்கிலாபம் | 130,100 | - | 130,100 | 137,411 |
| | **4,262,609** | **-** | **4,262,609** | **3,512,418** |

### 7. நிதியியல் சொத்துக்கள் மீது பெறப்பட்ட மூலதன இலாபம்/ (இழப்பு)

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 | | | 2015 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| திறைசேரி முறிகளின் வணிகப்படுத்தல் மீதான இலாபம் - இலாபம் அல்லது இழப்பூடாகச் சந்தைப் பெறுமதி | - | - | - | 6,792 |
| திறைசேரி முறிகளின் வணிகப்படுத்தல் மீதான இலாபம் - விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துக்கள் | 13,811 | - | 13,811 | 13,019 |
| திறைசேரி முறிகளின் வணிகப்படுத்தல் மீதான இலாபம் - முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட சொத்துக்கள் | 598,028 | - | 598,028 | 1,151,631 |
| பங்குகளின் வணிகம் மீதான இழப்பு - இலாபம் அல்லது இழப்பூடாகச் சந்தைப் பெறுமதி | (9,248) | - | (9,248) | 25,838 |
| பங்குகளின் வணிகம் மீதான இலாபம் - விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துக்கள் | 461,374 | - | 461,374 | 527,030 |
| | **1,063,965** | **-** | **1,063,965** | **1,724,310** |

## ஊழியர் சேம நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 8. முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களின் மீதான பதிவழிப்பு இலாபம்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 | | | 2015 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| திறைசேரி முறிகளில் முதலீடுகள் | 28,170,934 | - | 28,170,934 | 26,590,868 |
| விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட படுகடன் பிணையங்கள் - பட்டியலிடப்பட்டவை | (41) | - | (41) | (41) |
| | **28,170,893** | **-** | **28,170,893** | **26,590,827** |

### 9. இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தைப் பெறுமதியில் நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (இழப்பு)

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 | | | 2015 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பங்குரிமைப் பிணையங்கள் | (257,733) | - | (257,733) | (237,435) |
| அரச பிணையங்கள் - திறைசேரி முறிகள் | (584,381) | - | (584,381) | (156,563) |
| | **(842,114)** | **-** | **(842,114)** | **(393,998)** |

### 10. நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 ரூ.'000 | 2015 ரூ.'000 |
|---|---|---|
| **10.1** குறிப்பீடு செய்யப்பட்ட பங்குரிமை மூலதனப் பிணையங்கள் | | |
| கொழும்பு டொக்கியாட் பிஎல்சி | 1,868,729 | - |
| ஹேலீஸ் எம்ஜிரி நிற்றிங் மில்ஸ் பிஎல்சி | 130,481 | |
| றகிகம வயம்ப சோல்ரன் பிஎல்சி | 64,375 | - |
| கார்சன்ஸ் கம்பபச் பிஎல்சி | 1,625,639 | - |
| புக்கித் டாறா பிஎல்சி | 1,508,810 | - |
| த பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 33,602 | 138,286 |
| சிலோன் கிரெய்ன் இலிவேற்றர்ஸ் பிஎல்சி | - | 515,475 |
| பிறவுண்ஸ் அன்ட கம்பனி பிஎல்சி | - | 1,100,270 |
| ஹலதாரி ஹோட்டல்ஸ் (லங்கா) பிஎல்சி | - | 561,344 |
| மக்குட் எனேர்ஜி பிஎல்சி | - | 12,856 |
| ஈடன் ஹோட்டல்ஸ் லங்கா பிஎல்சி | - | 128,410 |
| | **5,231,637** | **2,456,641** |
| **10.2** குறிப்பீடு செய்யப்படாத பங்குரிமை மூலதனப் பிணையங்கள் | | |
| சிறிலங்கன் எயார்லையின்ஸ் | - | 500,000 |
| | **-** | **500,000** |
| | **5,231,637** | **2,956,641** |

## ஊழியர் சேம நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 11. ஏனைய வருமானம்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 | | | 2015 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| மிகைக் கட்டணங்கள் | 156,361 | - | 156,361 | 184,380 |
| பிணையக் கடன் வழங்கல் மீதான கட்டண வருமானம் | - | - | - | 125,960 |
| ஏனைய வருமானம் | 815 | 5,087 | 5,902 | 12,970 |
| | **157,176** | **5,087** | **162,263** | **323,310** |

### 12. தொழிற்பாட்டுச் செலவினங்கள்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 | | | 2015 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| ஆளணிச் செலவுகள் | 477,974 | 383,175 | 861,149 | 748,499 |
| நிர்வாகச் செலவுகள் | 230,597 | 172,189 | 402,786 | 397,204 |
| ஏனைய செலவுகள் | 212,436 | 10,869 | 223,305 | 44,913 |
| | **921,007** | **566,233** | **1,487,240** | **1,190,616** |

### 13. வருமான வரிச் செலவினம்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 ரூ.'000 | 2015 ரூ.'000 |
|---|---|---|
| திறைசேரி முறிகளின் மீதான பதிவழிக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரி | 15,319,213 | 13,245,133 |
| தொகுதிக் கடன்கள், ரூபாக் கடன்கள் மற்றும் ஏனைய முதலீடுகளுக்கான ஏற்பாடுகள் | 337,978 | 349,563 |
| இவ்வாண்டுப் பகுதியில் செலுத்தப்பட்ட வருமான வரி | - | 132,706 |
| | **15,657,191** | **13,727,402** |

திருத்தம் செய்யப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நடைமுறை வரி கணிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிதியம் 10 சதவீத வருமான வரியினைச் செலுத்துவதற்குப் பொறுப்புடையதாகும்.

### 14. விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய இலாபம்/ (இழப்பு)

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2016 | | | 2015 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனத்தின் மீதான இழப்பு | (3,364,340) | - | (3,364,340) | (5,181,505) |
| திறைசேரி முறிகள் மீதான இழப்பு | (5,089,100) | - | (5,089,100) | (2,818,556) |
| திறைசேரி உண்டியல்கள் மீதான இலாபம் | 391,116 | - | 391,116 | 3,097 |
| தொகுதிக் கடன்கள் மீதான இழப்பு | (118,409) | - | (118,409) | (16,944) |
| | **(8,180,733)** | **-** | **(8,180,733)** | **(8,013,908)** |

## ஊழியர் சேம நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 15. சொத்து, பொறி மற்றும் சாதனம்

**15.1 மொத்தம் - 2016**

| | கணனிச் சாதனம் ரூ.'000 | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ரூ.'000 | அலுவலகச் சாதனம் ரூ.'000 | உந்து ஊர்திகள் ரூ.'000 | ஏனையவை ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
|---|---|---|---|---|---|---|
| கிரயம் | | | | | | |
| 2016 சனவரி 01இல் உள்ளவாறு | 497,431 | 91,388 | 351,196 | 100,396 | 3,551 | 1,043,962 |
| இவ்வாண்டுப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | 4,378 | 4,465 | 27,214 | - | 2,764 | 38,821 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | (5,303) | - | 5,303 | - | - | - |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **496,506** | **95,853** | **383,713** | **100,396** | **6,315** | **1,082,783** |
| ஒன்றுசேர்ந்த தேய்மானம் | | | | | | |
| 2016 சனவரி 01இல் உள்ளவாறு | 439,791 | 54,695 | 216,117 | 56,870 | 2,541 | 770,014 |
| இவ்வாண்டிற்கான விதிப்பு | 13,802 | 8,252 | 12,186 | 1,621 | 233 | 36,094 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றல் | - | - | - | - | - | - |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | (4,141) | - | 4,141 | - | - | - |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **449,452** | **62,947** | **232,444** | **58,491** | **2,774** | **806,108** |
| தேறிய ஏட்டுப் பெறுமதி | | | | | | |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **47,054** | **32,906** | **151,269** | **41,905** | **3,541** | **276,675** |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **57,640** | **36,693** | **135,079** | **43,526** | **1,010** | **273,948** |

**மொத்தம் - 2015**

| | கணனிச் சாதனம் ரூ.'000 | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ரூ.'000 | அலுவலகச் சாதனம் ரூ.'000 | உந்து ஊர்திகள் ரூ.'000 | ஏனையவை ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
|---|---|---|---|---|---|---|
| கிரயம் | | | | | | |
| 2015 சனவரி 01இல் உள்ளவாறு | 476,063 | 75,521 | 307,306 | 100,396 | 3,424 | 962,710 |
| இவ்வாண்டுப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | 21,368 | 15,867 | 43,890 | - | 127 | 81,252 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | - | - | - | - | - | - |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **497,431** | **91,388** | **351,196** | **100,396** | **3,551** | **1,043,962** |
| ஒன்றுசேர்ந்த தேய்மானம் | | | | | | |
| 2015 சனவரி 01இல் உள்ளவாறு | 398,638 | 47,946 | 212,079 | 55,434 | 2,415 | 716,512 |
| இவ்வாண்டிற்கான விதிப்பு | 41,153 | 6,749 | 4,038 | 1,436 | 126 | 53,502 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றல் | - | - | - | - | - | - |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | - | - | - | - | - | - |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **439,791** | **54,695** | **216,117** | **56,870** | **2,541** | **770,014** |
| தேறிய ஏட்டுப் பெறுமதி | | | | | | |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **57,640** | **36,693** | **135,079** | **43,526** | **1,010** | **273,948** |
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **77,425** | **27,575** | **95,227** | **44,962** | **1,009** | **246,198** |

**ஊழியர் சேம நிதியம்**
**நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

## சொத்து, பொறி மற்றும் சாதனம் தொடர்ச்சி............

**15.2** மொத்தம் 2016

| | கணனிச் சாதனம் | | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | | அலுவலகச் சாதனம் | | உந்து ஊர்திகள் | | ஏனையவை | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| கிரயம் | | | | | | | | | | | | | |
| 2016 சனவரி 01இல் உள்ளவாறு | 108,161 | 389,270 | 45,933 | 45,455 | 13,396 | 337,800 | - | 100,396 | 3,199 | 352 | 170,689 | 873,273 | 1,043,962 |
| இவ்வாண்டுப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | 168 | 4,210 | 79 | 4,386 | 3,048 | 24,166 | - | - | 2,764 | - | 6,059 | 32,762 | 38,821 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | - | (5,303) | - | - | - | 5,303 | - | - | - | - | - | - | - |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **108,329** | **388,177** | **46,012** | **49,841** | **16,444** | **367,269** | **-** | **100,396** | **5,963** | **352** | **176,748** | **906,035** | **1,082,783** |
| ஒன்றுசேர்ந்த தேய்மானம் | | | | | | | | | | | | | |
| 2016 சனவரி 01இல் உள்ளவாறு | 100,197 | 339,594 | 20,503 | 34,192 | 10,713 | 205,404 | - | 56,870 | 2,189 | 352 | 133,602 | 636,412 | 770,014 |
| இவ்வாண்டிற்கான விதிப்புக்கள் | 5,516 | 8,286 | 3,595 | 4,657 | 1,424 | 10,762 | - | 1,621 | 233 | - | 10,768 | 25,326 | 36,094 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | - | (4,141) | - | - | - | 4,141 | - | - | - | - | - | - | - |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **105,713** | **343,738** | **24,098** | **38,849** | **12,137** | **220,307** | **-** | **58,491** | **2,422** | **352** | **144,370** | **661,738** | **806,108** |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **2,616** | **44,438** | **21,914** | **10,992** | **4,307** | **146,962** | **-** | **41,905** | **3,541** | **-** | **32,378** | **244,297** | **276,675** |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **7,964** | **49,676** | **25,430** | **11,263** | **2,683** | **132,396** | **-** | **43,526** | **1,010** | **-** | **37,087** | **236,861** | **273,948** |

## ஊழியர் சேம நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### சொத்து, பொறி மற்றும் சாதனம் தொடர்ச்சி............

**15.2** மொத்தம் 2015

| | கணனிச் சாதனம் | | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | | அலுவலகச் சாதனம் | | உந்து ஊர்திகள் | | ஏனையவை | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| கிரயம் | | | | | | | | | | | | | |
| 2015 சனவரி 01இல் உள்ளவாறு | 102,003 | 374,061 | 42,492 | 33,029 | 11,715 | 295,591 | - | 100,396 | 3,072 | 352 | 159,281 | 803,429 | 962,710 |
| இவ்வாண்டுப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | 6,159 | 15,209 | 3,441 | 12,426 | 1,681 | 42,209 | - | - | 127 | - | 11,408 | 69,844 | 81,252 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **108,161** | **389,270** | **45,933** | **45,455** | **13,396** | **337,800** | **-** | **100,396** | **3,199** | **352** | **170,689** | **873,273** | **1,043,962** |
| ஒன்றுசேர்ந்த தேய்மானம் | | | | | | | | | | | | | |
| 2015 சனவரி 01இல் உள்ளவாறு | 85,699 | 312,939 | 17,175 | 30,771 | 9,308 | 202,771 | - | 55,434 | 2,063 | 352 | 114,245 | 602,267 | 716,512 |
| இவ்வாண்டிற்கான விதிப்புக்கள் | 14,498 | 26,655 | 3,328 | 3,421 | 1,405 | 2,633 | - | 1,436 | 126 | - | 19,357 | 34,145 | 53,502 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **100,197** | **339,594** | **20,503** | **34,192** | **10,713** | **205,404** | **-** | **56,870** | **2,189** | **352** | **133,602** | **636,412** | **770,014** |
| **2015 திசெம்பர் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **7,964** | **49,676** | **25,430** | **11,263** | **2,683** | **132,396** | **-** | **43,526** | **1,010** | **-** | **37,087** | **236,861** | **273,948** |
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **16,303** | **61,122** | **25,317** | **2,258** | **2,407** | **92,820** | **-** | **44,962** | **1,009** | **-** | **45,036** | **201,162** | **246,198** |

## ஊழியர் சேம நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 16. அருவச் சொத்துக்கள்

| கணனி மென்பொருள் | 2016 ரூ.'000 | 2015 ரூ.'000 |
|---|---|---|
| கிரயம் | | |
| சனவரி 01 இல் உள்ளவாறு | 32,796 | 32,748 |
| ஆண்டுக் காலப்பகுதிக்கான கொள்வனவுகள் | 765 | 48 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **33,561** | **32,796** |
| பதிவழிப்புக்கள் | | |
| சனவரி 01 இல் உள்ளவாறு | 31,932 | 28,263 |
| ஆண்டுக் காலப்பகுதிக்கான பதிவழிப்புக்கள் | 368 | 3,669 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **32,300** | **31,932** |
| தேறிய ஏட்டுப் பெறுமதி | | |
| சனவரி 01 இல் உள்ளவாறு | 864 | 4,485 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **1,261** | **864** |

## 17. நிதியியல் சொத்துக்கள் - இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தைப் பெறுமதி

| *திசெம்பர் 31இல் உள்ளவாறு* | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | கிரயம் ரூ.'000 | முகப்புப் பெறுமதி ரூ.'000 | கிரயம் ரூ.'000 | முகப்புப் பெறுமதி ரூ.'000 |
| **வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| பங்குரிமை மூலதனப் பிணையங்களில் முதலீடுகள் | | | | |
| குறிப்பீடு செய்யப்பட்ட பங்குரிமை மூலதனப் பிணையங்கள் (குறிப்பு 17.1) | 2,982,561 | 2,615,095 | 1,925,285 | 1,717,657 |
| | 2,982,561 | 2,615,095 | 1,925,285 | 1,717,657 |
| அரச பிணையங்களில் முதலீடுகள் | | | | |
| திறைசேரி முறிகள் (குறிப்பு 17.2) | 12,233,851 | 11,492,906 | 2,027,442 | 1,870,879 |
| | 12,233,851 | 11,492,906 | 2,027,442 | 1,870,879 |
| படுகடன் பிணையங்களில் முதலீடுகள் | | | | |
| கம்பனித் தொகுதிக் கடன்கள் (குறிப்பு 17.3) | 114,500 | 114,500 | 114,500 | 114,500 |
| | 114,500 | 114,500 | 114,500 | 114,500 |
| **வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **15,330,912** | **14,222,501** | **4,067,227** | **3,703,036** |
| **இலாபம் அல்லது இழப்பூடாகச் சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள்** | - | - | - | - |
| **இலாபம் அல்லது இழப்பூடாகச் சந்தைப் பெறுமதியில் மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **15,330,912** | **14,222,501** | **4,067,227** | **3,703,036** |

## ஊழியர் சேம நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 17.1 பங்குரிமை மூலதனப் பிணையங்களில் முதலீடுகள் - விலைக்குறிப்பீடு செய்யப்பட்டவை

| *திசெம்பர் 31இல் உள்ளவாறு* கம்பனியின் பெயர் | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | கிரயம் ரூ.'000 | சந்தைப் பெறுமதி ரூ.'000 | கிரயம் ரூ.'000 | சந்தைப் பெறுமதி ரூ.'000 |
| அக்ஸஸ் என்ஜினியறிங் பிஎல்சி | 102,915 | 116,433 | 206,473 | 213,404 |
| ஏசிஎல் கேபிள்ஸ் பிஎல்சி | 22,978 | 24,634 | 18,936 | 19,517 |
| ஏசிஎல் பிளாஸ்ரிக்ஸ் பிஎல்சி | 19,893 | 33,674 | 23,559 | 33,481 |
| எய்ட்கன்ஸ் ஸ்பென்ஸ் பிஎல்சி | 280,028 | 206,106 | 205,824 | 205,524 |
| முழு மொத்தம் | | 104,034 | 117,884 | 90,333 | 102,965 | 51,377 | 89,513 | 116,899 | 34,984 | 97,174 | 168,450 | 21,200 | 86,403 | 53,550 | 96,042 | 139,085 | 75,158 | 52,823 | 26,700 | 30,676 | 78,263 | 4,770 | 80,851 | 1,719,134 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } எல்ஈடப்/பீ/பீஎப்/எப்ஏ/2016

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2018 சனவரி 28

கௌரவ அமைச்சர்,

தொழிலாளர், தொழிற்சங்க ஒத்துழைப்பு மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு,

**ஊழியர் சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 6(3) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 6(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 6(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, ஊழியர் சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்த தொழிலாளர் திணைக்களத்திலும் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவிலும் ரூபா 229,358,373 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள். காணப்பட்ட போதிலும், அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நிதியத்தின் கற்பனைச் சொத்துக்கள் 2 வருடங்களில் காலக்கழிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அச்சொத்துக்கள் 4 வருடம் பூராகவும் காலக்கழிவு செய்யப்பட்டிருந்தன.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக அவற்றின் பயன்தரு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு காலரீதியாக பெறுமானத்தேய்வு செய்வத்குப் பதிலாக திணைக்களத்தின் 221-2-4-2003 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 வரை வாகன திருத்தங்களுக்காக செலவிடப்பட்ட மொத்த வருமானச் செலவினத்தில் 20 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வாகன பெறுமானத்தேய்வு அளவு ரூபா 1,620,832 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 04 வங்கிக் கணக்குகளுக்குரித்தாக 2009 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின்போது நாளது வரையறையாக்கப்படாத பண வைப்புக்கள் ரூபா 16,021,950 தொகையும் பெறுவனவு உறுதிச்சீட்டுக்கள் பற்றாக்குறை ரூபா 12,555,622 உள்ளடங்களாக ரூபா 517,935,339 ஆன கொடுக்கல் வாங்கல்களை சீராக்குவதற்கோ அல்லது தீர்வுசெய்வதற்கோ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் தொடர்ந்தும் வங்கி கணக்கிணக்க கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 2016 ஆம் ஆண்டிற்குரிய கணக்கீடு செய்யப்பட்ட கடப்பாடுகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 5,190,718 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,341,937 மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் அட்டுறு செலவினம் 2,848,781 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 728,984,200 கூட்டுத்தொகையான இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள், தளபாடப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், கணனி மற்றும் மென்பொருட்களுக்குரிய சமர்ப்பிக்கப்பட்ட மீதி பட்டோலையின் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 287,276,341 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கு விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | 2 வங்கிக் கணக்கு மீதி | 6,810,422 | i வங்கி இணக்கக் கூற்று<br>ii வங்கி சான்றிதழ்கள் |
| (ஆ) | பெறணேட்டிய மீதிகள் மெஹவர இல்லம் | 427,147,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (இ) | தொழில் ஆணையாளர் நாயகம் - கட்டுநிதி | 480,290,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஈ) | வாகனங்கள் | 100,395,770 | விரிவான பட்டோலைகள் |
| (உ) | திரண்ட தேய்வு – வாகனங்கள் | 58,490,743 | விரிவான பட்டோலைகள் |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | நிதியத்திற்குரிய வங்கிக் கணக்கிற்கு உரித்தாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் மற்றும் வங்கி மீதி |

| | | |
|---|---|---|
| | நிதிப்பிரமாணம் 395 (ஆ) மற்றும் (இ) | உறுதிப்படுத்தலுக்கு இடையே ரூபா 1,423,861,794 ஆன வேறுபாடு காணப்பட்டது. அம்மீதிகள் ஒப்பிடப்பட்டு 2016 சனவரி முதல் திசெம்பர் வரை வங்கிக் கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களின் ஊழிய உழைப்பு வருமானத்தின் அடிப்படையில் உழைக்கும் போது செலுத்தும் வரி கொடுப்பனவிற்குரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 17,571,467 தொகை நிதியத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உழைக்கும் போது செலுத்தும் வரிக் கொடுப்பனவு தொடர்பாக 2016 பெப்ரவரி 26 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் குழுக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2016 பாதீட்டின் அறிவுறுத்தல்கள் மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கைகளுக்கு இணங்கும் வகையில் முறையொன்றை சரியாகவும் நாயளதுவரையாக்குவதற்காகவும் நிதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி வேலைத்திட்டமொன்று தயாரிக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் 2017 யூன் இறுதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்தில் காணப்படும் ரூபா 176,748,000 ஆன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 175,926,965,000 ஆன தேறிய இலாபமொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 156,937,279,000 ஆக இருந்தது. அதன் பிரகாம், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் தேறிய இலாபத்தில் ரூபா 18,989,686,000 தொகையான அதிகரிப்பு தொடர்பில் வட்டி வருமானம் ரூபா 22,430,346,000 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டின் போது நிதி விளைவுகள் ரூபா 111,828,720,000 ஆன தேறிய இலாபமொன்றாக இருந்ததுடன், அது தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 175,926,965,000 ஆக இருந்து. ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் வருமான வரி என்பவற்றைக் கருத்தில் கொண்டதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 121,084,004,000 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 192,481,767,000 வரை அதிகரித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

தனியார் மற்றும் பகுதியளவான அரசாங்க சேவையின் சேவை புரியும் ஊழியர்களுக்கு ஓய்வூதிய நலன்களை வழங்குவதை முன்னுரிமையாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதியச்சட்டத்தின் கீழ் இந்நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் தனியார் துறையினதும் பகுதியளவான அரச துறையினதும் மொத்த ஊழியர்களாக அறிக்கையிடப்பட்டுள்ள 3,682,695 இல் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புள்ள செயற்பாட்டு அங்கத்தவர் எண்ணிக்கை 2,400,000 அதாவது 65 சதவீதமாகும். ஏனைய அங்கீகரிக்கப்பட்ட சேமலாப

நிதியத்தில் அங்கத்துவத்திலுள்ள ஊழியர் எண்ணிக்கை 11 சதவீத அளவாக இருந்தமையால் எஞ்சிய 24 சதவீதமான அளவு எந்தவித நிதியத்திற்கும் பங்களிப்பினை செய்திருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஊழியர் நம்பிக்கை நிதிய சபையின் செயற்பாட்டு அங்கத்தவர் எண்ணிக்கை மற்றும் பங்களிப்பு பணத்தை செலுத்தும் தொழில் கொள்வோர் முறையே 2,500,000 மற்றும் 77,842 என அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் ஊழியர் சேமலாப நிதியத்தின் அந்த எண்ணிக்கையில் முறையே 2,400,000 மற்றும் 73,973 ஆக இருந்தது. அது ஊழியர் நம்பிக்கை நிதிய சபையினை விட குறைந்த பெறுமதியொன்றை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் 100,000 அங்கத்தவர்களும் 3,869 தொழில் தருனர்களையும் பதிவுசெய்வதற்கு ஊழியர் சேமலாப நிதியம் தவறியிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிதியத்தின் மொத்த பெறுமதி ரூபா 1,841.5 மில்லியனாக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ஒப்பாக 11 சதவீதமான அதிகாரமொன்றாகும். எவ்வாறாயினும் அங்கத்தவர் நிதியம் தொடர்பாக பின்வரும் அவதானிக்கப்படுகின்றன.

(i) ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு கொடுப்பனவு செய்யாமையால் தொழில் தருனர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து கொடுப்பனவு செய்வதற்கு கட்டளை பெற்றுக்கொண்டு ரூபா 10,979 மில்லியனான தொகை 2016 திசெம்பா 31 ஆந் திகதி வரையில் அங்கத்தவர் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இம் மீதி 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் முறையே ரூபா 6,898 மில்லியன் மற்றும் ரூபா 8,142 மில்லியனாக காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் இக் கணக்கிற்கு ரூபா 8,322.5 மில்லியன் கிடைத்திருந்த போதிலும், அதில் ரூபா 5,485.5 மில்லியன் தீர்வு செய்யப்பட்டிருந்தமையால் எஞ்சிய தீர்வு செய்யாத பணம் இவ்வகையில் வருடாந்தம் இக் கணக்கிற்கு சேகரிக்கபட்டிருந்தது. இத்திரட்டிய மீதிக்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. 2013 பெப்ரவரி 06 ஆந் திகதிய பொதுக் கணக்குகள் கூட்டத்தின் பரிந்துரை 07(ii) இன் பிரகாரம் இப்பணத்தை தீர்வு செய்யும் செயற்பாட்டினை துரிதப்படுத்துவதற்கு முடியுமான கணனி மென்பொருள் ஒன்றை அறிமுகப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக பிரதான கணக்கிட்டு உத்தியோகத்தரால் குழுவிற்கு

தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், தீர்வு செய்யாத மீதி வருடாந்தம் அதிகரிக்கும் நிலைமையொன்று காணப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனரின் கருத்துரையின் பிரகாரம் 2015 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய விகிதாசார முறையின் கீழ் மாத்திரம் ரூபா 278 மில்லியன் 3.497 "சீ" அறிக்கை மூலம் அங்கத்தவர் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நிதியத்திற்குரிய கிடைக்கும் பங்களிப்புத் தொகை தீர்வு செய்யப்படும் வரை தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 240,214,000 தொகை அதில் சேர்ந்துள்ளதுடன் தீர்வு செய்யப்பட்டிருந்த மீதி ரூபா 107,753,000 ஆக இருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் தீர்க்க வேண்டிய மீதி ரூபா 356,422,000 ஆக இருந்தது. அவ்வாறு 2016 ஆம் ஆண்டின் இறுதியில் அங்கத்தவர்கள்ள கணக்கு செலவு வைக்கப்படாத கூடிய குறைந்த பங்களிப்புத் தொகை கணக்கில் பதிவாகியிருந்த பங்களிப்புத் தொகை ரூபா 1,538,465,000 ஆக இருந்தது. அதற்கான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இம் மீதிகள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்தும் அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டு தாமதமின்றி தீர்வு செய்யுமாறு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனரின் கருத்துரையின் பிரகாரம் தொழில் தருனர்களால் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு அனுப்பிவரும் வரை உறுப்பினர் கணக்குகளுக்கு அப்பணத்தை செலவு வைத்தல், காணப்படும் ஏற்பாடுகளின் கீழ் செய்ய முடியாது எனவும் 2016 ஆம் ஆண்டின் போது கூடிய குறைந்த பங்களிப்புத் தொகை கணக்கிலிருந்து உறுப்பினர் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 679,000,000 எனவும் அறிக்கையிட்டிருந்தார்.

(iii) நிதியத்தின் அங்கத்தவர்களால் நிதியத்தின் நலன்களை கோரும் போது உரிய நலன்களின் அளவு கணக்கிடப்பட்டிருந்த போதிலும், அந் நலன்கள்

தொழில் ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட்ட நலன்கள் மற்றும் உரித்துக் கோராத நலன்களாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 596,552,000 ஆன உறுப்பினர் நிதியத்தில் காணப்பட்டன. இம் மீதிகளின் காலப்பகுப்பாய்வினை சமர்ப்பிக்க தவறியிருந்தது. வருடாந்தம் இக்கணக்குகளில் தீர்வாகும் மீதிகளை விட கூடுதலான மீதியொன்று சேர்வதால் இவற்றை தாமதமின்றி தீர்வுசெய்யும் நடைமுறையொன்றை தயாரிப்பது தொடர்பில் நிதியத்தின் கவனம் செலுத்துதல் அத்தியவசிய விடயமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டத்தின 14 ஆம் பிரிவின் பிரகாரம் நாணயச் சபையால் நிதியத்தின் பணத்கை ஈடுபடுத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து ஆண்டொன்றிற்கு இரண்டரை சதவீதத்திற்கு குறையாத அளவிலான வட்டியொன்று உரிய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் ஒவ்வொரு அங்கத்தவர் தனிப்பட்ட கணக்கில் இருக்கும் அளவிற்கு செலவு வைக்கப்பட வேண்டும். 2016 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் அவ்வாறு செலுத்தப்படும் வட்டி சதவீதம் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை 13.75 சதவீதத்திலிருந்து 10.5 சதவீதம் வரை படிப்படியாக குறைவடைந்திருந்த போதிலும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் அது 10.5 சதவீதம் சமமான வட்டி சதவீதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது எவ்வாறாயினும் உறுப்பினர்ககளுக்கு 10.5 சதவீதமான வட்டி சதவீதமொன்றை செலுத்துவதற்காகவும் போதியளவு இலாபமொன்றை நிதியம் உழைக்காமையால் மீளாய்வாண்டின் போது இலாப சமப்படுத்தல் ஒதுக்கத்திலிருந்து ரூபா 250,000,000 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) ஒட்டுமொத்தமாக 2016 ஆம் ஆண்டில் முதலிட்டு வகையில் பிரதான மூலமான அரசின் பிணையங்களின் முதலீட்டிலிருந்து இவ்வறிக்யையின் 4.2.1(அ)ஆம் பந்தியில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக எதிர்வரும் ஆண்டுகளில் நீண்ட காலமாக நிதியத்தின் முதலீட்டு வருமானம் குறைவடையும் போக்கொன்று காணப்பட்டது. ஆதலால் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி நலன் முன்னைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட 10.5 சதவீத்தை விஞ்சிய வட்டி சதவீதமொன்று செலுத்தப்படக் கூடிய இயலுமையை பேணுதல் தொடர்பான ஆபத்தொன்று இல்லையென்பதை புறக்கணிக்க முடியாதுள்ளது.

4.2 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

4.2.1 திறைசேரி முறிகளில் முதலீடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் பிரதான முதலீட்டு மார்க்கமொன்றாக கருதப்படும் ஆபத்து குறைந்த திறைசேரி முறிகள் முதன்மைச் சந்தை முதலீடுகள் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது 50 சதவீதத்தினால் அசாதாரணமாக குறைவடைந்திருந்தது. அவ்வாறே நிதியம் இரண்டாம் தர சந்தை முதலீடுகளிலிருந்து 2016 மே மாதத்தின் பின்னர் முழுமையாக விலகியிருந்தது. ஆதலால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 318 மில்லியனான திறைசேரி முறைகளில் மொத்த முதலீடு 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையில் ரூபா 183 மில்லியன் வரை அதாவது 42 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | முதன்மைச் சந்தையில் முதலீடுகள் | | | இரண்டாம் தர சந்தையில் முதலீடுகள் | | | திறைசேரி முறிகளில் |
|---|---|---|---|---|---|---|---|
| | முதலாவது அரையாண்டு | இரண்டாவது அரையாண்டு | மொத்த முதலீடு | முதலாவது அரையாண்டு | இரண்டாவது அரையாண்டு | மொத்த முதலீடு | மொத்த முதலீடு |
| | (ரூபா.மி) | (ரூபா.மி) | (ரூபா.மி) | (ரூபா.மி) | (ரூபா.மி) | (ரூபா.மி) | (ரூபா.மி) |
| 2015 | 110 | 124 | 234 | 17 | 67 | 84 | 318 |
| 2016 | 57 | 60 | 117 | 66 | - | 66 | 183 |
| குறைவு | | | **117** | | | **18** | **135** |
| குறைவடையும் சதவீதம் | | | **50%** | | | **21.4%** | **42%** |

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனரின் கருத்துரையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது முதிர்ச்சியடைந்த முறிகளில் பெறுமதி குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையும் பெறுவனவுகளில் பாரிய குறைவொன்றும் பிணைமுதலீடு குறைவடைவதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்ததாக எனவும் அறிக்கையிட்டிருந்தார்.

(ஆ) 2016 மார்ச் 29 ஆந் திகதி நடைபெற்ற ரூபா 40,000 மில்லியன் முறிகள் விநியோகித்தின் போது நிதியத்தினால் முதன்மை சந்தைக்கு கூறுவிலை சமர்ப்பித்தல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சர்வதேச பிணையங்களை இனங்காணும் இலக்கம் (ISIN) | கூறுவிலை கோரப்பட்ட மொத்த அளவு (Amount Offered ) | விளைவு விகிதம் | கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்ட முழுப் பெறுமானம் | ஏற்றுக்கொள்ளப்பட்ட முழுப் பெறுமானம் (Amount accepted) | ஊழியர் சேமலாப நிதியம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்ட முழுப் பெறுமானம் (முகப்பு பெறுமதி) | ஏற்றுக்கொளளப்பட்ட முழுப் பெறுமானம் (முகப்பு பெறுமதி) | கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்ட சதவீதம் | |
| | | | | | | | கூறு விலை கோரப்பட்ட மொத்த அளவு | ஏற்றுக்கொள்ளப்பட்ட முழுப் பெறுமதியின் பிரகாரம் |
| | ரூபா மில்லியன் | % | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % | % |
| LKB00520E014 | 10,000 | - | 27,022 | 10,272 | - | - | - | - |
| LKB01025C157 | 10,000 | 13.35 | 36,915 | 21,475 | 1,000 | 1,000 | 10 | 4.66 |
| LKB01226F014 | 10,000 | 13.45 | 32,560 | 17,010 | 500 | 500 | 5 | 2.94 |
| LKB01530E152 | 10,000 | 13.65<br>13.70 | 45,925 | 28,975 | 1,000 | 1,000 | 10 | 3.45 |
| மொத்தம் | **40,000** | | **142,422** | **77,732** | **2,500** | **2,500** | **6.25** | **3.22** |

(i) மேற்குறித்த திறைசேரி முறிகள் வழங்கலின் போது இலங்கை மத்திய வங்கியால் கூறுவிலை கோரப்பட்ட மொத்த பெறுமதி (Amount Offered) மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த பிணை முறியங்களை கருத்திற் கொள்ளும் போது (Amount Accepted) நிதியத்தினால் கூறுவிலை சமர்ப்பித்தல் சதவீதம் முறையே 6.25 மற்றும் 3.22 சதவீதம் போன்ற மிகவும் குறைந்த பெறுமதியை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் மேற்குறித்த திறைசேரி வழங்களின் போது நிதியத்தின் பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ii) நிதிய முகாமைத்துவ பிரிவின் மத்திய அலுவலகத்தின் (Middle office) பரிந்துரையின் பிரகாரம் முறிகள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி அதாவது 2016 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட மொத்த தொகையான ரூபா 8,800 மில்லியனில் ரூபா 4,000 மில்லியனை மேற்குறித்த முறிகளை விநியோகத்திற்காக

பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான அதில் ரூபா 2,173 மில்லியன் மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்தமையால் நிதியம் அந்த பிணைமுறி விநியோகத்தின் போது உள்ளவாறாக முதலீடு செய்த பெறுமதி பரிந்துரைக்கப்பட்ட பணமீதியில் 50 சதவீதத்தை எடுத்திருந்தது.

(iii) 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி நிதியத்தின் நாளாந்த காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியால் கூறுவிலை கோரிய மொத்த பெறுமதியில் (ரூபா 40,000 மில்லியன்) 30 சதவீதமான பிணைமுறி அளவினை கொள்வனவு செய்வதற்கு கூட போதியளவு ரூபா 12,076 மில்லியனான மிகை பணம் நிதியத்திடம் காணப்பட்ட போதிலும், மேற்குறித்த ஏல விற்பனையின் போது திறைசேரி பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 2,173 மில்லியன் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் கூறுவிலை கோரப்பட்ட மொத்த பெறுமதியில் 5 சதவீதம் போன்ற குறைந்த சதவீதத்திற்காக மாத்திரம் நிதி ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விளைவு விகிதம் அல்லது 12 சதவீதத்திற்கு மேற்பட்ட வட்டி வீதத்தின் கீழ் முதற்தர சந்தையில் முதலீடு செய்திருந்தமையால் கூடுதலான நலனொன்றை நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் முகாமைத்துவத்தினால் இழக்கப்பட்டிருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனரின் கருத்துரையின் பிரகாரம் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியில் இருந்த ரூபா 12,076 மில்லியன் மிகைப் பணத்தில் நீண்டகால முதலீட்டிற்கு மாத்திரம் அல்லாது நிதியத்திற்கு பணத்தை சேகரிக்கும் வரை நலன்களை கொடுப்பனவு செய்தல், நிதிய நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்களை செய்தல், மீள்நிரப்பல் மற்றும் ஏனைய மாற்று முதலீடுகளுக்காக பயன்படுத்தக்கூடிய பண மதியாக இருந்ததுடன் அத்திகதியில் நிதியத்தினால் எதிர்வுகூறப்பட்ட முதலீடுசெய்யக்கூடிய தொகை அளவு ரூபா 8,800 மில்லியன் என குறிப்பிட்டிருந்தார்.

(iv) மேற்படி 4.2.1 (ஆ)(iii) பந்தியின் பிரகாரம் முதன்மை ஏல விற்பனையின் போது கூடுதலான விளைவு விகிதத்தின் கீழ் பிணை முறி கொள்வனவு செய்வதற்கு இயலுமை இருக்கையில் மேற்படி பிணை முறி விநியோகத்தின் போது குறைந்த பிணை முறி அளவு கொள்வனவு செய்யப்பட்டு எஞ்சிய 9,903 மில்லியன் 6.5 சதவீதத்திலிருந்து 8 சதவீதம் வரை குறைந்த விகிதத்தின் கீழ் மீள்

கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. நிதியம் வேறு ஐந்து முதன்மை கொள்வனவாளர்கள் ஊடாக இக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொண்டிருந்ததுடன் அதில் கூடிய சதவீதமான அதாவது 61 சதவீதம் சர்ச்சைக்குரியதாக இருந்த ஒரு தனியார் நிறுவனமொன்று ஊடாக மீள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மேலும் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியின் பின்னர் 2016 ஏப்ரல் 12 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் நாளாந்த பணப்பெறுகை இரண்டாம் தர சந்தை ஊடாக பிணைமுறி கொள்வனவு செய்தல் அல்லது ஏனைய இலாபகரமான முதலீட்டு வழிகளில் முதலீடு செய்தல் இடம் பெறாமல் குறைந்த வட்டி வீதத்தின் கீழ் ஒரு நாளில் முதிர்வடையும் மீள் கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அம் மீள் கொள்வனவு முதலீட்டிலும் கருத்தில் கொள்ளக் கூடிய சதவீதமொன்று (61 சதவீதத்திலிருந்து 94 இற்கு இடைப்பட்டதுடன்) சர்ச்சைக்குரிய மேற்குறித்த தனியார் நிறுவனத்திடமிருந்து மீள்கொள்வனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கூடுலான வட்டி வீதத்தில் முதன்மை சந்தையில் திறைசேரி முறிகள் கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருக்கையில் அதனைக் கருத்திற் கொள்ளாமல் சர்ச்சைக்குட்பட்ட தனியார் நிறுவனமொன்றிடமிருந்து மீள்கொள்வனவிற்காக நிதியம் பாரியளவில் ஈடுபடுத்தியதன் ஊடாக நிதியம் உறுப்பினர்களுக்கு கூடுதலான நலனொன்றை வழங்கக்கூடிய சந்தர்ப்பம் இல்லாமல் போய் அத்தனியார் கம்பனிக்கு வழங்கியமை தொடர்பாக நியமிக்கப்படட விசேட சனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு உட்பட்டிருந்தது.

(உ) நிதியத்தினால் மேற்கூறப்பட்ட திறைசேரி பிணைமுறி வழங்கலின் போது நிதியத்தின் பணத்தை மிகவும் குறைந்த அளவில் பயன்படுத்தி எஞ்சிய பணத்தை தொடர்ந்தும் மீள் கொள்வனவுகளில் முதலீடு செய்து 2016 ஏப்ரல் 12 முதல் ஏப்ரல் 25 வரையான காலப்பகுதியில் இரண்டாம் சந்தையிலிருந்து அப்பிணை முறிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. சர்வதேச சேமிப்புப் பத்திரங்களை இனங்காணும் இலக்கம் LKBO1530E152 என்ற பிணை முறியிலிருந்து முதனிலைச் சந்தையிலிருந்து ரூபா 6,373 மில்லியன் பெறுமதியான பிணை முறிகள் 12.42 சதவீதத்திற்கும் 12.5 இடைப்பட்ட விளைவு விகிதத்திற்கு அதாவது முதன்மைச் சந்தையில் அதற்காக 13.65 - 13.70 சதவீதத்திற்கிடையிலான விளைவு விகிதம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே சர்வதேச சேமிப்புப் பத்திரங்களை இனங்காணும் இலக்கம்

LKBO1226F014 என்ற பிணை முறிக்காக முதன்மைச் சந்தையில் 13.45 சதவீதமான விளைவு விகிதத்தைவிட குறைவான அதாவது 12.2 சதவீத விளைவு விகிதத்தில் ரூபா 93 மில்லியன் பெறுமதியான பிணைமுறிகள் இரண்டாம் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனரின் கருத்துரையின் பிரகாரம் 2016 ஏப்ரல் 12 முதல் ஏப்ரல் 25 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த திறைசேரி பிணை முறிகளை இரண்டாம் தர சந்தையிலிருந்து கொள்வனவு செய்வதற்காக நிதியத்தினால் ரூபா 8,050 மில்லியன் திறைசேரி பிணை முறிகள் இரண்டாம் தர சந்தையில் விற்பனை செய்யப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்தினால் திறைசேரி பிணைமுறி முதலாந்தர சந்தை ஏல விற்பனைகளில் பங்களிப்பு மற்றும் அதன் வெற்றி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 ஆம் ஆண்டில் அரச கடன் திணைக்களத்தினால் திறைசேரி பிணைமுறி ஏல விற்பனைக்காக விலை கோரப்பட்ட 62 வெற்றிகரமான சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அதில் 16 சந்தர்ப்பங்களில் நிதியத்தினால் கூறு விலை சமர்ப்பிப்பதற்கு முழுமையாக விலகியிருந்தது.

(ii) நிதியத்தினால் 19 சந்தர்ப்பங்களில் திறைசேரி பிணை முறிகளுக்கு விலை விபரங்களை சமர்ப்பிக்கும் போது முன்னைய தெரிந்து கொள்ளல் விளங்கிக்கொள்ளல் மற்றும் அனுபவம் அடிப்படையில் கூறுவிலை சமர்ப்பிக்காமல் தர்க்க ரீதியாக அல்லாத விளைவு வீதத்தின் கீழ் கூறுவிலை சமர்ப்பித்த காரணத்தினால் அக்கூறு விலைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

**(எ) இரண்டாம் தர சந்தை கொடுக்கல் வாங்கல்கள்**

2008 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை நிதியத்தினால் முதலாம் தர சந்தையிலிருந்தும் இரண்டாம் தர சந்தையிலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி முறிகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | முதலாம் தர சந்தையில் கொள்வனவு | | மொத்தம் | மொத்த தி.மு. கொள்வனவின் சதவீதமாக | இரண்டாம் தர சந்தையில் கொள்வனவு | மொத்த தி.மு. கொள்வனவின் சதவீதமாக | மொத்த தி.மு. கொள்வனவு |
|---|---|---|---|---|---|---|---|
| | நேர் கொள்வனவு | ஏலவிற்பனை மூலம் கொள்வனவு | | | | | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | (%) | ரூபா மில்லியன் | (%) | ரூபா மில்லியன் |
| 2008 | 196,634.0 | 5,350.0 | 201,984.0 | **95.20** | 10,184.5 | **4.80** | 212,168.5 |
| 2009 | 228,379.2 | 5,750.0 | 234,129.2 | **98.55** | 3,450.0 | **1.45** | 237,579.2 |
| 2010 | 190,642.5 | 18,766.7 | 209,409.2 | **97.92** | 4,450.0 | **2.08** | 213,859.2 |
| 2011 | 275,063.1 | 23,300.0 | 298,363.1 | **98.91** | 3,300.0 | **1.09** | 301,663.1 |
| 2012 | 320,769.2 | 45,831.8 | 366,601.0 | **99.88** | 450.0 | **0.12** | 367,051.0 |
| 2013 | 333,966.7 | 111,285.0 | 445,251.7 | **92.96** | 33,730.7 | **7.04** | 478,982.5 |
| 2014 | 223,572.0 | 12,000.0 | 235,572.0 | **84.28** | 43,933.1 | **15.72** | 279,505.1 |
| 2015 | 30,796.1 | 186,583.3 | 217,379.4 | **74.19** | 75,631.0 | **25.81** | 293,010.5 |
| 2016 | - | 123,836.0 | 123,836.0 | **65.50** | 65,150.0 | **34.50** | 188,986.0 |

மேலே குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்தினால் முதலாம் தர சந்தையில் திறைசேரி பிணைமுறிகளை கொள்வனவு செய்வதற்கு மாற்று வழியாக இரண்டாம் தர சந்தையூடாக வேறு முதலாம் தர வாடிக்கையாளர்களின் பிணைகளைக் கொள்வனவு செய்தல் 2013 ஆம் ஆண்டிலிருந்து அதிகரிக்கும் போக்கு காணப்பட்டது. அதாவது 2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை 5 சதவீதத்தை விட குறைந்தஇரண்டாம் தர சந்தையில் கொள்வனவு 2016 ஆம் ஆண்டின் போது 35 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

### 4.2.2 திறைசேரி முறிகளில் முதலீடு

அவ்வாறே ஊழியர் சேமலாப நிதியத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது திறைசேரி முறிகள் முதலாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்கு பங்குபற்றுவது மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் தொடர்பாடல் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் 47 திறைசேரி உண்டியல் ஏல விற்பனைகள் நடைபெற்று இருந்ததுடன் அதில் நிதியம் 07 ஏல விற்பனைகளில் பங்குபற்றியிருந்தது. 2016 மே 20 மற்றும் ஒக்தோபர் 17 ஆந் திகதிய நாணயச் சபையின் தீர்மானங்கள் முதலாம் தர சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கையில் மற்றும் செயற்பாடாக அக்கொடுக்கல் வாங்கல்களுக்கு சமுகமளிப்பதற்கு போதியளவான பணம் நிதியத்திடம் காணப்பட்ட போதும் நிதியத்தினால் திறைசேரி முறிகள் ஏல விற்பனைகளுக்கு குறைந்த அளவில் கூறுவிலைகள் சமர்ப்பித்தல் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

### 4.2.3 மத்திய வங்கியின் நாணயச் சபையின் பரிந்துரைகளை செயற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மே 20 ஆந் திகதிய மத்திய வங்கியின் நாணயச் சபையின் 15/2016 ஆம் இலக்க குறிப்பின் பரிந்துரைகளின் பிரகாரம் நிதியம் குறைந்த விளைவு விகிதமொன்று வழங்கும் இரண்டாம் தர சந்தை முதலீடுகளை குறைத்து நியாயமான விளைவொன்றினை வழங்கும் முதலாம் தர சந்தைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென கட்டளையொன்றை வழங்கியிருந்தது. நாணயச் சபையின் மேற்படி தீர்மானத்தின் பிரகாரம் இரண்டாம் தர சந்தை கொடுக்கல் வாங்கல்களை மட்டுப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி முறிகள் திறைசேரி முறிகள் மற்றும் மீள் கொள்வனவு உடன்படிக்கைக்கான இரண்டாம் தர சந்தை கொடுக்கல் வாங்கல்களிலிருந்து முழுமையாக விடுபடுவதற்கான அங்கீகாரம் அதற்கு 05 மாதங்களுக்கு பின்னரே வழங்கப்பட்டிருந்தது. அதாவது 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 31/2016 ஆம் இலக்க கூட்ட சபை குறிப்பின் மூலமாகும். எவ்வாறாயினும் அதற்கு முன்னர் 2016 மே 20 ஆந் திகதியின் பின்னர் நிதியத்தால் திறைசேரி பிணை முறிகள் இரண்டாம் தர கொடுக்கல் வாங்கல்களிலிருந்து முழுமையாக விலகியிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது.

(ஆ) 2016 மே 20 ஆந் திகதியின் பின்னர் திறைசேரி பிணைமுறிகள் இரண்டாம் தர சந்தையிலிருந்து முழுமையாக விடுபடும் நிலைமையில் நிதியத்தின் நாளாந்த பண மீதிகள் முதலீடு செய்யப்பட வேண்டிய மாற்று மூலதன வழிகள் தொடர்பாக சிக்கலான நிலைமையொன்று உருவாகியிருந்தது. 2016 மே 20 ஆந் திகதியின் பின்னர் நடைபெற்ற திறைசேரி பிணைமுறி முதன்மை சந்தையில் 9 ஏல விற்பனை சந்தர்ப்பங்களில் ரூபா.116,000 மில்லியனுக்காக கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் ரூபா 72,000 மில்லியன் சாதக நிலைமையை அடைந்திருந்தது. அவ்வாறே 2016 செப்தம்பர் 29 முதல் 2016 திசெம்பர் 27 வரையான காலப்பகுதியில் திறைசேரி முறிகள் ஏல விற்பனை மூலம் முதன்மை வாடிக்கையாளர்களுக்கு பிணை முறி வழங்கப்படாமை காரணமாக 2016 நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு திறைசேரி பிணை முறிகளில் முதலீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**4.2.4 கம்பனி பங்குகளில் முதலீடு**

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மற்றும் 2015 ஆண்டுகளின் போது முறையே ரூபா 79,874 மில்லியன் மற்றும் ரூபா 83,573 மில்லியன் தொகை கம்பனியின் பங்குகளில், நிதியம் முதலீடு செய்திருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **2016** | **2015** |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| (i) <u>பங்குலாப வருமானம்</u> | | |
| சாதாரண பங்குகள் - விலைகூறப்பட்ட | 2,104 | 2,361 |
| - விலை கூறப்படாத | 2,029 | 1,014 |
| முன்னுரிமைப் பங்குகள் - விலைகூறப்பட்ட | 130 | 137 |
| (ii) மூலதன இலாபம்/ (நட்டம்) | | |
| விற்பனை செய்ய வைக்கப்பட்டுள்ள சாதாரண பங்குகள் | 461 | 527 |
| சாதாரண பங்குகள் - நியாயமான பெறுமதிக்கு இலாபம் அல்லது நட்டம் | (9) | 26 |
| (iii) இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான | (258) | (237) |

| | | |
|---|---|---|
| பெறுமதிக்கு உள்ள நிதிச்சொத்துக்களில் உள்ள தேறிய வருமானம் - விலைகூறப்பட்ட பங்குகள் | | |
| (iv) சேத நட்டம் (விலைகூறப்பட்ட மற்றும் விலை கூறப்படாத) | (5,232) | (2,957) |
| | (775) | 871 |
| (v) விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்களில் நட்டம் | (3,364) | (5,181) |
| | **(4,139)** | **(4,310)** |
| | ===== | ===== |
| மொத்த பங்கு முதலீடு | 79,874 | 83,573 |

நிதியத்தின் பங்கு மூலதனத்திலிருந்து 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூா 4,139 மில்லியன் மற்றும் ரூபா 4,310 ஆன பாரிய நட்டமான்றை அடைந்திருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 79,874 மில்லியன் மற்றும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 83,573 மில்லியனான நிதியத்தின் மொத்த முதலீட்டிற்காக எவ்வித பங்களிப்பொன்று நிதியத்திற்கு கிடைக்காமல் இருந்ததுடன் நிதியத்தின் ஒதுக்கம் மேலும் குறைவடைவதற்கு பங்கு முதலீட்டிலிருந்து இடம்பெற்றுள்ள நட்டங்கள் அதிகளவில் தாக்கமளித்திருந்தது.

(ஆ) நிதியத்தினால் நீண்டகாலரீதியில் முதலீடு செய்த 06 கம்பனிகளின் பங்குச் சந்தை விலையை அதன் கிரயத்துடன் ஒப்பிடும் போது பொருண்மையான குறைவடைந்தமையினால் ரூபா 5,232 மில்லியன் தொகை இழப்பீட்டு நட்டமாக 2016 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது. அதில் 36 சதவீதம் கம்பனியொன்றின் பங்கு விலை வீழ்ச்சியடைந்தமையால் ஏற்பட்ட நட்டமாகும். அவ்வாறே கம்பனியொன்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீட்டின் நியாயமான பெறுமதி பொருண்மையாக அதாவது 56 சதவீதத்தினால் குறைவடைந்த போதிலும் இழப்பீட்டு நட்டத்தின் கீழ் அது இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 4.3 தாமதமான செயற்திட்டங்கள்

---------------------------------------------------------

நிதியம் ஏனைய இரண்டு அரசாங்க நிறுவனங்களுடன் இணைந்து ரூபா 12 பில்லியன் தொகையான மொத்தக் கிரய மதிப்பீடொன்றின் கீழ் புதிதாக நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட ஹொட்டல் தொகுதியொன்றில் முதலீட்டு நடவடிக்கையொன்றுடன் தொடர்புபட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதியின்

போது நிதியத்திலிருந்து ரூபா 5 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக 2013 யூன் 04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட பங்குதாரர்களின் உடன்படிக்கையின் பிரகாரம் இந்தக் கம்பனியின் பங்குகள் 2015 முடிவடைவதற்கு முன்னர் பங்குச் சந்தையில் நிரல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்தமையால் அதன் நடவடிக்கைகள் 2017 யூன் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்குரியதாக நிதியத்தின் ஒரு ஊழியர்களுக்கான கிரயம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2016 ஆம் ஆண்டு | | 2015 ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|
| | தொழில் திணைக்களம் | இலங்கை மத்திய வங்கி | தொழில் திணைக்களம் | இலங்கை மத்திய வங்கி |
| சம்பளக் கிரயம் (ரூபா 000) | 385,175 | 477,974 | 342,558 | 405,941 |
| உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | 281 | 184 | 244 | 154 |
| ஒரு ஊழியருக்கான கிரயம் (ரூபா 000) | 1,364 | 2,598 | 1,404 | 2,636 |
| இ.ம.வங்கியின் ஏ.சீ.பீ. அதிகரித்தல் % | | 90 | | 88 |

ஊழியர் சேமலாப நிதியத்தில் தொழில் திணைக்களத்தில் ஒரு ஊழியருக்கான கிரயத்தின் பிரகாரம் ஒப்பீடு செய்து பார்த்த போது இலங்கை மத்திய வங்கியின் ஒரு ஊழியரின் கிரயம் 2016 ஆம் ஆண்டின் போது 90 சதவீதத்தாலும், 2015 ஆம் ஆண்டின் போது 88 சதவீதத்தாலும் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்தது. அதற்கு பிரதானமாக தொழில் திணைக்களத்திற்கும் இலங்கை மத்திய வங்கியின் சம்பளத்திற்குமிடையே காணப்படுகின்ற முரண்பாடுகள் தாக்கமளித்திருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் தொழில் திணைக்களத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தில் 76 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அது நிறைவேற்றுத் தரத்தில் 18 இனையும், நிறைவேற்றுத்தரமல்லாத தரத்தில் 58 இனையும் கொண்டிருந்தன. சிரேஷ்ட பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை நிதியத்தைத் தீர்த்தல், சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தலும் தாமதமாகியிருந்த தொடர்பில் நேரடியாக தாக்கமளித்திருந்தமை புறக்கணிக்க முடியாதுள்ளது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்காய்வுக் குழு

நிதியத்திற்குரிய கணக்காய்வுக் குழுக் கூட்டம் தொழில் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களுக்கும் ஒன்றாக நடாத்தப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக தொழில் திணைக்களத்தின் கீழ் வேறொரு கணக்காய்வுக் குழுவொன்று காணப்பட்ட போதிலும், அந்த நிதியத்தின் நிதி நிர்வாக நடவடிக்கைகளைச் செய்கின்ற இலங்கை மத்திய வங்கியிலும் அதன் உள்ளகக் கணக்காய்வாளரின் பங்குபற்றலொன்று காணப்படவில்லை. ரூபா 1,811 பில்லியன் அளவிலான நிதியமொன்றுக்காக பிரத்தியேக கணக்காய்வுக் குழுவொன்று நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக இணைக்கப்பட்டிருந்த தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நடாத்தப்படும் தேவைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

அரச கணக்குகள் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தலின் தற்போதைய நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பரிந்துரை இலக்கம் | சிபாரிசும் தற்போதைய நிலையும் |
|---|---|
| 2014 ஆகஸ்ட் 19<br>இலக்கம் 07(03) | கம்பனியொன்றை கலைக்கும் போது அந்தக் கம்பனியிடமிருந்து அறவிடவேண்டிய ஊழியர் உரித்துக்கள் மற்றும் இழப்பீடுகளை அறவிடுவதற்கு முன்னுரிமை வழங்குவதற்காக காணப்படுகின்ற சட்டங்களைத் திருத்தம் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்ட |

| | |
|---|---|
| | போதும், உரிய நடவடிக்கைகளுக்கான சட்ட வரைவு வளவாளர்களின் அங்கீகாரம் பெறப்பட்டதாக குழுவிற்கு அறிவிக்கப்பட்ட போதும், திருத்தப்பட்ட அதிகாரச்சட்டம் 2017 ஆகஸ்ட் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2016 பெப்ரவரி 26 இலக்கம் 08 | ஊழியர் சேமலாப நிதியத்தின் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்காக உரிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து எதிர்வரும் 10 வருடங்களுக்கான முறையான திட்டமொன்றைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகள் 2017 ஆகஸ்ட் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. |
| 2016 பெப்ரவரி 26 இலக்கம் 09 | நிதியத்தின் தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்காக தொழில் திணைக்களமும் மத்திய வங்கியும் இணைந்து ஒரு கணனி நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான இயலுமை தொடர்பான அறிக்கையொன்றை 2016 மார்ச் 23 இற்கு முன்னர் செயற்குழுவிற்கு அனுப்புமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான அறிக்கையொன்று 2017 ஆகஸ்ட் இறுதிவரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற தொழில் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 08 மற்றும் உள்ளபடியான எண்ணிக்கை 06 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்திற்குரிய 57 பிரதேச அலுவலகங்கள் காணப்பட்டமை மற்றும்

மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களின் அளவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையின் அளவில் காணப்படவில்லை. திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வை பலப்படுத்த வேண்டுமென 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்தும் அரசாங்க கணக்காய்வு குழுக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் போதியளவான பதவியணியினரை நியமித்து கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் ஆகியோருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) | நிதியத்தின் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாதுள்ள பங்களிப்புப் பணம் அவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கும் நிறுத்தி வைக்கப்பட்ட நலன்களை உரிமையாளர்களுக்கு தாமதமின்றி கொடுப்பனவு செய்வதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | நிதியத்திற்காக புறம்பான கணக்காயவுக் குழுவொன்று நடாத்தப்படாமை |
| (ஆ) | முதலீட்டுக் கட்டுப்பாடு | | எப்போதும் நிதியத்திற்கும் அங்கத்தவர்களுக்கும் ஆகக்கூடிய நலன்கள் கிடைக்கும் வகையில் நிதி முதலீடு செய்யப்படாமை. |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு | | உள்ளகக் கணக்காய்விற்கு போதியளவான மற்றும் தகைமையான பதவியணியினர்கள் சேர்த்துக் கொள்ளப்படாமை மற்றும் சகல |

துறைகளையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி